DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோர்ட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1354
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday March 18, 2022

# கனடா உதயன் நிறுவனம் சென்னை மாநகரில் நடத்திய "பகிர்வோம்.. பாராட்டுவோம்" சந்திப்பு நிகழ்ச்சி



கடந்த சனிக்கிழமையன்று கனடா உதயன் நிறுவனம் சென்னை மாநகரில் நடத்திய "பகிர்வோம்.. பாராட்டுவோம்" சந்திப்பு வைபவம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. கனடா உதயன் சென்னைப் பிரதிநிதி பிரகாஸ் மற்றும் நண்பன் இணையத்தளம் மற்றும் நண்பன் விருதுகள் நிறுவனத்தின் சென்னைப் பிரதிநிதி அருண் கதாகரன் ஆகியோர் சென்னையில் அனைத்து ஏற்பாடுகளைக் கவனித்துச் செய்திருந்தனர்.

இந்த "பகிர்வோம்.. பாராட்டுவோம்.. நிகழ்வில் நண்பன் மற்றும் ரூபம் வானொலி ஆகியன இணைந்து செயற்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

*(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)*

# ஜனாதிபதி கோட்டாபாய உரையாற்றிய போது, தனது எதிர்ப்பை காட்ட வீட்டின் மின்சாரத்தை தடை செய்த குடும்பஸ்த்தர்



தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை காரணமாக கோட்டாபாய அரசாங்கத்தின் மீது மக்கள் மத்தியில் கடும்அதிருப்தி நிலை ஏற்பட்டுள்ளது எனவும் பொதுமக்கள். அரச ஊழியர்கள் மற்றும் தனியார் துறை ஊழியர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் கோட்டாபாய அரசாங்கத்திற்கு பகிரங்கமாகவே தங்கள் எதிர்ப்பைக் காட்டிவருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‘ மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் நேற்று உரையாற்றியிருந்தார்.

நாட்டில் சுழற்சி முறையில் மின்சார விநியோகம் நடைமுறைப்பட்டு வந்த நிலையில், நேற்முன்தினம் இரவு ஜனாதிபதி கோட்டாபாய உரையாற்றும் போது மின்சாரம் தடையின்றி விநியோகிக்கப்பட்டது.

எனினும் ஜனாதிபதி உரையாற்றிக் கொண்டிருக்கும் போது, தனது எதிர்ப்பை காட்டும் வகையில் வீட்டிலுள்ள மின்சாரத்தை ஒருவர் தடை செய்துள்ளார். இதன்மூலம் ஜனாதிபதியின் உரைக்கு தடை விதித்துள்ளார்.

தென்னிலங்கையில் நடந்த இந்த சம்பவம் சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது. அரசாங்கத்தின் மீது நாட்டு மக்களுக்கு உள்ள அதியுச்ச வெறுப்பின் வெளிப்பாடாக இதனை பார்க்க முடியும் என பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நாட்டு மக்களுக்காக நேற்று முன்தினம் உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபாய தற்போது நடைபெறும் பாதிப்புகளுக்கு தான் பொறுப்பு இல்லை என்றும், தன்மீது நம்பிக்கை வைத்தால் விரைவில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
SIVARAJAH
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ஸ்காபுரோவில் Taste of Madurai
உணவகத்தின் திறப்பு விழா SPECIAL
மதுரை கில்லிப் பரோட்டா — 2 $ 9.99 மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு 416-332-8000
2ம் பக்கம் உள்ள விளம்பரத்தைப் பார்க்கவும்

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
Direct Tamil Line
(416) 489-2000
Visit: www.GtaCredit.Com
North York, Scarborough & Brampton.

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
RE/MAX REALTRON BLUE FORCE
கவாஸ் . சோம சச்சிதானந்தன்

# LOOKING FOR YOUR Dream House?



Call SEYON CHANDRAKUMAR

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING



இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால்பதிக்கும்

## கனடா உதயனின் 'இலங்கைச் சிறப்பிதழ்'

நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, மே மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022, ஏப்ரல் மாதம் 22ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்புக்களை தபால் மூலமாகவோ அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.

சிறிய படைப்புக்களை
416 732 1608
என்னும் WHATSAPP
இலக்கத்திற்கும்
அனுப்பலாம்.

www.uthayannews.ca
UTHAYAN உதயன்

இலங்கைச் சிறப்பிதழில்
பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பி வைக்கப்பெறும்.




தபால் முகவரி:-
Managing Editor, Uthayan Publishers
4062. Ellesmere Road, Scarborough,
Ontario. CANADA. M1C 1J2
மின்னஞ்சல் முகவரி:- uthayannews@yahoo.com


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN: 416-894-6244

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

RAJAN: 416-464-2415

### வேலைக்கு ஆட்கள் தேவை

ஸ்காபுறோவில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றில் வேலைக்கு ஆட்கள் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு உடன் அழைக்கவும்

Jeya 647-669-2739

### Basement Rent

ஸ்காபுறோவில் Brimley & Finch சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் Walkout Basement வாடகைக்கு உள்ளது. 1 Bedroom 1 Parking ஆகியன உண்டு. ஏப்ரல் மாதம் 1ம் திகதி தொடக்கம் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு அழைக்க வேண்டியவர்:

பாலா: 647-449-7709

### CAR LOANS



Newcomers to Canada
Bankruptcy
Pandemic problems
Divorce
Limited credit/bruised credit
Collections
Not sure of your credit?

Applying for a vehicle loan online is one of the quickest and easiest ways to apply.



Our secure online application is easy to complete, just go to
gopal@driveautogroup.ca
Or call Gopal Pillai at:
(647) 763-0210

brimell

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce
Real Estate
- residential purchase, sale & refinance transactions
Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

SAROJINI SINIVASAN
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### Trainee Dental Assistant Wanted

Looking for a Trainee Dental Assistant.
Requirements:-
Science, Math, Computer Skill, Communication skill.
Team player, Fast learner.
Training will be given to the right Candidate.
Please forward resume to
cydentalcare@gmail.com

### Part-Time Medical Receptionist Wanted

Part-time Medical Receptionist wanted for a Medical Clinic in Scarborough., 15-20hrs/ week. Candidate must be fluent in English and Tamil. Must be proficient in computer skills. Duties include answering phone calls, preparing paperwork, scanning documents, etc. Wages Negotiable.
Please send resume to:
vahishan@gmail.com

### Basement for Rent

Newly renovated BASEMENT
4 ROOMS + 2 washroom
Pharmacy and Eglington (MAIN INTERSECTION)
Call 647-808-9022 / 416-302-9022
----------------------------------------
1 ROOM Private room
Basement available
( Warden and Lawrence)
647-808-9022

## உதயன் கதிரோட்டம்

# ஈழத் தமிழர்களின் அரசியல் பரப்பில் இன்று பரவலாகப் பேசப்படும் 13 வது அரசியலமைப்பு திருத்தம்

ஈழத் தமிழர்களின் அரசியல் பரப்பில் 13 வது அரசியலமைப்பு திருத்தம் குறித்து இன்று பரவலாகப் பேசப்படுகின்றது. குறிப்பாக ஆறு தமிழ்க் கட்சிகள் கூட்டாக இந்திய மத்திய அரசாங்கத்திடம் வைத்துள்ள கோரிக்கை குறித்தே இந்தக் கருத்தாடல்கள் இடம்பெற்றுவருகின்றன.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தனது பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிகளைத தொடர்ந்து தக்க வைப்பதற்கும் கடந்தகாலங்களைப் போன்று தொடர்சசியாக தமிழ் மக்களை ஏமாற்றவும் காலத்திற்கு காலம் ஒவ்வொரு பிரச்சனையை தங்கள் கைகளில் காவிக்கொண்டு முன்வருகின்றார்கள். தங்கள் பதவிகளை தக்க வைத்துக்கொண்டு அரசியல் இலாபங்களை அனுபவிக்க முடிவெடுத்துள்ள அவர்கள் எண்ணற்ற ஆண்டுகளாக பல எண்களில் பிரச்சனைகளை உருவாக்கி பதவிகளில் உள்ள அரசாங்கங்களுக்கு பிரச்சனைகளை தீர்ப்பவர்களாகவே செயற்பட்டு வருகின்றார்கள். தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதில் சம்பந்தர் போன்றவர்கள் எடுத்த முயற்சிகள் ஏதாவது எமக்கு ஞாபகத்திற்கு வருகின்றதா என்றால் அவ்வாறு ஒன்றும் இல்லை என்றே கூறலாம்.

சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளில் ஒருவரைக் கூட விடுதலை செய்ய முடியாத இந்த 'வாய் வீச்சு வீரர்கள்' தொடர்ச்சியாக பதவிகளை அலங்கரிப்பதற்கு அவர்களது 'தந்திரங்களும் தவறுகளும் தான் காரணமாக உள்ளன.

இதில் விசித்திரம் என்னவெனில் பிராந்தியசபையாக உருவெடுத்த தமிழர் விவகாரத்துக்கான தீர்வு தனிநாட்டுக் கோரிக்கையாக எழுச்சி பெற்று தன்னாட்சி அதிகாரசபையாகவும் இறுதியில் ஒஸ்லோ உடன்படிக்கையில் சமஷ்டி தீர்வு குறித்து பரிசீலிக்க தமிழர் தரப்புதயாரான நிலையில் இன்று 13வது திருத்தத்தை தமிழர் தரப்புகையில் எடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பதுதான்.

போர் மௌனிக்கப்பட்ட பின் தமிழ் மக்களை முழுமையாக தலைமையேற்று புறப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு உண்மையில் நோர்வே உட்பட இணைத் தலைமை நாடுகளை சமஷ்டி கோரிக்கையில் இருந்து மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வலியுறுத்தி இருக்கவேண்டும். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அதனைச் செய்யத் தவறியது மாத்திரமல்ல தீர்வுப் பொதி இன்றிவெறும் கையுடன் தென்னிலங்கை அரசியல்வாதிகளுடன் பேச்சுவார்த்தை மேசைக்குச் சென்றுவெறும் கையுடனே திரும்பியதுதான் வரலாறு.

இந்த ஒரு பின்னணியில் இன்று 13 வது திருத்தத்திற்காக இந்தியாவிடம் மண்டியிட்டு நிற்கவேண்டியநிலையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு குறிப்பாக தமிழரசுக் கட்சியின் சுய நலஅரசியல் இட்டுச் சென்றுள்ளது.

13 வதுதிருத்தம் குறித்துபேசப்படுகின்ற போதும் இந்தியாவை நேக்கிய ஆறு கட்சிகளின் கோரிக்கை கடிதம் 13 வது திருத்தத்துக்காப்பாலும் விரிவாக்கம் பெற்றுநிற்பதாக கூறப்படுகின்றது. உண்மையில் தமிழர் தரப்பில் 6 கட்சிகள் இணைந்து ஒரு கோரிக்கையை வைத்திருப்பது ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளைப் பொறுத்தவரையில் மூலோபாய முக்கியத்துவமுடையது என்பதே அரசியல் விமர்சகர்களின் கருத்தாக உள்ளது. எவ்வாறாயினும் இந்திய அரசும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இணைந்து பேசும் எந்த விடயமும் தமிழர்களுக்கு நன்மை பயக்காது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# முல்லைத்தீவில் காணாமற் போன மாணவிகள் கே. பத்மநாதன் நடத்திவரும் காப்பகத்தில் உள்ளவர்களா?

தற்போது அரசாங்கத்தின் தயவில் வாழ்ந்து வரும் கே.பி. என்ற குமரன் பத்மநாதன் நடத்தி வரும் சிறுவர் இல்லத்தில் இரண்டு சிறுமிகள் அலரி விதையை சாப்பிட்டுள்ளதாக கொழும்பில் உள்ள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

13 மற்றும் 14 வயதான இந்த சிறுமிகள் சம்பம் நடைபெற்ற தினத்தில், சிறுவர் இல்லத்தில் பெண் நிர்வாகியால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து சிறுமிகள் பாடசாலைக்கு சென்று அலரி விதைகளை சாப்பிட்டுள்ளதாக கூறப்படுகிறது. சிறுவர் இல்லத்தின் தமக்கு நடக்கும் கொடுமைகளை சிறுமிகள் தமது நண்பிகளிடம் கூறியுள்ளதுடன் முல்லைத்தீவு பொலிஸார் ஊடாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறுவர் இல்லத்தின் பெண் நிர்வாகி, மிக கொடூரமாக தாக்குவதாகவும் அடிக்கடி சிறார்களை சித்திரவதை செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை தாங்கிக்கொள்ள முடியாத காரணத்தினால், ஒரு வாரத்திற்கு முன்னர், 5 சிறுமிகள் சிறுவர் இல்லத்தில் இருந்து தப்பியோடியுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இந்த சிறுவர் இல்லத்தில் போர் காரணமாக பெற்றோர் மற்றும் உறவினர்களை இழந்த பிள்ளைகள் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கி போராட்டத்தையும் ஏக்கங்களையும் திசை திருப்ப அரசாங்கம் முயற்சிக்கின்றது

### மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா



இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது அரசினால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குவதாக அரசு தெரிவித்துள்ள கருத்தை வன்மையாக கண்டிப்பதோடு, 12 வருடங்களாக நாங்கள் நஷ்டஈட்டை பெற்றுக் கொள்ள போராடவில்லை என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார். மன்னாரில் வியாழக்கிழமை (17) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் அன்று முதல் இன்று வரை கூறிக்கொண்டு வருகிறோம் எமக்கு நஷ்டஈடு தேவை இல்லை என்று. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகள் குறித்து எங்களுக்கு நீதி தான் தேவை. அரசாங்கம் தரும் நிதி தேவை இல்லை. இவ்வாறான சலுகைகளை தந்து தாய்மார்களின் போராட்டத்தையும் ஏக்கங்களையும் திசை திருப்ப இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது.

எமது உறவுகளின் உயிர் அரசுக்கு ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியாக இருக்கலாம். ஏன் என்றால் அவர்கள் தான் எம் உறவுகளை பிடித்துக் கொண்டு சென்று சித்திரவதை செய்துள்ளனர். எங்களினால் எமது உறவுகளை விலை மதிக்க முடியாது.எங்கள் உயிர் எமது பிள்ளைகள்.

நாங்கள் பிச்சை எடுத்தாவது ஒரு லட்சம் இல்லை பல லட்சத்தை எமது உறவுகளுக்காக தருகின்றோம். இந்த அரசாங்கம் சிந்தித்து செயல்பட வேண்டும்.

நாட்டில் இன்று எத்தனையோ பிரச்சினைகள் தலை தூக்கி உள்ளது. ஒரு நேர உணவு உண்பதற்கு உணவு பொருட்கள் தட்டுப்பாடு, டீசல் பெட்ரோல் உட்பட எரிபொருள் தட்டுப்பாடு. ஒரு இறாத்தல் பாணின் விலை 130 ரூபாயாக உயர்ந்துள்ளது. இந்த மக்கள் இலங்கையில் வாழ்வதா? அல்லது சாவதா என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த நேரத்தில் அரசால் எவ்வாறு எமக்கு ஒரு லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க முடியும்?

சர்வதேச ரீதியில் மீண்டும் மீண்டும் கடன்களை பெறுவதற்காகவும் ஜெனிவாவில் நடை பெறும் மனித உரிமை சார்ந்த இலங்கை விடயங்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் அரசாங்கம் கபட நாடகம் ஆடுகிறது. அதற்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் ஒருபோதும் துணை போக மாட்டோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கு இருக்கிறார்கள்? என்ற உண்மையை மட்டும் எம்மிடம் கூறுங்கள். அரசாங்கத்தின் கபடத்தனத்தை இனி மேலும் எந்த ஒரு தாய்மாரும் நம்ப போவதில்லை.

நீங்கள் எமக்கு தருவதாக கூறிய ஒரு லட்சம் ரூபாய் பணத்தை வைத்து தற்போது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் உணவு தட்டுப்பாடு களையும் எரிபொருள் தட்டுப்பாடு களையும் நிவர்த்தி செய்து இலங்கையில் மக்கள் பஞ்சம், பசி பட்டினி, இல்லாமல் வாழ்வதற்கு உரிய வழிமுறைகளை செய்து கொடுங்கள்.என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**

# மன்னாரில் நெல் காயப்போடும் தளங்கள் இல்லாததால் வீதிகளைப் பயன்படுத்தும் அவல நிலையில் விவசாயிகள்

மன்னார் மாவட்டத்தில் பாரிய சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய செய்கையினை தொடர்ந்து அறுவடை செய்கின்ற நெல்லை காய போடுவதற்கான தளங்கள் இல்லாததால் விவசாயிகள் பிரதான வீதிகளை பயன்படுத்தும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் மற்றும் முசலிப் பிரதேசங்களில் இந்த நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது.





விவசாயம் செய்யும் வயல் நிலங்களுக்கு அருகில் பொதுவான தளங்கள் அமைத்துக் கொடுத்தால் பல விவசாயிகள் பலன் பெறுவார்கள். நெல் அறுவடை முடிந்தவுடன் உழவு இயந்திரங்களில் நெல்களை ஏற்றிக் கொண்டு பல கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பிரதான தார் வீதிகளுக்கு வரவேண்டியுள்ளது.



இதனால் செலவுகள் பல மடங்கு அதிகரிக்கிறது. அதில் உழவு இயந்திர வசதி இல்லாதவர்கள் நிலை பரிதாபத்துக்குரியது. பல நூறு ஏக்கர் வயல் நிலங்களை உள்ளடக்கி பொதுவான தளங்களை அமைத்துக் கொடுப்பது விவசாயத்திற்கும் விவசாயிகளுக்கும் மிகவும் பயன்பெரும்.

நானாட்டான் பிரதேசத்தில் உமநகரி கீழ்ப் பகுதியில் சிறுவெளி பிரதேசங்களிலும் மேட்டு நிலங்கள் காணப்படுகிறது. அவ்வாறான மேட்டு நிலங்களை அடையாளம் கண்டு நெல் காயப்போடும் தளங்களை அமைப்பதற்கு விவசாய அடைப்புக்கள் முன்வர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

மேலும் இவ்வாறு வீதிகளில் நெல் காயப் போடுவதால் போக்குவரத்திற்கு இடையூறுகள் ஏற்படுவதோடு விபத்துக்கள் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளதாக மன்னார் மாவட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**- மன்னார் நிருபர்**

கனடிய செய்திகள்
Canadian News

# ஸ்கார்பரோநகரில் அமையவுள்ள முதலாவது மருத்துவ பீடம்

ஸ்கார்பரோவில் அமையவுள்ள முதல் மருத்துவப் பீடம் மருத்துவர் ஆக வேண்டும் என்ற பல மாணவர்களின் கனவை நனவாக்கவுள்ளது.

ஸ்கார்பரோவில் முதல் மருத்துவப் பீடம் அமையவுள்ளதை அறிவிப்பதில்



பெருமிதம் கொள்கிறேன் என எமது மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் விஜேய் தணிகாசலம் அறிவித்துள்ளார்.

ஒன்றாரியோ அரசாங்கம், டொராண்டோ ஸ்கார்பரோவில் மருத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த ஆரோக்கியத்திற்கான புதிய பல்கலைக்கழகம் அமையவுள்ளதை அறிவித்துள்ளது. அங்கு 30 இளங்கலை இடங்களையும் 45 முதுகலை நிலைகளையும் கொண்ட மருத்துவ பீடம் எமக்காக நிறுவப்பட உள்ளது என்றும் விஜேய் தணிகாசலம் அறிவித்துள்ளார்.


ஒன்டாரியோவில் மருத்துவப் பள்ளிக் கல்வியை கணிசமாக விரிவுபடுத்துகிறோம், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 295 முதுகலை நிலைகளையும் 160 இளங்கலை இடங்களையும் சேர்க்கிறோம். 10 ஆண்டுகளில் இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவக் கல்வியின் மிகப்பெரிய விரிவாக்கம் இதுவாகும்.

இந்த மருத்துவ பீடம் தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது கவலைகள் இருந்தால், உங்களுக்கு உதவ எனது அலுவலகம் மகிழ்ச்சியாக இருக்கும். நீங்கள் எனது அலுவலகத்தை vijay.thanigasalam@pc.ola.org என்ற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது (416) 283-8448 என்ற எண்ணில் தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் அறிவித்துள்ளார்.




## Scarborough-Agincourt Long Term Care Centres Increase Staffing in LTC will lead to More Direct Care for Residents - $5,372,376 Funding to Hire More Staff

# Scarborough-Agincourt தொகுதியில் நீண்ட கால பராமரிப்புக்கான சேவை நிலையங்களில் பணியாளர்களை அதிகரிக்க $5,372,376 நிதி ஒதுக்கீடு




Scarborough-Agincourt தொகுதியில் நீண்ட கால பராமரிப்புக்கான சேவை நிலையங்களில் பணியாளர்களை அதிகரிப்பது குடியிருப்பாளர்களுக்கான நேரடி கவனிப்புக்கு வழிவகுக்கும் எனவும் இந்த வகையில் கூடுதல் பணியாளர்களை நியமிக்க $5,372,376 நிதி ஒதுக்கீடுகளை ஒன்றாரியோ மாகாண Scarborough-Agincourt தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நீண்ட கால பராமரிப்பை சரிசெய்வதற்கான எங்கள் அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஒன்ராறியோ அரசாங்கம் இந்த ஆண்டு 673 மில்லியன் டாலர்களை மாகாணம் முழுவதும் உள்ள நீண்ட கால பராமரிப்பு இல்லங்களுக்கு ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க, நேரடி கவனிப்புக்கு வழிவகுக்கும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

Scarborough-Agincourt இல் உள்ள நீண்ட கால பராமரிப்பு இல்லங்களுக்கான $5,372,376 இதில் அடங்கும். 2024-25 ஆம் ஆண்டிற்குள் நீண்டகால பராமரிப்பு குடியிருப்பாளர்கள் ஒரு நாளைக்கு சராசரியாக நான்கு மணிநேர நேரடி கவனிப்பைப் பெறுவதை உறுதி செய்வதற்கான மாகாணத்தின் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக இது உள்ளது.





இந்த நிதி ஒதுக்கீடுகள் குடியிருப்பாளர்களுக்கான கவனிப்பை அதிகரிக்கும் என்றும் அரிஸ் பாபிகியன் தெரிவித்துள்ளார்.

நீண்ட கால பராமரிப்பு மையம் இந்த ஆண்டு கூடுதல் பணியாளர்களுக்காக $1,395,420 வரையில் குடியிருப்பாளர்களுக்கான நேரடி கவனிப்பு நேரத்தை அதிகரிக்கச் செய்யும்.

டொராண்டோவில் உள்ள ஷெப்பர்ட் லாட்ஜ், குடியிருப்பாளர்களுக்கான நேரடி கவனிப்பு நேரத்தை அதிகரிக்க இந்த ஆண்டு மேலதிக பணியாளர்களை நியமிக்க $2,197,788 வரை பெறவுள்ளது.

ஸ்கார்பரோவில் உள்ள டெண்டர்கேர் நர்சிங் ஹோம்ஸ் லிமிடெட், குடியிருப்பாளர்களுக்கான நேரடி கவனிப்பு நேரத்தை அதிகரிக்க இந்த ஆண்டு மேலதிக பணியாளர்களை நியமிக்க $1,779,168 வரை பெறும்.

இந்த நிதியுதவியானது எங்கள் சமூகத்தில் உள்ள வீடுகளை அதிக பணியாளர்களை பணியமர்த்தவும் தக்கவைக்கவும் அனுமதிக்கும், இதனால் அவர்கள் ஒவ்வொரு நாளும் குடியிருப்பாளர்களுக்கு அதிக கவனிப்பை வழங்க முடியும். நீண்டகால பராமரிப்பில் வாழ்பவர்கள் தங்களுக்குத் தேவையான மற்றும் தகுதியான உயர்தர பராமரிப்பைப் பெறுவதை உறுதி செய்வதற்காக, அடுத்த நான்கு ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான புதிய ஊழியர்களை பணியமர்த்தும் எங்கள் அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு பகுதியாக இது உள்ளது.

இவ்வாறு மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் தெரிவித்துள்ளார்.

INCOME TAX
BRAMPTON
துர்க்கா மார்க்கட்
Side Entrance
In person or online with e-signature
UBER/LYFT/Rental/Business welcome
Personal Tax -No slip charge $30.00
Pension Welfare Student $20.00
Trucker's Special
$395.00 All included
Corporate Tax from $100.00
Bookkeeping, Accounting & Payroll Services
416-400-1053
Call first & avoid waiting Ntax 24 years experience
Ntax Accounting & Financial Solutions Inc.

# கனடா உதயன் நிறுவனம் சென்னை மாநகரில் நடத்திய "பகிர்வோம்.. பாராட்டுவோம்" சந்திப்பு நிகழ்ச்சி



கடந்த சனிக்கிழமையன்று கனடா உதயன் நிறுவ-னம் சென்னை மாநகரில் நடத்திய "பகிர்வோம்.. பாராட்டுவோம்" சந்திப்பு வைபவம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. கனடா உதயன் சென்னைப் பிரதிநிதி பிரகாஸ் மற்றும் நண்பன் இணையத்தளம் மற்றும் நண்பன் விருதுகள் நிறுவனத்தின் சென்னைப் பிரதிநிதி அருண் கதாகரன் ஆகியோர் சென்னையில் அனைத்து ஏற்பாடுகளைக் கவனித்துச் செய்திருந்தனர்.

இந்த "பகிர்வோம்.. பாராட்டுவோம்.. நிகழ்வில் நண்பன் மற்றும் ரூபம் வானொலி ஆகியன இணைந்து செயற்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. "ரூபம் வானொலி" சார்பில் கனடாவிலிருந்து திரு சங்கர் சிவநாதன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக தமிழ்நாடு தகவல் ஆணையர் திரு பிர-தாப் குமார், கவிஞர் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன், சென்னை மதுரா ட்ரவல்ஸ் நிறுவன அதிபர் வி. கே. ரி பாலன் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். கருத்துரைகளை வழங்க திருவாளர்கள் நந்தவனம் சந்திரசேகரன். "தமிழ்ப்பணி" ஆசிரியர் வா. மு. சே. திருவள்ளுவர். மற்றும் பேராசிரியர் சங்கரநாராயணன் ஆகி-யோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

கனடா உதயன் தமிழ்நாட்டுச் செய்தியாளர்களாகப் பணியாற்றும் திருவாளர்கள் சிவா ராமகிருஸ்ணன். சேக் மைடின் மற்றும் திருநெவேலி மணி மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்கள் எழுத்தாளர்கள் என பலரும் அநத "பகிர்வோம்.. பாராட்டுவோம்" சந்திப்பு வைபவத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு ஆர். என். லோகேந்திரலிங்கம் மற்றும் திருமதி பத்மா லோகேந்திலிங்கம் இருவருமாகசசேர்ந்து அன்பளிப்புப் பொதிகளையும் கனடா பாராளுமன்றம் சார்பான பாராட்டுப் பத்திரங்களையும் சான்றிதழ்களையும் வெற்றியாளர்களுக்கு வழங்கினார்கள்.

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் உதயன் நண்பர்கள் பலர் கலந்து கொண்டனர். அவர்களுக்கும் அன்பளிப்புப் பொதிகள் வழங்கப்பெற்றன.

கவிஞர் தியாரு மற்றும் தமிழரசி அண்ணாமலை ஆகியோர் திரு ஆர். என். லோகேந்திரலிங்கத்திற்கு தமது நூல்களை அன்பளிப்பாக வழங்கினர். இறுதியில் இராப்போசன விருந்தோடு "பகிர்வோம்.. பாராட்டுவோம்" சந்திப்பு வைபவம் இனிதே நிறைவுற்றது. இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும்.











# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இந்தியா செய்திகள்
India News

# கணினியில் தீ பிடித்ததால் மூச்சுத்திணறி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் பரிதாப பலி



கோவை உருமாண்டம்பாளையம் ஜோஸ் கார்டன் பகுதியில் வசித்து வருபவர் விஜயலட்சுமி. இவருக்கு அர்ச்சனா மற்றும் அஞ்சலி என இரு மகள்கள் உள்ளனர். இவரது கணவர் ஜோதிலிங்கம் கடந்த 2 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். ஒரு மகள் ஐ.டி கம்பெனியிலும் மற்றொருவர் பைனான்ஸ் தொழிலும் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், இன்று காலை அவர்களது வீட்டில் இருந்து புகை வருவதைப் பார்த்து அக்கம்பக்கத்தினர் தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். தகவல் அறிந்து அங்கு வந்த கவுண்டம்பாளையம் வடக்கு தீயணைப்பு துறையினர் வந்து கதவை உடைத்து, எரிந்து கொண்டிருந்த தீயை அணைத்தனர். உள்ளே சென்று பார்த்தபோது சமையல் அறையில் ஒரு பெண்ணும் அவரது அம்மாவும், படுக்கை அறையில் இன்னொரு பெண்ணும் இறந்து கிடந்துள்ளனர். இதுகுறித்து தீயணைப்புத்துறையினர் விசாரணையில், வீட்டின் ஹாலில் இருந்த யு.எஸ்.பி-ல் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக புகை ஏற்பட்டுள்ளது. இதை அணைக்க அஞ்சலி மற்றும் அவரது அம்மா ஆகியோர் முயற்சித்துள்ளனர். ஆனால் அதற்குள் புகையால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு சமையல் அறையில் இருந்த அஞ்சலி மற்றும் அவரது அம்மா ஆகியோர் உயிரிழந்துள்ளனர். அர்ச்சனா படுக்கை அறையில் தூங்கிக் கொண்டிருந்த நிலையில், மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார் என தெரியவந்துள்ளது. இத்தகவல் அறிந்து அங்கு வந்த பெரியநாயக்கன்பாளையம் துணை காவல் கண்காணிப்பாளர் ராஜபாண்டியன், துடியலூர் காவல் ஆய்வாளர் ஞானசேகரன் உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு, தொடர்ந்து தடய அறிவியல் துறையினரை வரவழைக்கப்பட்டு ஆய்வு செய்தனர்.

இவ்விபத்தில், அவர்கள் வீட்டில் வளர்த்து வந்த நாயும் மூச்சுத்திணறல் ஏற்பட்டு பலியாகியுள்ளது. தீ விபத்தால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் பலியான சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



# நீட் விலக்கு மசோதா தொடர்பாக ஆளுநர் அளித்த உறுதி — முதல்வர் ஸ்டாலின் அறிக்கை

மருத்துவ படிப்பில் சேர்வதற்கு மாணவர்கள் நீட் எனும் நுழைவுத் தேர்வை ஆண்டுதோறும் எழுதுகின்றனர். இதற்கு தமிழகத்தில் இருந்து கடும் எதிர்ப்பு உள்ளது. கிராமப்புற மாணவர்கள் தேர்ச்சி பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. ஏராளமான மாணவர்கள் நீட் தேர்வு அச்சம் காரணமாக தற்கொலை செய்து கொள்ளும் சோகமும் கடந்த சில ஆண்டுகளாக தொடர்கிறது. இந்த நிலையில், கடந்த ஆண்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு பதவிக்கு வந்ததும் சட்டசபையில் நீட் தேர்விற்கு எதிராக மசோதா நிறைவேற்றி தமிழக ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த மசோதாவின் மீது விளக்கம் கேட்டு ஆளுநர் நீண்ட நாட்களுக்கு பிறகு தமிழக அரசிற்கு திருப்பி அனுப்பிவைத்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த தமிழக அரசு அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி ஆலோசனை நடத்தியது. இந்த ஆலோசனையின் முடிவில் மீண்டும் சட்டசபை கூட்டத்தை கூட்டி நீட் தேர்விற்கு எதிராக மசோதா நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டது.

இதனையடுத்து கடந்த பிப்ரவரி மாதம் 8ஆம் தேதி கூட்டப்பட்ட சிறப்பு சட்டசபை கூட்டத்தில் நீட் விலக்கு மசோதாவை நிறைவேற்றி, தமிழக ஆளுநர் ரவிக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டது. இந்த தீர்மானம் நிறைவேற்றி ஒரு மாத காலத்திற்கும் மேல் ஆகிவிட்டது. இதுவரை இந்த மசோதா மீது ஆளுநர் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளார். இந்த நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கிண்டி ஆளுநர் மாளிகைக்கு சென்று ஆளுநர் ஆர்.என்.ரவியை இன்று மதியம் சந்தித்தார். அப்போது நீட் தேர்வு மசோதா மீது விரைவாக நடவடிக்கை எடுத்து குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவைக்க வலியுறுத்தியதாக தெரிகிறது. இச்சந்திப்புக்கு பின்னர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டுக்கு நீட் தேர்விலிருந்து விலக்களிக்கக் கோரும் மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைப்பதாக ஆளுநர் உறுதி அளித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதே போன்று பல மாதங்களாக நிலுவையில் இருக்கும் சட்டமுன்வடிவுகள் மற்றும் கோப்புகள் மீது உடனடி நடவடிக்கை எடுப்பதன் மூலம், தமிழ்நாடு சட்டமன்றத்தின் மாண்பைக் காப்பதுடன், தமிழக மக்களின் உணர்வுகளை மதிப்பதாகவும் அமைந்திடும் என தமிழக ஆளுநரிடம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார்.

# ஆந்திர அமைச்சரவையில் நடிகை ரோஜாவுக்கு வாய்ப்பு

ஆந்திர சட்டப்பேரவையில் முதல்வர் ஜெகன் மோகன் முன்னிலையில் மாநில நிதி அமைச்சர் புக்கன ராஜேந்திரநாத் ரெட்டி ரூ.2.56 லட்சம் கோடியில் 2022-23ம் வருவாய் ஆண்டிக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்தார். அப்போது அவர் திருக்குறளை மேற்கோள் காட்டி பட்ஜெட்டை துவக்கினார்.

பட்ஜெட் உரைக்கு பின்னர் முதல்வர் ஜெகன் மோகன் பேசுகையில், இந்த பட்ஜெட்டால். அனைத்து தரப்பினரும் வளம் பெறுவர். விரைவில் அமைச்சரவை விஸ்தரிப்பு இருக்கும். இதில், அமைச்சர் பதவிகள் பறி போனால், அவர்கள் வருத்தப்பட கூடாது. அவர்களுக்கு மாநில பொறுப்பு வழங்கப்படும் என்று அறிவித்தார். ஜெகன் மோகன் ஆட்சி பொறுப்பேற்றதும், அமைச்சர் பதவி இரண்டரை ஆண்டுகள் மட்டுமே. அதன் பிறகு புதியவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் என அறிவித்தார்.

இதனிடையே ஏப்ரல் மாதம் முதல் ஆந்திராவில் மாவட்டங்களும் 13 லிருந்து 26 ஆக பிரிக்கப்பட உள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அமைச்சர் கட்டாயமாக இடம் பெறுவார் என கூறப்படுகிறது. அதன்படி, சித்தூர் மாவட்டத்தில், நகரி தொகுதி எம்எல்ஏவான நடிகை ரோஜாவுக்கு வாய்ப்பு வழங்கப்படுமென எதிர்ப் பார்க்கப்படுகிறது.



# சென்னை அப்பலோவில் புற்றுநோயால் இளைஞர் மரணம் — ரூ.5 லட்சம் கட்டணம் கேட்டதால் உடலைவிட்டு சென்ற உறவினர்கள்

சென்னை அப்பலோ மருத்துவமனையில் புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்று வந்த வடமாநில இளைஞர் உயிரிழந்தார். மருத்துவ செலவு 5 லட்ச ரூபாய் கட்ட சொன்னதால் உடலை மருத்துவமனையிலேயே உறவினர்கள் விட்டு சென்றதாக புகார் எழுந்துள்ளது. மேற்கு வங்க மாநிலம் பூர்பா மெத்தினாயு மாவட்டம், கரிஸ்கா புபா மெத்தினயூர் பகுதியை சேர்ந்தவர் சௌமன்ஆதக் (23).

கடந்த சில ஆண்டுகளாக புற்று நோயால் அவதிப்பட்டு வந்த சௌமனை அவரது உறவினர்கள் கடந்த மாதம் 26ஆம் தேதி சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அப்போலோ கேன்சர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சௌமன்ஆதக் கடந்த 7ஆம் தேதி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனையடுத்து மருத்துவமனை நிர்வாகம் அவரது உறவினர்களிடம் சௌமன் உயிரிழந்த தகவலை தெரிவித்ததுடன், அவரது மருத்துவ செலவு 5 லட்ச ரூபாயை கட்டி விட்டு உடலை வாங்கி செல்லுமாறு தெரிவித்தனர்.

இதனை கேட்டு அதிர்ந்து போன உறவினர்கள் சௌமன் உடலை மருத்துவமனையிலேயே விட்டு சொல்லாமல், கொள்ளாமல் மருத்துவமனையில் இருந்து புறப்பட்டு சென்றுவிட்டனர். இதனால் செய்வதறியாது திகைத்து நின்ற மருத்துவமனை நிர்வாகம் இது குறித்து தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். புற்றுநோய் மருத்துவமனை மேலாளர் வெங்கடேசன் அளித்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# சென்னை மரக்காணம் அருகே சாலை விபத்தில் திமுக எம்பி மகன் உயிரிழப்பு

மரக்காணம் அருகே கிழக்கு கடற்கரை சாலையில் நேற்று அதிகாலை நடந்த சாலை விபத்தில் திமுக மாநிலங்களவை உறுப்பினரின் மகன் உயிரிழந்தார். திமுக மாநிலங்களவை உறுப்பினர் என்.ஆர்.இளங்கோ. இவர், சென்னை, அண்ணா நகரில் வசித்து வருகிறார். இவரது மகன் ராகேஷ் ரங்கநாதன் (21). இவர், தனது நண்பர் சென்னையைச் சேர்ந்த வேதவிகாஷ் (21) என்பவருடன் நேற்று முன்தினம் நள்ளிரவு ஜீப்பில் சென்னையில் இருந்து புதுச்சேரிக்கு கிழக்கு கடற்கரை சாலை வழியே வந்தார்.

நேற்று அதிகாலை விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் அடுத்த கீழ்ப்புத்துப்பட்டு அருகே சென்றபோது சாலையில் திடீரென மாடுகள் குறுக்கே வந்துள்ளன. இதனைஎதிர்பாராத ராகேஷ் ரங்கநாதன் உடனே காரை திருப்பியுள்ளார். அப்போது, கார் கட்டுப்பாட்டை இழந்து, சாலை நடுவில் உள்ள தடுப்பு கட்டை மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் காரின் முன்பக்கம் அப்பளம் போல் நொறுங்கியது. ராகேஷ் ரங்கநாதன் சம்பவ இடத்திலே உயிரிழந்தார். அவரது நண்பர் வேதவிகாஷ் பலத்த காயமடைந்தார். கோட்டக்குப்பம் போலீஸார் வேதவிகாஷை மீட்டு, புதுச்சேரியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்து தொடர்பாக கோட்டக்குப்பம் போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். திமுக எம்பி என்.ஆர்.இளங்கோவின் மகன் ராகேஷ் ரங்கநாதன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், அவரது இல்லத்துக்கு நேரில் சென்று உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். மகனை இழந்து வாடும் என்.ஆர்.இளங்கோ மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மக்களவை உறுப்பினர் கனிமொழி, அமைச்சர்கள் உள்ளிட்டோரும் அஞ்சலி செலுத்தினர்.

உலக செய்திகள்
World News

# ஒரு நாளைக்கு 40 வீரர்களை சுட்டுத்தள்ளும் உக்ரைன் மென் பொறியாளர்



உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் தொடர்ந்து நீடித்து வரும் நிலையில், உலகின் அபாயகரமான துப்பாக்கிச்சுடும் வீரராக கருதப்படும் "ஸ்னைப்பர் வாலி" (sniper Wali) உக்ரைனுக்கு ஆதரவாக களமாடி வருகிறார். உக்ரைன் மீதான ரஷ்யாவின் மூர்க்கத்தனமான தாக்குதல் கடந்த சில நாட்களாக குறைந்திருந்த நிலையில் தற்போது மீண்டும் தாக்குதலின் வேகம் அதிகரித்துள்ளது. உக்ரைன் அரசுக்கு சொந்தமான கட்டடங்கள், காவல் நிலையங்கள், விமான நிலையங்களை மட்டுமே குறிவைத்து தாக்கிய ரஷ்ய ராணுவம் தற்போது குடியிருப்புகள், மருத்துவமனைகளையும் தாக்க தொடங்கியுள்ளன. உக்ரைனின் மரியுபோல் நகரின் குடியிருப்பு பகுதிகளில் ரஷ்ய ராணுவம் கண்மூடித்தனமான ஏவுகணை தாக்குதலை நடத்தியது. இதில் சுமார் 2 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மேலும், இந்த போரில் அணு ஆயுதம், உயிரி ஆயுதம் பயன்படுத்தப்படும் அபாயமும் உருவாகியுள்ளது. இருப்பினும் இந்த குற்றச்சாட்டை ரஷ்யா, உக்ரைன் நாடுகள் மறுத்துள்ளன. ரஷ்ய ராணுவத்துடன் ஒப்பிட்டால் உக்ரைன் ராணுவம் மிகவும் சிறியது. இதனால் உக்ரைனுக்கு உதவி செய்யும்படி சர்வதேச நாடுகளுக்கு அந்நாட்டின் அதிபர் ஜெலன்ஸ்கி தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறார். இதனை ஏற்று அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்கள், நிதி உதவிகளை செய்து வருகின்றன. இந்நிலையில், உக்ரைன் ராணுவத்துக்கு ஆதரவாக கனடா ராணுவத்தின் 22வது படைப்பிரிவின் முன்னாள் வீரரான "ஸ்னைப்பர் வாலி" களமிறங்கி உள்ளார்.

40 வயதாகும் இவர் இயல்பில் இரு கணினி மென்பொறியாளராவார். 2009 முதல் 2011 வரையிலான காலகட்டத்தில் இரண்டு முறை ஆப்கானிஸ்தான் போரில் பங்கேற்றுள்ளார். தொலைவில் இருந்து எதிரிகளை குறிபார்த்து சுட்டு வீழ்த்துவதில் வல்லவரான இவர், உலகின் அபாயகரமான ஸ்னைப்பராக கருதப்படுகிறார். ஆப்கானிஸ் தானில் ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது அரபு மொழியில் பாதுகாவலர் என பொருள்படும் "வாலி" என்ற பெயரைப் பெற்றார். ஆப்கானிஸ்தானை தவிர சிரியா, ஈராக் போர்களிலும் வாலி பங்கேற்றுள்ளார். 2017-ம் ஆண்டு ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ்-க்கு எதிரான போரில் ஒரு பயங்கரவாதியை 3,450 மீட்டர் (சுமார் மூன்றரை கி.மீ) தொலைவில் இருந்து சுட்டு வீழ்த்தினார். இவரால் ஒரு நாளைக்கு 40 வீரர்களை சுட்டு வீழ்த்த முடியும் என கூறப்படுகிறது. ஒரு நல்ல ஸ்னைப்பரால் நாள் ஒன்றுக்கு 6 முதல் 7 பேரை சுட்டுவீழ்த்த முடியும். அதுவே சிறந்த வீரர் என்றால் 8 முதல் 10 பேரை மட்டுமே சுட முடியும். அண்மையில் உக்ரைன் ராணுவத்தில் இணைந்த இவர் இதுவரை 6 ரஷ்ய வீரர்களை சுட்டு வீழ்த்தியுள்ளார். உலகின் அபாயகரமான ஸ்னைப்பர் வீரர் உக்ரைன் ராணுவத்தில் இணைந்துள்ளது அங்கு ஊடுருவி வரும் ரஷ்யர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.



# ரஷ்யாவிற்கு எதிராக களமிறக்கப்பட்டுள்ள 12000 அமெரிக்க படையினர் — ஜனாதிபதி ஜோ பைடன் அனுப்பி வைப்பு

உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புதின் உறுதியாக வெற்றி பெற மாட்டார் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்காவின் ஹவுஸ் டெமாக்ரடிக் காகஸ் உறுப்பினர்களிடம் உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி "உக்ரைனில் மூன்றாம் உலகப் போரை நடத்தவில்லை" ஆனால் நேட்டோ அமைப்பில் உள்ள நாடுகளின் ஒவ்வொரு அங்குலத்தையும் நாங்கள் பாதுகாப்போம் என உறுதியளித்துள்ளார்.

அந்தவகையில் ரஷ்யாவின் அண்டை நாடுகளான லாட்வியா, எஸ்டோனியா, லித்துவேனியா மற்றும் ருமேனியா ஆகிய நாடுகளுக்கு 12000 அமெரிக்கா ராணுவ வீரர்களை அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் தாக்குதலை துணிச்சலாக எதிர்த்து உக்ரைன் மக்கள் தங்களின் தைரியத்தை வெளிப்படுத்தி வருகின்றனர், ரஷ்யாவின் இந்த அத்துமீறிய ஆக்கிரமிப்பு செயலுக்கு எதிராக அமெரிக்கா பல்வேறு பொருளாதார தடைகள் விதித்ததன் மூலம் உலக நாடுகளின் மத்தியில் ரஷ்யா தனிமைப்படுத்தபட்டுவிட்டதாகவும் வரலாறு காணாத அளவுக்கு ரஷ்ய ரூபிள் பாதிக்கும் குறைவான மதிப்பை தொட்டுவிட்டதாகவும் தெரிவித்தார்.

இதைப்போலவே ரஷ்யாவிற்கு எதிரான அனைத்து பொருளாதார தனிமைப்படுதலை முன்னகர்த்தி உக்ரைன் மக்களுக்கு அமெரிக்கா துணை நிற்கும், அதேசமயம் உக்ரைன் மக்களுக்கு தேவையான பிற உதவிகளையும் செய்ய அமெரிக்கா தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார். உக்ரைனில் ரஷ்யா போர் தொடுப்பதன் மூலம் நேட்டோ அமைப்பில் உள்ள நாடுகளின் ஒற்றுமையை சீர்குலைத்து விடலாம் என கருதிய ஜனாதிபதி புதின் எண்ணம் தற்போது அழிக்கப்பட்டு உள்ளது. நேட்டோ அமைப்பில் உள்ள அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஒற்றுமையான செயல்பாடுகளால் நாங்கள் வலிமையை காட்டுகிறோம், நாங்கள் ஒருபோதும் தளர்ந்துவிட மாட்டோம். உக்ரைனுக்கு எதிரான புடினின் போர் ஒருபோதும் வெற்றியாக இருக்காது." எனவும் அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

# ரஸ்ய அதிபர் புட்டினைக் கைவிட்ட நட்பு நாடான சீனா ரஷ்யாவுக்கு மீண்டும் ஒரு பின்னடைவு



உக்ரைன் மீது போர் தொடுத்துள்ளதால் உலகம் முழுவதிலும் பகையை சம்பாதித்துக்கொண்டுள்ள ரஷ்யா, நட்பு நாடுகளின் ஆதரவையும் இழந்துவருவதாகத் தோன்றுகிறது. எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில், அமெரிக்கா மீதான பகை முதலான காரணங்களால் நட்பு நாடுகளான சீனா ரஷ்யா நட்புக்கு, தற்போது உக்ரைன் போரால் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஆம், ரஷ்யாவுக்கு விமான உதிரி பாகங்களை வழங்க சீனா மறுத்துள்ளதாக ஒரு தகவல் வெளியாகியுள்ளது. தங்கள் விமானத்துறை, மேற்கத்திய நாடுகளின் தடைகள் காரணமாக பாதிக்கபட்டுள்ளதை மாஸ்கோ அலுவலர் ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளார். சீனா விமான உதிரிபாகங்களை வழங்க மறுத்துள்ளதைத் தொடர்ந்து, வேறு நாடுகளின் உதவியை நாட இருப்பதாக ரஷ்ய பெடரல் போக்குவரத்து ஏஜன்சி அலுவலரான Valery Kudinov என்பவர் தெரிவித்துள்ளார். உக்ரைன் ஊடுருவல் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துவதாக தெரிவித்திருந்த சீனா, தற்போது ரஷ்யாவுக்கு விமான உதிரி பாகங்களை வழங்க மறுத்துள்ளது ரஷ்யாவுக்கு ஒரு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது.

ஆனாலும், உக்ரைன் ஊடுருவலைக் கண்டிப்பதைத் தவிர்த்துவரும் சீனா, இப்படி ஒரு நிலைக்கு ரஷ்யாவை ஆளாக்கியது நேட்டோ நாடுகளும் அமெரிக்காவும்தான் என குற்றம் சாட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.



# நீடிக்கும் போர் பதற்றம்.. ராணுவ தளவாடங்கள் அழிப்பு.. வெளியான தகவல்

உக்ரைன்-ரஷ்யா இடையிலான போர் 16-வது நாளாக தொடர்ந்து தொடர்ந்து வருகிறது. இதில் ரஷ்ய படையினர் உக்ரைனின் முக்கியமான நகரங்களில் பீரங்கி, ஏவுகணை ஆகிய தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதே சமயம் ரஷ்யாவிற்கு, உக்ரைன் படையினரும் ஈடுகொடுத்து வருகின்றனர்.

இப்போரில் இருநாடுகளைச் சேர்ந்த பொதுமக்கள், வீரர்கள் என்று பலர் உயிரிழந்துள்ளனர். உக்ரைனில் இருந்து அண்டை நாடுகளுக்கு இதுவரையிலும் 20 லட்சத்திற்கும் அதிகமானோர் அகதிகளாக வெளியேறி இருப்பதாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தாக்குதல் தொடங்கிய நாள் முதல் இப்போது வரையிலும் 2800க்கும் அதிகமான உக்ரைனின் ராணுவம் தளவாடங்கள் அழிக்கப்பட்டு உள்ளதாக ரஷ்ய ராணுவ அமைச்சகமானது தெரிவித்துள்ளது. அதேபோன்று ரஷ்யாவும் பெரும்பாலான ராணுவம் தளவாடங்களை இழந்துள்ளது. இதற்கிடையில் சுமார் 12 ஆயிரம் ரஷ்ய ராணுவவீரர்கள் போரில் உயிரிழந்து உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மியான்மர், ஈரான் நாடுகள் போல இலங்கை!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## தமிழருக்கான நீதி கிடைப்பதற்கு அணுகுமுறையினை சர்வதேச சமூகம் முன்னெடுக்க வேண்டும் என்கிறது நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

தமிழருக்கான நீதிகிடைப்பதற்கும், தமிழர்கள் மீதான சிங்கள பௌத்த அரசின் கொடுங்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலுக்கும் பல்முனைப்பட்ட காத்திரமான அணுகுமுறையொன்றினை சர்வதேச சமூகம் முன்னெடுக்க வேண்டும் எனவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை தொடர்பிலான ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளர் பாஷேலே அம்மையாரின் அறிக்கை தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளது,

"இராணுவ மயமாக்கல் மற்றும் இன-மதவாதத்தின் தொடர்ச்சியான செயற்பாடுகள் சனநாயக அமைப்புக்களை சிதைக்கின்றன" என்ற ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையளரின் கூற்றினை சுட்டிக்காட்டியுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், "தண்டனைப் பயமின்மையானது சிறிலங்காவின் கலாச்சாரத்தில் ஊறிப்போன ஒன்று என்பதோடு அதனது அரசியலில் சிங்கள பௌத்தமத இனவாதம் ஆழமாக வேரூன்றியுள்ளது" என்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், சிறிலங்கா நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் அவர்களது அவதானிப்பினையும் இவ்விடயத்தில் சுட்டிக்காட்டியுள்ளது. "கொடுங்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலுக்கு தடையென்பது அரசியல் திடமின்மை அல்லது செயல் திறனின்மையோ காரணமல்ல என்பதற்கு அப்பால், சிங்கள பௌத்த மத அடிப்படைவாதமே காரணமென்பது தெளிவாகின்றது என இடித்துரைத்துள்ளது.

இவ்வகையிலேயே சிறிலங்கா தொடர்பிலான ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளரின் அறிக்கையின் முன்வைத்ததுபோல், பன்னாட்டு சமூகம் சர்வதேச நீதிக்கான நோக்கினை கொள்ளவேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரியுள்ளது.

மேலும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, ஆணையாளர் தனது அறிக்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பாக அதனை உபயோகிப்பதற்கு ஒரு தற்காலிக தடையும் அதன் மீதான அடிப்படை மாற்றங்கள் செய்யப்படவேண்டும் எனவும் கேட்டுள்ளார். (மார்ச் 7ம்-2022) மனித உரிமைகள் கண்காணிப்பகம், (மார்ச் 4-2022) சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியனவற்றின் வாய்மொழி அறிக்கையிலும், பயங்கரவாத தடைச் சட்டமானது சித்திரவதைகளை ஏதுவாக்கும் வகையில் திரும்ப திரும்ப உபயோகிக்கப்பட்டு வருவதாகவும், அது காணாமல் ஆக்கப்படுவோரை அதிகப்படுத்தும் அபாயத்திற்கு இட்டுச்செல்வதாக கூறியுள்ளது. "பயங்கரவாத தடைச் சட்டம் தமிழரையே அதிகமாக பாதிப்பதாக" மனித உரிமைகள், மற்றும் பயங்கரவாதம் தொடர்பான ஐ.நா. வின் விசேட அறிக்கையாளர் பென் எமர்சன் கூறியுள்ளார்.

1979இல் பயங்கரவாத தடைச்சட்டம் ஒரு சட்டமாக நிலைக்கொண்தில் இருந்து பல மனித உரிமைகள் அமைப்புக்களினாலும் அதனை இரத்துச் செய்யவேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியான அதனுடைய இருப்பு, சிறிலங்கா அரசால் உத்தேசிக்கப்பட்டவாறான திருத்தங்களோடு கூட, சிறிலங்காவின் அரசியல்-இராணுவ கட்டமைப்புக்கள் மீதான சிங்கள பௌத்தமத அடிப்படைவாதத்தின் கிடுக்கிப் பிடியினை நிலைப்படுத்தவே செய்யும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாகியதற்கு காரணமே தமிழர்கள் மீதான இனவழிப்பும், சிங்கள-தமிழ் அரசியல் தலைமைகள் இன முரண்பாடுகளுக்கான தீர்வினை எட்டுமுகமாக எடுக்கப்பட்ட ஒப்பந்தங்களை சிங்கள தலைவர்கள் தொடர்ச்சியாக மீறியதும் தான் என இரா.சம்பந்தன தனது அறிக்கையில்கூறியுள்ளார். சிங்கள பௌத்த இனவாதமே அதன் வேராக இருப்பதே காரணமாகும்.

வழமைபோலவே, ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளரது அறிக்கைக்கு சிறிலங்கா பௌத்த இனவாத அரசு பதிலளிக்கையில், சர்வதேச அமைப்புகளை, குறிப்பாக மனித உரிமைச்சபை, தமது "நாட்டு இறையாண்மை" என்ற கோட்பாட்டின் பின்னின்று தாக்கியும் பயமுறுத்தியும் உள்ளது என தெரிவித்துள்ளது. இது சிறிலங்காவின் சந்தர்ப்பவாதப் போக்கையே காட்டுகிறது, அதாவது, பொருளாதார மேம்பாட்டிற்கு நிதியுதவி, பேரிடர்காலத்தில் தனது மக்களுக்கு தடுப்பூசி போடுதல் என தனக்கு தேவை என வரும்போது, சர்வதேச அமைப்புக்களிடம் செல்வதும், ஆனால் தான் இழைத்த கொடுங்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் என வரும்போது நாட்டின் இறையாண்மை என்ற கேடயத்தினை பாவிப்பதுமாக இருக்கின்றது.

சர்வதேச குற்றங்கள், மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபடும் போது, சிறிலங்கா அரசு இறையாண்மை என்ற அடிப்படையிலான தற்காப்பை இழக்கிறது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இங்கே குறிப்பிட விரும்புவது என்னவெனில், சிறிலங்காவின் 1972 இல் உருவாக்கப்பட்ட அதன முதலாவது குடியரசுக்கான அரசியலமைப்பு, அல்லது 1978 இல் உருவாக்கப்பட்ட அதன் இரண்டாவது அரசியல் அமைப்பிலோ தமிழர்கள் எவ்வகையிலும் பங்குபற்றவோ அல்லது அதனை ஆதரிக்கவோ இல்லை. அவை தமிழர்களின் பெரும் ஆட்சேபணைகளுக்கிடையே தமிழர்கள் மீது சுமத்தப்பட்டவையாகும். ஆகவே, சிறிலங்கா அரசின் இந்த "நாட்டின் இறையாண்மை" என்ற கோட்பாட்டின் பின்னே தமது கொடூர குற்றங்களை மறைக்கப்பார்ப்பது என்பது ஒரு தார்மீக கபடநாடகம் ஆகும்.

தற்போது இலங்கைஅரசானது, இலங்கைத்தீவின் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பகுதிகளான வடக்கு கிழக்கில், தமிழ் பேசும் மக்களை "சிறுபான்மையினராக" ஆக்கும் விதத்தில் குடிப்பரம்பலை மாற்றி அமைக்கும் காரியங்களில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

அமெரிக்காவின் சான்பிரான்ஸிஸ்கோவை தளமாக கொண்டுள்ள ஓக்லண்ட் அமைப்பு 2021 மார்சில் வெளியிட்ட "முடிவற்ற யுத்தம்" என்ற தமது ஆய்வுக்கட்டுரையில் "தமிழர் பெரும்பான்மையாக செறிந்து வாழும் பிரதேசங்களில் வலிந்து மேற்கொள்ளப்படும் சிங்கள குடியேற்றங்கள், இராணுவ வெற்றிச்சின்னங்கள், அகழ்வாராய்வு ஒதுக்கிடங்கள், வனவிலங்கு காப்பகங்கள், வன ஒதுக்கிடங்கள் மற்றும் சிறப்பு பொருளாதார பிரதேசங்கள் அமைக்கப்படுகின்றன. இவை யாவுமே, தமிழர்களது பிரதிநிதிகளிடம் சம்மதமோ அல்லது எந்த விதமான ஆலோசனைகளும் தமிழர் தரப்பிடம் பெறப்படாமலே, தமிழர்களது நிலங்களை அபகரிக்கும விதமாகவும், அவர்களது அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் விதமாகவும், மற்றும் அவர்களது அடையாளத்தினையே துடைத்து அழிக்கும் வகையிலும் தெளிவான ஒரு நோக்கில் செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் சிறிலங்கா அரசாங்கம் சிங்கள மக்களது விகிதாசாரத்தினை அதிகரிக்கும் விதமாக சிங்கள கிராமங்களை தமிழ் மாவட்டங்களோடு இணைக்கும் வகையில் எல்லைகளை மறுசீரமைக்கிறார்கள். இது சிறிலங்காவின் அதிகமாக சிங்களவரைக் கொண்ட இராணுவம் தமிழர் பிரதேசங்களில் நிலைகொண்டுள்ளமையால் சாத்தியப்படுகிறது. இந்த தமிழர் தாயகத்தின் நிலம் அபகரித்தலால் தமிழ் மக்களது தனித்துவமான அடையாளம் அற்றுப் போய்விடும்.

தமிழரின் அரசியல் எதிர்காலத்தினை தீர்மானிக்கும் வகையில் பொதுவாக்கெடுப்புக்கான கோரிக்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளருக்கு ஐந்து தமிழ் அரசியல் கட்சிகளால் அனுப்பப்பட்ட கடிதத்தை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கவனத்தில் கொள்கின்றது. ஆயினும், நாட்டில் நிலவும் சரித்திர பூர்வமான சிங்கள பௌத்தமத அடிப்படைவாதம், அத்துடன் சிங்கள தலைவர்கள் அவர்கள் இழைக்கும் கொடூர குற்றங்களுக்கு தண்டனைப் பயமின்மை மற்றும் தமிழர்களை பரவலாக துன்புறுத்துதல், தமிழரது அடையாளங்களை அழித்தல் என்பவற்றை மனதில் கொண்டு, தமிழர்தாம் இங்கே பாதிக்கப்பட்டவர்கள் என்ற நிலையில் அவர்களது அரசியல் எதிகாலத்தை தீர்மானிப்பதற்கு அனுமதிக்க வேண்டும்.

ஆகையினால், ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளர் பாஷேலே அம்மையாரின் அறிக்கைக்கு சர்வதேச சமூகம் கவனம் கொடுத்து சிறிலங்கா அரசு பொறுப்புக்கூறும் வண்ணம் ஒரு மாறுபாடான ஏற்பாட்டை எடுப்பதன் பேரில் இலங்கைத்தீவில் தமிழருக்கான அரசியல் தீர்வு, நீதி, மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றை சாத்தியமாக்க பல்முனைப்பட்ட காத்திரமான அணுகுமுறையொன்றினை சர்வதேச சமூகம் முன்னெடுக்க வேண்டும்என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரியுள்ளது.

# வைத்தியராக வந்து மக்களுக்கு சேவை செய்வதே எனது எதிர்கால இலட்சியம்

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் முதலிடத்தை பெற்ற புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவன் கே.எபிஸ்டனி



ஒரு வைத்தியராக வந்து மக்களுக்கு சேவை செய்வதே எனது எதிர்கால இலட்சியம் என தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் 188 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதல் நிலை வகிக்கும் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் கேதீஸ்வர லிங்கம் எபிஸ்டனி தெரிவித்தார்.

2021 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் 188 புள்ளிகளைப் பெற்று மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் கேதீஸ்வர லிங்கம் எபிஸ்டனி மாவட்டத்தின் முதல் நிலையைப் பெற்றுள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பரீட்சைகள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. அதனடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் அதிகூடிய புள்ளிகளை செல்வன் கே.எபிஸ்டனி பெற்றுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில், நான் மன்னார் மாவட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு என்னை தினமும் ஊக்கப்படுத்தி எனக்கு பெரிதும் உதவியாக இருந்த பெற்றோருக்கு முதலில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தோடு எனது கற்றல் செயற்பாடுகளில் முற்று முழுதாக எனக்கு கற்பித்து எனக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி வழிப்படுத்திய எனது வகுப்பாசிரியர் இ.ராகுலன் ஆசிரியர் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தோடு எனக்கும் ஏனைய மாணவர்களுக்கும் நல்ல ஊக்கத்தையும் ஆலோசனைகளையும் வழங்கிய எனது பாடசாலை அதிபர் அருட்சகோதரர் எஸ்.இ. றெஜினோல்ட் மற்றும் பிரதி அதிபர், பகுதித்தலைவர் மற்றும் ஏனைய அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர் காலத்தில் நல்ல மருத்துவராக வந்து சேவையாற்ற வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். அந்த வகையில் நான் தொடர்ந்து சிறப்பாக கல்வி கற்று எனது பெற்றோருக்கும் பாடசாலைக்கும் புகழைத் தேடித் தருவேன். என மாணவன் எபிஸ்டனி தெரிவித்தார்.

இதேவேளை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் முஹமட் அமர் 185 புள்ளிகளை பெற்று மன்னார் மாவட்டத்தில் 2வது இடத்தை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நீங்கள் என் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளீர்கள். அந்த நம்பிக்கையை பாதிக்கும் வகையில் செயற்படாது, அர்ப்பணிப்புடன் பாதுகாப்பேன்

## சற்று முன்னர் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ ஆற்றிய விளக்கவுரை:

**- கொழும்பிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்**



இன்று ஒரு சவாலான நேரத்தில் நான் உங்கள் முன்னால் உரையாற்றுகிறேன்.

உங்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வை நான் நன்கு அறிவேன்.

எரிவாயு தட்டுப்பாடு, அதே போன்று, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு போன்ற பிரச்சினைகளை நான் நன்கு அறிவேன்.

கடந்த இரண்டு மாதங்களாக பொதுமக்கள் அனுபவித்த பல இன்னல்கள் குறித்தும் நான் நன்றாக உணர்ந்துள்ளேன்.

அதற்காக, எங்களால் செய்ய முடிந்த அனைத்தையும் நாம் செய்தாலும், எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் இந்த நிலைமை தொடரும் என்பதையும் நான் அறிவேன்.

நான் செய்யும் செயல்களுக்கு நான் பொறுப்பேற்கிறேன்.

பொதுமக்கள் அனுபவிக்கும் ஒரு சில சிக்கலான வாழ்க்கை முறைகளுக்குத் தீர்வு காண இன்று நான் கடுமையான முடிவுகளை எடுக்க உறுதிபூண்டுள்ளேன்.

அதற்கு உதவ தேசிய பொருளாதார சபையையும், அதற்கு ஒத்துழைப்பு வழங்க ஓர் ஆலோசனைக் குழுவையும் நியமித்தேன்.

இதன் மூலம், நான் எடுக்கும் முடிவுகள் செயற்படுத்தப்படுகிறதா என்பதைத் தொடர்ந்து கண்காணிக்கவும் நடவடிக்கை எடுப்பேன்.

எனவே, மக்களுக்காக நான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் நம்பிக்கை வைக்குமாறு நான் உங்களை முதலில் கேட்டுக்கொள்கிறேன்.

நான் மக்களின் சிரமங்களை நன்கு அறிந்த ஒருவர். நாங்கள் எதிர்கொண்ட கொடூரமான பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் முன்னணியில் இருந்த ஒரு படைவீரர் நான்.

அத்தோடு, யுத்தத்தில் சிக்கிய அப்பாவி பொதுமக்கள் எதிர்கொண்ட அனைத்து சிரமங்களையும் நன்கு புரிந்துகொண்டு அவற்றை முறையாக நிர்வகிக்க என்னால் முடிந்தது.

இன்றைய இக்கட்டான நிலைமை, நம் நாடு மட்டும் முகங்கொடுக்கும் ஒரு விடயமல்ல.

முழு உலகமும் ஏதோ ஒரு வகையில் ஒரு சிக்கலான சூழ்நிலையின் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கொவிட் நோய்த் தொற்றினால் அதிகரித்த கப்பல் கட்டணங்கள், பொருட்களின் விலை அதிகரித்தல் மற்றும் சில பொருட்களின் தட்டுப்பாடு ஆகிய அனைத்தும் நம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை.

ஆனாலும் நாம் மக்களின் பக்கம் நின்று நிவாரண நடைமுறைகளைப் பின்பற்றுகிறோம்.

இந்த நெருக்கடி நிலையானது, ஒருபோதும் என்னால் உருவாக்கப்பட்ட ஒன்று அல்ல.

அன்று இந்த நெருக்கடியை உருவாக்குவதற்குக் காரணமானவர்கள் இன்று மக்கள் முன்னிலையில் அரசாங்கத்தை விமர்சித்து வரும் நிலையில், இந்த நெருக்கடியை விரைவில் தீர்த்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவே நான் முயற்சிக்கிறேன்.

இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில், ஒரு நாட்டின் அரசியல்வாதிகளினதும் புத்திஜீவிகளினதும் பொறுப்பு - ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்குக் கூட்டாகத் தீர்வு காண்பதேயாகும்.

இன்றைய பிரச்சினைகளுக்கு மூலகாரணம் நமது அந்நிய செலாவணி நெருக்கடியே ஆகும்.

ரூபாய் நெகிழ்வுடன் இயங்குவதற்கு இடமளிக்கப்பட முன்னர் இருந்த நிலைமையின் பிரகாரம், இந்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் ஏற்றுமதி வருமானம் 12 பில்லியன் டொலர்கள் ஆகும்.

கடந்த இரண்டு மாத கால தரவுகளின்படி, இந்த ஆண்டு 22 பில்லியன் டொலர்கள் இறக்குமதி செலவை நாம் ஏற்க வேண்டியுள்ளது.

அதன்படி, 10 பில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தகப் பற்றாக்குறை உருவாகும்.

அண்மைக்கால தரவுகளின்படி, இந்த ஆண்டு சுற்றுலாத்துறையிலிருந்தும் அதேபோன்று தகவல் தொழிநுட்பம் போன்ற சேவை ஏற்றுமதியில் இருந்தும் சுமார் 03 பில்லியன் டொலர்கள் கிடைக்கக்கூடியதோடு, வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பரிமாற்றம் மூலம் 02 பில்லியன் டொலர்கள் கிடைக்கும்.

அதன்படி, வர்த்தகப் பற்றாக்குறை 05 பில்லியன் டொலர்களாக இருக்கும்.

இதற்கிடையில், இந்த ஆண்டு 6.9 பில்லியன் டொலர்கள் கடன் தவணைகள் மற்றும் இறையாண்மை பத்திரங்களுக்குச் செலுத்தப்பட வேண்டும்.

அப்போது 11.9 பில்லியன் டொலர்கள் பற்றாக்குறை ஏற்படும்.

ஏனைய கடன் உதவிகள் மற்றும் முதலீடுகளாக 2.5 பில்லியன் டொலர்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வகையில் அந்நியச் செலாவணியில் மொத்தம் 9.4 பில்லியன் டொலர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது.

ஆனால், ரூபாய் நெகிழ்வின் பின்னர் ஏற்றுமதி வருமானம் 13 பில்லியன் டொலர்கள் வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இறக்குமதி செலவை 22 பில்லியன் டொலர்களில் இருந்து 20 பில்லியன் டொலர்கள் வரை குறைத்துக் கொள்ளவும் முடியும்.

அப்படியானால், வர்த்தக பற்றாக்குறையை 07 பில்லியன் டொலர்கள் வரை குறைக்க முடியும். அதைத்தான் நாம் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

அதேபோன்று, சேவை ஏற்றுமதியின் மூலம் 04 பில்லியன் டொலர்கள் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களின் பரிமாற்றம் மூலம் 05 பில்லியன் டொலர்களையும் எதிர்பார்க்கலாம்.

அதன்படி, நமது வர்த்தகப் பற்றாக்குறை 2.4 பில்லியன் டொலர்கள் ஆகும்.

இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும், நமது அந்நியச் செலாவணிக் கையிருப்பை அதிகரிக்கவும் நாம் செயற்பட வேண்டும்.

இதற்காக, சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் நட்பு நாடுகளுடன் எங்களது கடன் தவணையைச் திருப்பிச் செலுத்துவது குறித்து நாம் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம்.

இதனை எமது நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் புதிய பொறிமுறையின் மூலம் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடி வருகின்றது.

சர்வதேச நாணய நிதியத்துடனான நேற்றைய கலந்துரையாடலும் இந்த நோக்கத்துடனேயே இடம்பெற்றது.

அந்த கலந்துரையாடல் மூலம் நாம் எதிர்பார்ப்பது, ஒரு வருடத்துக்கு நாங்கள் செலுத்த வேண்டிய கடன் தவணைகள், இறையாண்மை பத்திரங்கள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்குவதாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான எனது கலந்துரையாடலுக்குப் பிறகு, அனுகூலங்கள், பிரதிகூலங்களை ஆய்வுசெய்து அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு நான் முடிவு செய்தேன்.

கடந்த காலத்தில் நான் எடுத்த சில முடிவுகளால் இறக்குமதிச் செலவைப் பெருமளவு கட்டுப்படுத்த முடிந்தது.

இந்த பிரச்சினையை முன்கூட்டியே கண்டுகொண்டதால் இரண்டு ஆண்டுகளுக்கு முன், வாகனங்களை இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டோம்.

மேலும், உள்நாட்டில் நமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் கைத்தொழில்களை ஊக்குவித்தோம்.

அதேபோன்று, பல அத்தியாவசியமற்ற உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டு, அந்த பயிர்களை நம் நாட்டில் பயிரிடுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம்.

அவற்றின் வெற்றிகரமான முடிவுகளை இப்போது நாம் காண்கிறோம்.

இறக்குமதிச் செலவைக் கட்டுப்படுத்துவதில் நாம் எதிர்கொள்ளும் மிகக் கடுமையான பிரச்சினை, உலகச் சந்தையில் எண்ணெய் விலைகள் வேகமாக அதிகரிப்பதாகும்.

சராசரியாக, நமது இறக்குமதிச் செலவில் 20 சதவீதத்திற்கும் அதிகமாக எரிபொருள் இறக்குமதிக்காக செலவிடப்படுகிறது.

கடந்த சில மாதங்களில் மட்டும் உலக சந்தையில் எரிபொருளின் விலை இருமடங்காக அதிகரித்துள்ளது.

இதனால்தான் நம் நாட்டிலும் எரிபொருளின் விலை அதிகரிக்கப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கின்றது.

நம் நாட்டில் வாகனங்களுக்கு மட்டுமின்றி மின்சார உற்பத்திக்கும் எரிபொருள் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

அதனால்தான், முடிந்தவரை மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களைப் பயன்படுத்த நான் தொடர்ந்தும் கலந்துரையாடி அதற்குரிய நிறுவனங்களை ஊக்கப்படுத்தினேன்.

எனவே எரிபொருள் மற்றும் மின்சாரப் பாவனையை இயன்றவரை கட்டுப்படுத்துவதன் மூலம் மக்களும் இந்த நேரத்தில் நாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும். இந்தக் கடினமான நேரத்தில் அந்தப் பொறுப்பை நீங்கள் புரிந்துகொண்டு செயற்படுத்துவீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

கொவிட் தொற்றுநோய் காரணமாக வீழ்ச்சியடைந்த சுற்றுலா கைத்தொழில் மீண்டும் எழுச்சிபெற்று வருகின்றது. கடந்த இரண்டு மாதங்களில் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

அதேபோன்று, தகவல் தொழிநுட்பம் மற்றும் தொலைத்தொடர்பு துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கம் துரிதப்படுத்துவதால், இத்துறைகள் மூலம் நாட்டுக்கு வரும் வருமானம் அதிகரித்து வருகிறது.

நாம் வரலாற்றில் பலமுறை வீழ்ந்து, எழுந்த தேசம் ஆகும். அந்நிய படையெடுப்பு, பெரும் பஞ்சம், இயற்கை அனர்த்தங்கள், பயங்கரவாத அச்சுறுத்தல்கள் போன்றவற்றை நாம் எதிர்கொண்டு அதிலிருந்து மீண்டுள்ளோம். கடந்த கொரோனா நோய்த் தொற்றை நாம் எதிர்கொண்ட விதம் சர்வதேச அமைப்புகளால் கூட பாராட்டப்பட்டது. தீர்வுகளை நடைமுறைப்படுத்தும்போது சில காலம் சிரமங்களைச் சந்திக்க நேரிடும் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, நீங்கள் அனைவரும் தைரியத்தை இழக்காமல் இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஒரு தேசமாக ஒன்றிணையுமாறு உங்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் என்னிடம் பாதுகாப்பு, ஒழுக்கம், நவீனமயமான அபிவிருத்தி அடைந்த நாடு, குழந்தைகளுக்கு சிறந்த கல்வி ஆகியவற்றையே கேட்டீர்கள். எனது பதவிக்காலத்தில் ஏறக்குறைய இரண்டரை வருடங்கள் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் தொற்று நோயிலிருந்து பாதுகாப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்டது. ஆசீர்வாதம் நிறைந்த தாய் நாட்டில் எனது எதிர்கால பதவிக்காலத்தை அந்த அடிப்படை இலக்குகளுக்காக அர்ப்பணிப்பேன்.

அமைச்சரவை, பாராளுமன்றம் மற்றும் அரச ஊழியர்களிடமும் நான் கேட்டுக்கொள்வது, எமது பிள்ளைகளுக்கு சிறந்த நாட்டை வழங்குவதற்காக, எம்மிடம் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்ள நாம் ஒரு குழுவாக இலட்சியத்துடனும் தியாகத்துடனும் செயற்படுவதையே ஆகும்.

உங்கள் அழைப்பின் பேரிலேயே நான் அரசியலுக்கு வந்தேன். நீங்கள் என் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளீர்கள். அந்த நம்பிக்கையை பாதிக்கும் வகையில் செயற்படாது, அர்ப்பணிப்புடன் பாதுகாப்பேன்.

உங்கள் அனைவருக்கும் மும்மணிகளின் ஆசிகள்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இறுதிப் போரின் குற்றங்களுக்கு நீதியை நிலை நாட்டாமல் சர்வதேசத்தின் கோரிக்கைகளை புறந்தள்ளிவிட்டு தன்னிச்சையாக செயல்படும் ஓர் அரசாங்கமே இன்று ஆட்சியில் உள்ளது

## மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை



இலங்கை அரசானது ஈஸ்டர் தினத் தாக்குதல்களுக்கு காரணமானவர்களை கண்டு பிடித்து நீதியை நிலைநாட்ட தவறியுள்ளது. இதனால் இலங்கை கத்தோலிக்க திருச்சபை சர்வதேசத்தின் உதவியை நாடவேண்டிய சூழ்நிலையும் உருவாகியுள்ளது.

அத்துடன் இறுதிப் போரில் நடந்தேறிய போர்க்குற்றங்களுக்கு நீதியை நிலை நாட்டாமல் சர்வதேசத்தின் கோரிக்கைகளையும் புறந்தள்ளிவிட்டு தன்னிச்சையாக செயல்படும் ஓர் அரசாங்கமே இன்று ஆட்சியில் உள்ளது என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கிறிஸ்தவர்கள் நினைவு கூறும் தவக்காலத்தில் ஒவ்வொரு மறைமாவட்ட ஆயர்களும் தங்கள் மறைமாவட்ட மக்களுக்கு தவக்கால திரு மடலை எழுதியுள்ளனர். இந்த நிலையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை மன்னார் மறைமாவட்ட மக்களுக்கு எழுதியுள்ள திருமடலில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த தவக்கால திருமடலில் மேலும் குறிப்பிடுகையில், ஆட்சியாளர்களின் அசமந்தப் போக்கினால் அனைத்து மக்களும் ஆழ்ந்த அதிருப்தியிலும் ஏமாற்றத்திலும் உள்ளனர்.

ஆகவே பவுலடியாரின் கூற்றுப்படி இறைப்பற்றும் கண்ணியமும் நிறைந்தவர்களாய் தொல்லையின்றி அமைதியோடு வாழ அரசர்களுக்காகவும் உயர் நிலையில் உள்ள எல்லா மனிதர்களுக்காகவும் மன்றாடுவோம்.

அருளின் காலமாகிய தவக்காலத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் மீண்டும் காலடி பதித்துள்ள இவ்வேளையில் நாம் மனமாற்றம் பெறுவதற்கும் நம்மைப் புதுப்பித்துக் கொள்வதற்கும் திருமறையில் தெரிவித்திருப்பது போல் "இதுவே தகுந்த காலமாகும்" "உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள். மாறாக ஆண்டவரின் குரலைக் கேட்பீர்களாக".

நாங்கள் மட்டுமீறிப் பற்றுதல் களிலிருந்து விடுதலை பெற்று நிலையற்றவற்றில் மனதை ஈடுபடுத்தாது நிலையானவற்றில் மேன்மேலும் மனதைச் செலுத்துமாறு எங்களை தூண்டுகின்ற காலமே இவ் தவக்காலம் ஆகும்.

இத்தவக்காலத்தில் செபம், தவம், தான தருமம் ஆகிய மூன்றும் இன்றியமையாதவை. ஆகவே அவற்றை நோக்கி நம்மை இட்டுச் செல்ல வேண்டும்.

இந்நாட்களில் நம்மை நாமே புதுப்பிப்பதோடு மற்றவர்கள் மட்டில் நமக்குள்ள கடமைகள் பொறுப்புக்களையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

நம்முடன் வாழ்கின்றவர்களின் ஆன்மீக உலகியல் தேவைகள் மட்டிலும் நாம் அக்கறையும் கரிசனையும் காட்ட வேண்டும். இதைதான் இந்த ஆண்டுக்கான தவக்காலச் செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு ரோமாபுரியில் உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெறவுள்ளது. "ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக ஒன்றிப்பு பங்கேற்றல் பணி" என்ற கருப்பொருளில் அதற்கான ஆயத்தப் பணிகள் உலகெங்கும் நடைபெற்று வருகின்றன. இதில் மன்னார் மறை மாவட்டமும் ஈடுபடுத்தி வருகிறது என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மன்னார் மறைமாவட்ட ஆயர் தனது தவக்கால திருமடலில் நாட்டின் இன்றைய சூழ்நிலை தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், இலங்கை நாடு இன்று பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு விலைவாசி உயர்வு மின்சாரத் தடை போன்றவை சாமானிய மக்களை மட்டுமல்ல நாட்டில் உள்ள அனைத்து தரப்பினரையும் வெகுவாகப் பாதித்து வருகின்றன.

இது மட்டுமல்ல இலங்கை அரசானது ஈஸ்டர் தினத் தாக்குதல்களுக்கு காரணமானவர்களை கண்டு பிடித்து நீதியை நிலை நாட்ட தவறியுள்ளது. இதனால் இலங்கை கத்தோலிக்க திருச்சபை சர்வதேசத்தின் உதவி நாட வேண்டிய சூழ்நிலையும் உருவாகியுள்ளது.

அத்துடன் இறுதிப் போரில் நடந்தேறிய போர்க்குற்றங்களுக்கு நீதியை நிலை நாட்டாமல் சர்வதேசத்தின் கோரிக்கைகளையும் புறந்தள்ளிவிட்டு தன்னிச்சையாக செயல்படும் ஓர் அரசாங்கமே இன்று ஆட்சியில் உள்ளது.

இவ்வாறு ஆட்சியாளர்களின் அசமந்தப் போக்கினால் அனைத்து மக்களும் ஆழ்ந்த அதிருப்தியிலும் ஏமாற்றத்திலும் உள்ளனர். என குறித்த திருமடலில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

**- மன்னார் நிருபர்**



# தனியார் பஸ் சேவை நாளை முதல் பணிப்புறக்கணிப்பு

நாட்டில் திங்கட்கிழமை (14) முதல் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடாது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

டீசல் விலை அதிகரிப்புக்கு நிகராக பஸ் கட்டணங்கள் அதிகரிக்க படாவிடில் அல்லது டீசலுக்கு மானியம் வழங்கப்படாவிட்டால் நாளை முதல் பஸ்கள் சேவையில் ஈடுபடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

டீசல் லீற்றர் ஒன்றுக்கு 55 ரூபா அதிகரிப்பானது 45 சதவீத அதிகரிப்பாகும். பஸ் கட்டணக் கொள்கையின் பிரகாரம் பஸ் கட்டணத்தில் 15 வீத அதிகரிப்பு தவிர்க்க முடியாதது. கட்டணம் அதிகரிக்கப்படும் வரை பஸ்கள் சேவையில் ஈடுபட முடியாது என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வீட்டுக்குப்போங்கள் அல்லது தேர்தலை நடத்துங்கள் என்கிறார் சஜித் பிரேமதாச




அரசாங்கம் வீட்டுக்கு போகவேண்டும் அல்லது புதிய தேர்தலை நடத்தவேண்டும் என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்று இடம் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கி ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் உரையாற்றுகையில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அரசாங்கம் வீட்டுக்கு செல்லவேண்டும் அல்லது ஜனாதிபதி தேர்தலில் தங்களிற்கு யார் தேவை என்பதை மக்கள் தீர்மானிப்பதற்கு அனுமதிக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச பிரதமர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் மக்கள் எதற்காக தங்களை தெரிவு செய்தார்களோ அதனை நிறைவேற்ற முடியாவிட்டால் விலகிச்செல்லவேண்டும் நாங்கள் ஆட்சிபுரிவதற்கு அனுமதிக்கவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த துன்பங்களை இதற்கு மேல் எங்களால் அனுபவிக்க முடியாது என தெரிவித்துள்ள எதிர்கட்சி தலைவர் இந்த துன்பங்களிற்கு ராஜபக்ச அரசாங்கமும் ராஜபக்ச குடும்பமுமே காரணம் அவர்களை வீட்டிற்கு அனுப்புவதற்கான தருணம் இது என குறிப்பிட்டுள்ளார்.





நாட்டை சீரழித்த அரசாங்கம் வீட்டிற்கு செல்லவேண்டும் என தெரிவிக்கவே நாங்கள் இங்கு வந்திருக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தினால் பறிபோன இலங்கையின் அடையாளத்தை தனித்துவத்தை ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் மீண்டும் ஏற்படுத்தும் என தெரிவித்துள்ள எதிர்கட்சி தலைவர் நாட்டைஅழிவின் விழிம்பிலிருந்து பாதுகாக்கவேண்டிய தருணம் இதுவெனவும் தெரிவித்துள்ளார்.

ஆயிரக்கணக்கானவர்கள் துப்பாக்கி குண்டுகள் கண்ணீர்புகை பிரயோகம் நீர்த்தாரைகள் தடியடிகளிற்கு அஞ்சாமல் இங்கு வந்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

# தேசிய சேமிப்பு வங்கியின் வங்காலை கிளையில் சிறப்பாக இடம்பெற்ற 50 ஆண்டு நிறைவு விழா



தேசிய சேமிப்பு வங்கியின் 50 ஆண்டு நிறைவு விழா புதன்கிழமை (16) தேசிய சேமிப்பு வங்கியின் மன்னார் வங்காலை கிளையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

வங்கியின் பிரதான முகாமையாளர் வெ.கோகுலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

காலை 7.30 மணிக்கு 50வது ஆண்டு விழா மங்கள ரீதியாக தேசிய மற்றும் வங்கி கொடியை அரசாங்க அதிபர் மற்றும் வங்கியின் முகாமையாளர் ஏற்றி வைத்து மங்கள விளக்கேற்றி மதத் திலைவரின் இறை ஆசியுடன் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் பிரமுகர்கள் மற்றும் வாடிக்கையாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



**- மன்னார் நிருபர்**

# தமிழ்த் தலைமைகளுக்கு இன்று மீட்பரும் மேய்ப்பரும் இந்தியாதான்



- கொழும்பில் இருந்து மூத்த ஊடகவியலாளர் வி.தேவராஜ்

13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல் அதற்கு அப்பால் அதிகாரப்பகிர்வு தொடர்பாக ஆறு தமிழ்க் கட்சிகள் இந்தியாவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளன. தமிழர் தரப்பைப் பொறுத்து இதனைத்தவிற வேறு தெரிவு ஏதும் தற்போது இருப்பதாகத் தெரியவில்லை. மனித உரிமைப் பேரவையில் இந்தியாவின் பதில் இதற்குச் சாதகமானதாகவே உள்ளது. இது ஆறு தமிழ்க் கட்சிகளுக்குக் கிடைத்த வெற்றியாகவே கருத வேண்டியுள்ளது.

இலங்கை இந்திய ஒப்பந்தம்

தமிழர்களின் அரசியல் பரப்பில் 13 வது அரசியலமைப்பு திருத்தம் குறித்து இன்று பரவலாகப் பேசப்படுகின்றது. குறிப்பாக ஆறு தமிழ்க் கட்சிகள் கூட்டாக இந்திய மத்திய அரசாங்கத்திடம் வைத்துள்ள கோரிக்கை குறித்தே இந்தக் கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதில் விசித்திரம் என்னவெனில் பிராந்திய சபையாக உருவெடுத்த தமிழர் விவகாரத்துக்கான தீர்வு தனி நாட்டுக் கோரிக்கையாக எழுச்சி பெற்று தன்னாட்சி அதிகார சபையாகவும் இறுதியில் ஒஸ்லோ உடன்படிக்கையில் சமஷ்டி தீர்வு குறித்து பரிசீலிக்க தமிழர் தரப்பு தயாரான நிலையில் இன்று 13வது திருத்தத்தை தமிழர்தரப்பு கையில் எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பதுதான்.

போர் மௌனிக்கப்பட்ட பின் தமிழ் மக்களை முழுமையாக தலைமையேற்று புறப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு உண்மையில் நோர்வே உட்பட இணைத் தலைமை நாடுகளை சமஷ்டி கோரிக்கையில் இருந்து மீண்டும் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க வலியுறுத்தி இருக்க வேண்டும். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அதனைச் செய்யத் தவறியது மாத்திரமல்ல தீர்வுப் பொதி இன்றி வெறும் கையுடன் தென்னிலங்கை அரசியல்வாதிகளுடன் பேச்சுவார்த்தை மேசைக்குச் சென்று வெறும் கையுடனே திரும்பியதுதான் வரலாறு.

இந்த ஒரு பின்னணியில் இன்று 13வது திருத்தத்திற்காக இந்தியாவிடம் மண்டியிட்டு நிற்க வேண்டிய நிலையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு குறிப்பாக தமிழரசுக் கட்சியின் சுய நல அரசியல் இட்டுச் சென்றுள்ளது.

13வது திருத்தம் குறித்து பேசப்படுகின்ற போதும் இந்தியாவை நேக்கிய ஆறு கட்சிகளின் கோரிக்கை கடிதம் 13வது திருத்தத்துக்கப்பாலும் விரிவாக்கம் பெற்று நிற்பதாக கூறப்படுகின்றது.

உண்மையில் தமிழர் தரப்பில் 6 கட்சிகள் இணைந்து ஒரு கோரிக்கையை வைத்திருப்பது ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளைப் பொறுத்தவரையில் மூலோபாய முக்கியத்துவமுடையது என்பதே அரசியல் விமர்சகர்களின் கருத்தாக உள்ளது.

ஈழப் போரும் இந்தியாவும்

ஈழப் போர் முழு அளவில் எழுச்சி பெற இந்தியாவே காரணம் என்பது பரம இரகசியமல்ல. இதற்கும் அப்பால் கடந்த மூன்று நான்கு தசாப்தங்களாக இலங்கை அரசாங்கத்தை கையாள தமிழர்தரப்பை இந்தியா ஒரு கருவியாகப் பயன்படுத்தியது என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை.

இந்த ஒரு பின்னணியில் தமிழ் கூட்டுக் கட்சிகளின் கோரிக்கை தமிழர் தரப்பின் மீதான நம்பிக்கையைக் கட்டி எழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பை இந்தியா மீது சுமத்தியுள்ளது.

1987 ஒப்பந்தம்

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவுக்கும் இடையில் 29.07.1987 அன்று இந்திய இலங்கை உடன்படிக்கை கைச்சாத்தாகியது.

இந்திய இலங்கை உடன்பாட்டில் அதிகாரப் பகிர்வு தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சுருக்கமாக பின்வருமாறு:

1. 1986ம் ஆண்டில் இந்திய மற்றும் இலங்கை அரசுப் பிரதிநிதிகளுக்கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒருங்கிணைந்த ஒரே மாகாண நிர்வாகமாக அமைக்கப்படுதல் வேண்டும்.
3. மாகாண சபை செயற்படத் தொடங்கி ஓராண்டுக்குள் கிழக்கு மாகாணத்தில் ஓர் சர்வசன வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு இணைந்த மாகாணங்கள் தொடர்ந்து இணைந்திருப்பதா அல்லது தனித்தனியாவதா என்பது குறித்து தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.
4. இலங்கை - இந்திய உடன்பாட்டிட்கு அமைவாக சட்டவடிவம் கொடுக்கும்போது இலங்கை அரசு எடுக்கும் முயற்சிகுறித்து இந்திய அரசுடன் கலந்தாலோசித்தே முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.
5. இலங்கை அரசு கொண்டு வரவுள்ள சட்டங்கள் குறித்து முன்னதாகவே இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தி அதன் சம்மதத்தைப் பெறவேண்டும்.
6. சட்ட முன் வரைவுகள் இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தி இந்திய அரசின் சம்மதம் பெறப்படல் வேண்டும்.
7. அத்துடன் இரு சட்ட வரைபுகள் பகிரங்கமாக வெளியிடப்படல் வேண்டும்.
8. இலங்கை இந்திய உடன்பாட்டில் 2ஆம் பகுதியில் 15வது பிரிவில் வரையறுக்காது விட்டுப்போன உரிமைகள் குறித்து இலங்கை இந்திய அரசுகள் கலந்தாலோசித்தே முடிவுகளை மேற் கொள்ளவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

13 வது திருத்தச் சட்டம்

இலங்கை இந்திய உடன்படிக்கையை அடுத்து 1988 இல் 13வது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தது.

1. இலங்கை மீறிய விதிகள்

இவடக்குக் கிழக்குக்கென உருவாக்கப்பட்ட 13வது திருத்தச் சட்டம் வடக்குக் கிழக்குக்கு அப்பாலும் விஸ்தரிக்கப்பட்டது. இதன்மூலம் 8 மாகாண சபைகளை 13வது திருத்தச்சட்டம் மூலம் ஜேஆர் ஜயவர்தனா உருவாக்கினார். சிங்களவர்கள் தனி மாகாணம் கோரவில்லை. ஆனால் சிங்களவர்களுக்கும் சேர்த்தே மாகாணசபைகளை ஜேஆர் உருவாக்கினார்.

அதாவது தமிழர்களுக்குத் தீர்வாக 13வது திருத்தத்தை வழங்க இலங்கை அரசு விரும்பவில்லை என்பதை மிக அழுத்தமாக இந்தியாவுக்கும் தமிழர்களுக்கும் உணர்த்த ஜேஆர் விரும்பியதன் விளைவே இது.



1. இலங்கை இந்திய உடன்பாட்டில் 2ஆம் பகுதியில் 15வது பிரிவில் வரையறுக்காது விட்டுப்போன உரிமைகள் குறித்து இலங்கை இந்திய அரசுகள் கலந்தாலோசித்தே முடிவுகளை மேற் கொள்ளவேண்டும் என குறிப்பிடப்படுள்ளது. ஆனால் இதற்கு மாறாக இலங்கை அரசு தன்னிச்சையாக சட்டங்களை நிறைவேற்றியது.

2. வடக்குக் கிழக்கு இணைப்பை நிர்வாக உத்தரவின் மூலமே ஜே.ஆர். ஜயவர்தனா மேற் கொண்டிருந்தார். இதனை மற்றொரு உத்தரவின் மூலம் ரத்துச் செய்ய முடியும். ஏனெனில் இந்த இணைப்பிற்கு சட்டரீதியான பாதுகாப்பு இல்லை. எனவேதான் ஜேவிபி உச்ச நீதி மன்றத்தை அணுகி வடக்கு கிழக்கு இணைப்பு சட்டரீதியில் செல்லுபடியற்றது என்ற தீர்ப்பைப் பெற்றது.

3. அதிகாரப்பரவலாக்கள் என்ற போர்வையில் கொண்டுவரப்பட்ட மாகாண சபைகள் குறித்த சகல அதிகாரங்களும் இலங்கை நாடாளுமன்றத்திற்கே உள்ளதாக வடிவமைக்கப்பட்டன.

4. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்கென தனி மாகாணம் அமைப்பது என்ற உடன்பாடே காணப்பட்டது. ஆனால் ஜேஆர் சிங்களவர்களுக்கும் அதிகாரப்பகிர்வாக மாகாண சபைகளை உருவாக்கினார்.

5. வடக்கு கிழக்கு இணைந்த மாகாணங்களுக்கான தேர்தல் 1988 அக்டோபரில் இந்திய இராணுவத்தின் மேற் பார்வையில் நடைபெற்றது.

6. 1990 இல் இந்தியப் படை வெளியேறியது

7. 2006 அக்டோபரில் ஜே.வி.பி உச்ச நீதிமன்றில் தொடுத்த வழக்கின்படி வடக்கு கிழக்கு இணைப்பு செல்லாது என தீர்ப்பு வழங்கப்பட்டது.

8. இந்தத் தீர்ப்புக்குப்பின் அவசர அவசரமாக கிழக்கு மாகாணத்திற்கு மாத்திரம் தேர்தல் நடத்தப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குக் கடிதம்

1. 1987 இல் இலங்கை - இந்திய உடன்படிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி முழுமையாக வரவேற்றது.

- எனினும் இலங்கை - இந்திய உடன்பாட்டிற்கு சட்டபூர்வமான வடிவம் கொண்டுவருவதற்காக நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட இரு சட்டங்கள் குறித்து தங்களது அவநம்பிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் சிவசிதம்பரம் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம் துணைத் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் கூட்டாக அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தனர்.

அந்தக் கடிதத்தில் கூறப்பட்டிருந்ததாவது

- இலங்கை - இந்திய உடன்பாட்டிட்கு அமைவாக சட்டவடிவம் கொடுக்கும்போது இலங்கை அரசு எடுக்கும் முயற்சிகுறித்து இந்திய அரசுடன் கலந்தாலோசித்தே முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.
- இலங்கை அரசு கொண்டு வந்த சட்டங்கள் குறித்து முன்னதாகவே இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தி அதன் சம்மதத்தைப் பெறவேண்டும்.
- சட்ட முன் வரைவுகள் இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தி இந்திய அரசின் சம்மதம் பெறப்படல் வேண்டும்.
- அத்துடன் இரு சட்ட வரைபுகளும் பகிரங்கமாக வெளியிடப்படல் வேண்டும். ஆனால் இலங்கை அரசு எதுவுமே செய்யாது தன்னிச்சையாக செயற்பட்டுள்ளது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்தியா மௌனம்

- தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து இந்திய அரசுக்கு கடிதம் மூலம் அறிவித்த போதும் இந்திய அரசு கணக்கில் எடுக்கவில்லை.
- 2006 இல் ஜே.வி.பி உச்ச நீதிமன்றில் தொடுத்த வழக்கின் மூலம் வடக்கு கிழக்கு இணைப்பு சட்டப்படி செல்லாது என தீர்ப்பு வழங்கியது. இந்த விடயத்தில் இந்திய அரசு தலையிடவில்லை. இந்திய இலங்கை உடன்பாட்டுக்கு எதிரான செயல் என இந்திய அரசு கண்டிக்கவும் முன் வரவில்லை.
- அரசியல் சட்டபூர்வமாக வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைக்க வேண்டுமென இந்திய அரசு வற்புறுத்தவும் இல்லை.
- பிரதமர் ராஜீவ் காந்திக்குப் பின் வந்த இந்திய அரசுகளும் தமிழர் விவகாரத்தில் உரிமைகளைக் காக்க முன்வரவில்லை.
- இலங்கை இந்திய உடன்படிக்கையை இலங்கை அரசு அப்பட்டமாக மீறியதை கண்டிக்கவில்லை. ஏன் கண்டு கொள்ளவும் இல்லை.
- ஆனால் தற்போதும் 13வது திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு தமிழ்த் தலைமைகளை இந்தியா வற்புறுத்துகின்றது.
- மறுபுறம் இந்திய அரசின் முக்கிய பொறுப்புக்களில் இருப்பவர்கள் இலங்கையில் என்ன நடைபெறுகின்றது எனபதை முற்று முழுதாக மறைப்பதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றனர் என்ற குற்றச்சாட்டு தமிழகத்தில் இருந்தும் இலங்கைத் தமிழ் மக்கள் தரப்பில் இருந்தும் எழுப்பப்படுவதை இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.

தமிழ்க் கட்சிகளின் கோரிக்கையை அடுத்து

1. இலங்கை அரசு இலகுவில் இந்திய நகர்வுகளுக்கு வளைந்து கொடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.
2. இலங்கை அரசாங்கம் மேற்படி கோரிக்கைக்கு எதிரான நகர்வைத் தொடங்கிவிட்டது.
3. பொருளாதார பொதி குறித்து இந்திய மத்திய அரசுடன் பேசத் தொடங்கிவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வழமைபோல் பேச்சு வார்த்தைக்கு அழைத்துள்ளது.
4. இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட அதிகாரப் பகிர்வு அல்ல அபிவிருத்தியையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்று இந்திய நாளிதலுக்கு வழங்கியுள்ள செவ்வியில் கூறியுள்ளார்.
5. நாட்டில் டொலர் பற்றாக் குறை. எரி பொருளுக்கு தட்டுப்பாடு நீண்ட வரிசை என நாடே வரிசையில் நிற்கின்றது.

**(தொடர்ச்சி 17ம் பக்கம்)**

# இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை முஸ்லிம், தமிழ் சமூகத்திற்கெதிராக பயன்படுத்துகிறது

இலங்கை செய்திகள் Sri Lanka News

## ஐ.நா. கூட்டத்தொடரில் கவிஞர் அஹ்னாப் ஜெஸீம்



பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்திருந்த போது உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் கடுமையான முறையில் துன் புறுத்தப்பட்டேன் என கவிஞர் அஹ்னாப் ஜெஸீம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரின் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமை பேரவையின் இணை அமர்வொன்றில் இணையத்தளம் ஊடாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அஹ்னாப் ஜெஸீம் இவ்வாறு தெரிவித்தார்.

அஹ்னாப் ஜெஸீம் மேலும் இங்கு உரையாற்றுகையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தனது 49 ஆவது கூட்டத் தொடரின் நிகழ்வில் எனக்கு உரையாற்ற சந்தர்ப்பம் வழங்கியமைக்கு நான் எனது நன்றிகளை சமர்ப்பிக்கின்றேன்.

நான் இலங்கையின் கொடிய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தினால் (PTA) அதிகம் பாதிப்புக்குள்ளானவன். வஞ்சிக்கப்பட்டவன். இச்சட்டம் நாட்டின் மனித உரிமைகளை பலியெடுக்கிறது. நான் இச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டேன். எனது சுதந்திரம் ஜனநாயக உரிமை 19 மாதங்களாக பிடுங்கி எடுக்கப்பட்டது.

இத்தனைக்கும் தமிழ் கவிதைகள் அடங்கிய “நவரசம்” என்ற பெயரிலான ஒரு நூலை எழுதி வெளியிட்டமையே இதற்கு காரணம். நான் எனது மாணவர்களுக்கு தீவிரவாதத்தினைப் போதித்தாகவே என்மீது குற்றம் சுமத்தப்பட்டது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவு (TID) என்னை முதலில் கைது செய்தது. ஆரம்பத்தில் என்னை ஒரு வருட காலம் தடுத்து வைத்திருந்தார்கள். அதன் பின்பு என்னை மேலும் 7 மாதங்கள் சிறையில் வைத்தார்கள். அங்கே நான் உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் கடுமையான முறையில் துன்புறுத்தப்பட்டேன்.

நான் சிறையில் அவமானப்படுத்தப்பட்டேன். தரக்குறைவாக நடத்தப்பட்டேன். மிருகத்தனமான முறையில் துன்புறுத்தப்பட்டேன். அதிகாரிகள் என்னை குற்றத்தை ஒப்புக் கொள்ளச் செய்வதற்காக பலவந்தப்படுத்தினார்கள். குற்றத்தை ஒப்புக் கொள்ளும் வகையில் வாக்கு மூலம் பெற்றுக் கொள்ள முயற்சித்தார்கள்.

நான் நிரபராதி, குற்றமற்றவன், எனக்கெதிரான குற்றச்சாட்டுகள் போலியானவை என திரும்பத்திரும்ப வாதிட்டேன். இலங்கை முஸ்லிம்களுக்கெதிரான இலங்கை அரசாங்கத்தின் செயற்திட்டத்தில் நான் ஓர் முக்கியமானவன்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாட்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதலையடுத்தே இந்நிலைமை ஏற்பட்டது. இந்த தாக்குதலைக் கண்டித்து நான் கவிதையொன்றினை வெளியிட்டேன். தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு அடுத்த தினமே கவிதையை வெளியிட்டேன்.

இஸ்லாமிய இராச்சியமோ அல்லது ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்போ உண்மையான இஸ்லாத்தின்படி இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ள முடியாது என்று குறிப்பிட்டிருந்தேன்.

எனக்குத் தெரியும், நூற்றுக்கணக்கான தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள் இந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இச்சட்டத்தின் கீழ் பொய்யான அல்லது சிறிய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் மாதக்கணக்கில், வருடக்கணக்கில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இலங்கை அரசாங்கம் இச்சட்டத்தை நாட்டின் முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகத்துக்கு எதிராக பயன்படுத்துகிறது. யுத்த வெற்றிக்குப் பின் இலங்கை மக்களை இன ரீதியில் பிளவுபடுத்த முயல்கிறது.

இலங்கை அரசாங்கம் 1988-1990 சிங்கள இளைஞர்களின் போராட்டத்தின் போது இச்சட்டத்தைப் பயன்படுத்தியது. இதேபோன்று 30 வருட தமிழர்களுக்கு எதிரான போரின்போது இச்சட்டத்தை பயன்படுத்தியது.

பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக இல்லாதொழிக்க பட வேண்டுமென்றே நான் கூறுகிறேன். இச்சட்டம் மாற்றீடு செய்யப்படக்கூடாது.

பயங்கரவாதம் அல்லது அடிப்படைவாதம் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படுவதன் மூலமும் அனைவருக்கும் பொருளாதார உரிமைகள் வழங்கப்படுவதன் மூலமே இல்லாமற் செய்யமுடியும்.

அனைத்து அரசியல் கைதிகளும் நிபந்தனைகளின்றி உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என நான் கோரிக்கை விடுக்கிறேன். அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் முழுமையாக வாபஸ் பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

எனது நாட்டின் அனைத்து சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் மற்றும் உலகெங்குமுள்ள சகோதர சகோதரிகள் அனைவரும் எங்களது ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள அணித்திரளுமாறு கோருகிறேன்.

அனைத்து நிறுவனங்களும் மற்றும் தனியார்களும் இது தொடர்பில் ஒன்றிணைந்து செயற்படுமாறு மன்றாடிக்கேட்டுக் கொள்கிறேன் எனக்குறிப்பிட்டுள்ளார்.

# கச்சத்தீவு வருடாந்த திருவிழாத் திருப்பலி நிகழ்வு...



யாழ்ப்பாணம் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாத் திருப்பலி நிகழ்வு 12.03.2022 சனிக்கிழமை காலை யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

கொடியேற்றத்தை அடுத்து சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சொரூப பவனி ஆகியன இடம்பெற்றன. இத்திருவிழாவிற்கு இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களே வருகை தந்ததுடன் குறித்த நிகழ்வில் உணர்வுபூர்வமாக கலந்து கொண்டனர்.



மேலும் இவ் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந் நிகழ்வில் வடமாகாண கடற்படை தளபதி பிரியந்த பெரேரா, ஓய்வுபெற்ற கடற்படை தளபதி அட்மிரல் விஜேகுணரட்ண, யாழிற்கான இந்திய துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜகத் பளிகக்கார, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் கே.விமலநாதன், நெடுந்தீவு பிரதேச செயலர் சத்தியசோதி மற்றும் மதகுருமார்கள், கடற்படை இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் பக்தர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.





**- மன்னார் நிருபர்**

# நாட்டின் தற்போதைய சூழ் நிலையில் வீண் களியாட்ட நிகழ்வுக்கு மன்னார் நகர சபை அனுமதி

## சமூக ஆர்வலர்கள் விசனம்




மன்னார் மாவட்டம் முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வியாழக்கிழமை (10) மதியம் தொடக்கம் வீதி முழுவதும் வாகனங்கள் எரிபொருள் நிரப்புவதற்காக ஒரு புரம் வரிசையில் காத்திருக்க மறுபுரம் கேஸ், மற்றும் மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்வதற்காக பொதுமக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நின்று வருகின்றனர். தொடர்ச்சியாக பொருளாதார நெருக்கடி மற்றும் பொருட்களின் விலையும் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் மக்கள் கடும் நெருக்கடியில் வாழ்ந்து வருகின்ற போது மன்னார் நகர சபை இவற்றைக் கணக்கில் கொள்ளாது வீண் களியாட்ட நிகழ்வுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

அதே நேரம் கொரோனா தொற்றும் மன்னார் மாவட்டத்தில் அதிகரித்து வருகின்ற நிலையில் அதிகளவான மக்களை ஒன்று கூட்டும் விதமாக மன்னார் நகர் மத்திய பகுதியில் களியாட்ட நிகழ்வுக்கு மன்னார் நகரசபை அனுமதி வழங்கியுள்ளது. குறித்த விடயம் குறித்து சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.








மன்னார் சைனா பஜார் வளாகம் மற்றும் பேருந்து நிலையம் முழுவதும் ஒலிபெருக்கிகளை பொருத்தி களியாட்ட நிகழ்வு இடம் பெற்று வருகின்ற நிலையில் அதன் எதிர் பகுதியில் மக்கள் பெற்றோலுக்காகவும் மண்ணெண்ணெய்கவும் வரிசையில் நிற்கும் அவலம் மன்னாரில் அரங்கேறி வருகிறது.

**- (மன்னார் நிருபர்)**

# வடக்கு மீனவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு இந்திய தூதரகம் தனது ஒத்துழைப்பை வழங்கும்

## இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் திரு கோபால் பால்கே

வடக்கு மீனவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு இந்திய தூதரகம் தனது ஒத்துழைப்பை வழங்கும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் திரு. கோ-பால் பால்கே தெரிவித்தார்.

வடக்கு மீனவர்களிற்கு உதவி திட்டங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கடற்தொழில் அமைச்சர் இலங்கை இந்திய உறவு பாலம் தொடர்ந்து நீடிக்கப்பட வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாகஇருக்கிறார் நான் அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கை இந்திய உறவுக்கு மிகவும் பக்கபலமாக இருப்பதோடு இலங்கை மற்றும் இந்திய மக்களின் உறவு பாலமாக இருந்து செயற்பட்டு வருகின்றார்.

அரசியல் ரீதியான உறவு பாலம் மட்டுமல்ல இந்தியா இலங்கை மக்களுக்கிடையிலான ஒற்றுமைக்கும் உறுதியாக செயற்படுகிறார். இம்முறை கச்சதீவி உற்சவத்தினை திறம்பட செயற்படுத்துவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியமைக்கு கடற்தொழில் அமைச்சருக்கு நன்றியை தெரிவிக்கின்றேன்.

இம்முறை கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்தின் நடத்துவதற்கு இலங்கை மற்றும் இந்திய பக்தர்கள் கலந்து கொண்டு உற்சவத்தினை சிறப்பாக நடத்துவதற்கு ஒத்துழைத்த கடற்தொழில் அமைச்சர் மற்றும் யாழ் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட துறையினருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.



இந்தியா ஒரு உங்களுடைய உண்மையான ஆரவத்தோடு உங்களுடைய சகோதர நாடு உங்களுக்காக என்றும் அக்கறையுடன் செயற்படும் கொரோ-னா பாதிப்பு இலங்கை இந்தியாவை மட்டும் பாதிக்கவில்லை உலக நாடுகள் அனைத்தையும் பாதித்துள்ளது பல்வேறு நாடுகளில் கொரோனா நோய் தாக்கத்தை ஏற்படுத்தி பல்வேறு பொருளாதார ரீதியான தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையும் இந்தியாவும் இருவரும் இணைந்து இந்த கோரணா பாதிப்புகளில் இருந்து மீளுவதற்கு முயற்சித்து போராடுகின்றோம். இது இரண்டு நாடுகளுக்கும் உரிய ஒரு சிறப்பம்சமாகும்.

இலங்கையும் இந்தியாவும் ஒருவருக்கு ஒருவர் உதவி இந்த கொரோனாவிலிருந்து முன்னேறுவதற்கு செயற்பட்டதன் மூலம் நமது இலங்கை இந்தியாஉறவானது அதன்மூலம் பன்மடங்கு அதிகரித்துள்ளது. நாங்க முதல் கட்டமாகயாழ்ப்பாண மீனவர்களுக்கான உதவித் திட்டத்தை வழங்கியுள்ளோம் மீனவ சங்க பிரதிநி-திகள் கொடுக்கப்பட்ட கோரிக்கைகள் துணை தூதரகம் என்ற அடிப்படையிலும் இந்திய நாடு என்ற அடிப்படையிலும் அதற்குரிய தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்கு நாங்கள் முயற்சிக்கிறோம்.



எதிர்காலத்தில் இந்திய அரசின் உதவித் திட்டங்கள் பன்மடங்கு அதிகரித்து பல்வேறு உதவி-களை வழங்குவோம் அத்துடன் உதவித் திட்டத்தை விரிவுபடுத்த தீர்மானித்துள்ளோம்.

ஏற்கனவே பலதடவை யாழ் மாவட்ட மீனவ சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலரை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினேன். அதிலிருந்து நான் ஒன்றை புரிந்து கொள்கின்றேன் அந்த பிரச்சனையை தீர்க்க வேண்டியது கட்டாயமானது. இந்த மாதிரியான பிரச்சனைக்கு பேச்சுவார்த்தைகள் நடாத்தி அத்தோடு அரசு தரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தி மீனவ பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

இந்திய துணைத் தூதரகம் என்ற ரீதியில் மீனவபிரதிநிதிகளின் பிரச்சினை தொடர்பில் அதனை தீர்ப்பதற்கு உறுதியாக இருக்கின்றோம். இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு முதலீட்டாளர்களை முதலீடு வைத்து மீன்பிடி சம்பந்தமான முதலீடுகளை இங்கே முதலிட வைத்து அவ்வாறான முதலீடுகளை முதலி-டுவதன் மூலம் மீனவர் சமூகங்களுக்கு அதன் மூலம் வருமானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றோம் அது தொடர்பில் நான் யாழ்ப்பாண இந்திய துணை தூதுவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன் அது தொடர்பில் நானும் எனது அனுசரணையை வழங்க உள்ளேன்.

அனைவரும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளேன் அத்தோடு வெகு விரைவில் எமது அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள கலாச்சார மத்திய நிலையம் திறந்து வைக்கப்பட உள்ளது அத்தோடு கலாச்சார மத்திய நிலையத்தை இரண்டு நாடுகளும் இணைந்து எவ்வாறு நிர்வகிப்பது தொடர்பில் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தி இருக்கிறோம்.



# மன்னார் மக்கள் போராட்டத்திற்கு மத்தியில் அவுஸ்திரேலிய நிறுவனம் வெளியேறியது

**தொ**டரும் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் கனிய மணல் அகழ்வை நிறுத்திவிட்டு இயந்திரங்களுடன் மன்னார் தீவை விட்டு வெளியேற வெளிநாட்டு நிறுவனம் ஒன்று தீர்மானித்துள்ளது.

"மக்களின் பாதுகாப்பைக் குலைக்கும் வகையில் நாங்கள் மணல் அள்ளவில்லை. உரிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு நாங்கள் பணியாற்றி வருகிறோம், பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் பட்சத்தில் மணல் அள்ளுவதை நிறுத்திவிட்டு இயந்திரங்களுடன் தீவை விட்டு வெ-ளியேறுவோம்" என அவுஸ்திரேலிய நிறுவனம் ஒன்றின் இலங்கைப் பிரதிநிதி எஸ்.சாலியா தெரிவித்துள்ளார்.

கனிய மணல் ஆராய்ச்சி மற்றும் அகழ்வாராய்ச்சியால் மன்னார் தீவுக்கும், மக்களின் வாழ்விலும் சுற்றுச்சூழலிலும் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆலோசிப்பதற்காக மன்னார் பிரஜைகள் குழுவினால் அண்மையில் மாநகர சபை கேட்போர் கூடத்தில் கூட்டப்பட்ட கூட்டத்தில் அவுஸ்திரேலிய நிறுவனத்தின் பிரதிநிதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விரைவில் செல்ல வேண்டும்

சுற்றாடல், மனித உரிமைகள், கடற்றொழில், விவசாயிகள் மற்றும் கிராம அமைப்புக்கள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட மன்னார் பிரஜைகள் குழு தீர்மானத்தை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு கோரியுள்ளது.

தீவில் பெரிய அளவிலான மணல் அகழ்வினால் குறிப்பிடத்தக்க உப்பு நீர் கசிவு மற்றும் குடிநீரில் மாசு ஏற்பட்டது. கடற்றொழில் மற்றும் ஏனைய பிர-தான தொழில்களை வாழ்வாதாரமாகக் கொண்ட பல்லாயிரக்கணக்கான தீவு-வாசிகளின் வாழ்க்கை சீர்குலைந்து வருவதாக மன்னார் சுற்றாடல் பாதுகாப்பு அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

"பாரம்பரிய மீன்பிடித் தளங்கள் மற்றும் வாழ்வாதாரங்களின் அழிவு, கிணறுகள் மற்றும் நிலத்தடி நீரின் உவர்நீர் தன்மை அதிகரிப்பு, பழங்கால பனைக்காடுகளின் அழிவு, புலம்பெயர்ந்த பறவைகளின் வாழ்விடங்களின் அழிவு மற்றும் சுற்றுலாத் துறையின் இழப்பு போன்ற பல சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார விளைவுகள் உள்ளன. மன்னாரின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கு சேதங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் சகோ.ஏ.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

மன்னார் தீவைச் சுற்றியுள்ள மணலில் இல்மனைட், ரூட்டைல், கார்னெட் மற்றும் சிர்கான் போன்ற தாதுக்கள் சுமார் 265 மில்லியன் தொன்கள் இருப்பதாக அவுஸ்திரேலிய டைட்டேனியம் சேனட் (TSL) நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது. இந்த கனிமங்கள் விமானம் மற்றும் வண்ணப்பூச்சு பொருட்கள் உட்பட பல தொழில்களில் பயன்படுத்தப்படுகின்றன.

குடிமக்கள் குழு கூட்டத்தில், தனியார் நில உரிமையாளர்களின் அனுமதியின்றி, 4,000ற்கும் மேற்பட்ட மணல் அள்ளும் குழிகளை, 12 மீட்டர் ஆழம் கொண்டதாக, அந்நிறுவனம் தோண்டியுள்ளதாக, அறிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், அவுஸ்திரேலிய டைட்டேனியம் சேன்ட் நிறுவனத்தின் தகவல்களுக்கு அமைய, மன்னாரில் மணல் அகழ்விற்காக வழங்கப்பட்ட உரிமம் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தால் மே 4, 2021 முதல் மேலும் இரண்டு வருடங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளதாக மன்னார் தீவு கனிய மணல் திட்டத்தில் இலங்கை நிறுவனமான Kilsight Exploration தெரிவித்துள்ளது.

ஏற்கனவே 63% நிலப்பரப்பு கடல் மட்டத்திற்கு கீழே மூழ்கியுள்ள மன்னார் தீவில் மணல் அகழ்வு நிறுத்தப்படாவிட்டால், சுற்றாடலுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தை சீர்செய்ய முடியாது என எச்சரித்து, மன்னார் சுற்றாடல் பாதுகாப்பு அமைப்பு, அதனை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை வலியுறுத்துமாறு உள்ளூர் மற்றும் சர்வதேச ஆதரவுடன் மனுவொன்று ஆரம்பித்துள்ளது.

https://www.change.org/p/his-excellency-gotabaya-rajapaksa-president-of-the-democratic-socialist-republic-of-sri-lanka-stop-planned-sand-mining-that-threatens-mannar-island-s-fragile-eco-system




மக்களின் உயிருக்கும் சுற்றுச்சூழலுக்கும் ஆபத்தை விளைவிக்கும் வகையில் மன்னார் தீவில் மணல் அகழ்வது குறித்து அவுஸ்திரேலிய நாடாளுமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

"டைட்டேனியம் சேன்ட்ஸ் அஸ்திரேலிய நிறுவனம், அவுஸ்திரேலிய வணிகங்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்தக்கூடிய இத்தகைய அழிவுகரமான திட்டங்களைத் தொடர வேண்டாம் என அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்" என செனட்டர் ஜேனட் ரைஸ் 12 நவம்பர் 2020 அன்று அவுஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கோட்டாபய ஏன் கூட்டமைப்பைப் பேச அழைக்கிறார்?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



கடந்த புதன்கிழமை கோட்டாபய கூட்டமைப்பைச் சந்திக்க நேரம் ஒதுங்கியிருந்தார். எனினும் அன்றைய தினம் ஐக்கிய மக்கள் சக்தி நடத்திய ஆர்ப்பாட்டம் காரணமாக சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது.அது இருபதாம் திகதிக்குப் பின் இடம்பெறலாம் என்று தெரிகிறது. இச்சந்திப்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான டெலோ கலந்து கொள்ளப்போவதில்லை என்று அறிவித்திருந்தது. அதற்கு டெலோ ஒரு விளக்கக் கடிதத்தை ஏற்கனவே அனுப்பியிருந்தது.

பதவியேற்றதிலிருந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக கோத்தாபய கூட்டமைப்போடு பேசப் போவதாக இடைக்கிடை கூறி வருகிறார். ஆனால் இன்று வரையிலும் பேச்சுவார்த்தைகள் நடக்கவில்லை. இம்முறை பேச்சுவார்த்தை கடைசி வேளை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. முன்னைய அழைப்புக்களைப் போலன்றி இம்முறை பேச்சுவார்த்தை மெய்யாகவே நடக்குமாக இருந்தால், ஜனாதிபதி அவ்வாறு பேச முன் வருவற்கு சுட்டிப்பாக பின்வரும் காரணங்கள் இருக்க முடியும்.

இலங்கைத் தீவு மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறது. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இந்தியா குறிப்பிட்ட தொகையை கடனாக வழங்கியிருக்கிறது. அதற்கு பிரதியுபகாரமாக திருகோணமலையில் சம்பூரில் மீளப் புதுப்பிக்கும் எரிசக்தி திட்டம் ஒன்றை நிறுவுவதற்கு ஒரு இந்திய நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதுபோலவே மன்னாரிலும் பூநகரியிலும் இருவேறு மின்சக்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு இந்தியாவின் அதானி குழுமத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதாவது இந்தியா கடனைக் கொடுத்து கொழும்பின் மீது தனது பிடியை இறுக்கி வருகிறது. இதன் விளைவாக இந்திய அரசாங்கத்தை திருப்திப்படுத்த வேண்டிய ஒரு நிலைமை அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கலாம். குறிப்பாக இனப்பிரச்சினை தொடர்பில் இந்திய அரசாங்கம் என்ன கேட்கிறது? 13வது திருத்தத்தை அடிப்படியாக வைத்து ஒரு தீர்வை வழங்குமாறு கேட்கிறது. உடனடிக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமென்றும் கேட்கிறது. எனவே இது விடயங்கள் தொடர்பாக தமிழ்த் தரப்புடன் ஒரு சமரசத்துக்கு வருவது போன்ற ஒரு தோற்றத்தை காட்ட வேண்டிய தேவை இலங்கை அரசாங்கத்துக்கு உண்டு.

மேலும், இம்மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்குபற்றுறுவதற்காக இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் கொழும்புக்கு வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பு உண்டு. இந்திய பிரதமர் மோடியும் கொழும்புக்கு வரக்கூடும் என்ற ஊகங்கள் அதிகமாக உள்ளன. அவர் இந்தியாவில் இருந்து நேரடியாக யாழ்ப்பாணத்துக்கு வருவார் என்றும் பலாலி விமான நிலையத்தில் இறங்குவார் என்று ஊககங்கள் உண்டு. ஆனால் இந்தியா தனது பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சரின் இலங்கை விஜயத்தை இன்றுவரையிலும் உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கவில்லை.

இலங்கைத்தீவின் வடபகுதியோடு இந்தியாவை இணைக்கும் மூன்று அபிவிருத்தித் திட்டங்களை இந்தியா ஏற்கனவே முன்மொழிந்தது. பலாலி விமான நிலையம், காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கும் இடையிலான படகுப் போக்குவரத்து, மூன்றாவது யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுள்ள கலாச்சார மண்டபம்.

இதில் பலாலி விமான நிலையம் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் அவருடைய பதவிக் காலம் முடியும் கடைசிநேரத்தில் அவசர அவசரமாகத் திறக்கப்பட்டது. அடுத்த தேர்தலில் ராஜபக்சக்கள் வெல்ல கூடும் என்ற எதிர்பார்ப்பின் பின்னணியில் இந்தியாவின் தூண்டுதலால் ரணில் அவ்வாறு அவசர அவசரமாக பலாலி விமான நிலையத்தை திறந்தார் என்று அப்பொழுது கருதப்பட்டது. அது ஒரு மிகச் சிறிய விமான நிலையம். உள்ளூர் போக்கு வரத்துக்குரிய வசதிகளைத்தான் கொண்டிருக்கிறது. 70 பயணிகள் பயணம் செய்யக்கூடிய சிறிய விமானங்கள்தான் அதில் வந்து இறங்கலாம். எனவே விமான நிலையத்தை அடுத்தகட்டத்துக்கு விஸ்தரித்து பன்னாட்டு விமானச் சேவைகளை தொடங்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்த்தது. அதற்கு வேண்டிய நிதியையும் இந்தியா வழங்கக் காத்திருக்கிறது. ஆனால் பெருந்தொற்று நோயைக் காரணம் காட்டி கோத்தாபய அரசாங்கம் விமான நிலையத்தை திறப்பதை தொடர்ந்து ஒத்திவைத்து வருகிறது.

கடந்த ஜனவரி மாதம் 10ஆம் திகதி அந்த விமான நிலையம் மறுபடியும் இயங்கத் தொடங்கும் என்று முன்பு அறிவிக்கப்பட்டது. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. இப்படி பல தடவை அறிவிக்கப்பட்டுவிட்டது. இலங்கை அரசாங்கம் அந்த விமான நிலையத்தை விஸ்தரிக்கும் திறப்பதற்கும் பின்னடிக்கின்றது. ஏனெனில் பலாலி விமான நிலையம் அமைந்திருப்பது இலங்கைத்தீவின் வட பகுதி இராணுவ தலைமையகத்தில் ஆகும். வடபகுதி படைத்துறை கட்டமைப்பின் இதயமான பகுதியில் ஒரு விமான வழியைத் திறப்பது என்பது அதன் தர்க்கபூர்வ விளைவுகளைப் பொறுத்தவரை ராணுவமய நீக்கம்தான். ஏனெனில் ஒரு படைக் கட்டமைப்பின் கேந்திரமான இடத்தில் சிவில் போக்குவரத்தை அனுமதிப்பது என்பது அவ்வாறான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும். எனவே இந்த விடயத்தை இலங்கை அரசாங்கம் தன் படைத்துறை நோக்கு நிலையிலிருந்தே பார்க்கும். அதனால்தான் விமான நிலையத்தை விஸ்த்தரிப்பதற்கும் திறப்பதற்கும் பின்னடிக்கிறது.

அடுத்தது காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கும் இடையிலான பயணிகள் போக்குவரத்து கப்பல் சேவை. இது விடயம் தொடர்பாக கடந்த ஆண்டு மார்ச் மாதம் இரண்டு கொம்பனிகளுக்கு இடையே ஓர் உடன்படிக்கை எழுதப்பட்டது. அதற்குத் தேவையான பெரிய கப்பல்கள் இப்பிராந்தியத்தில் இல்லை என்றும் அவை பிராந்தியத்துக்கு வெளியிலிருந்து வாடகைக்கு எடுக்கப்படும் என்றும் துறைசார் நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள். அவ்வாறான படகுச் சேவை ஒன்றை தொடங்குவதற்கான வர்த்தக உடன்படிக்கை ஒன்று இலங்கை மற்றும் இந்திய கொம்பெனிகள் இரண்டுக்கிடையே கடந்த ஆண்டு மார்ச் மாதம் எழுதப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை மிகவும் பாராட்டி பாரதிய ஜனதாவின் தமிழ்நாடு முக்கியஸ்தரான வானதி சீனிவாசன் தனது ருவிட்டரில் ஒரு குறிப்பை போட்டிருந்தார். அவர் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினரும் கூட. அக்கப்பல் சேவையை எதிர்பார்த்து காரைக்கால் துறைமுகம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. கப்பல் சேவையை தொடங்குமாறு தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் மட்டும் கேட்கவில்லை. அரசாங்கத்தோடு நிற்கும் வியாழேந்திரன் போன்றவர்களும் கேட்கின்றார்கள். கடந்த ஆண்டு வியாழேந்திரன் பாண்டிச்சேரிக்கு ஒரு விஜயத்தை மேற்கொண்டார். அங்கே வைத்து அவர் ஊடகவியலாளர்களிடம் அவ்வாறு தெரிவித்தார். இந்திய அரசாங்கம் அவ்வாறான கோரிக்கை முன்வைக்குமாறு வெவ்வேறு நிலைப்பாடுகளை கொண்ட அரசியல்வாதிகளை ஊக்குவித்து வருகிறதா?

ஆனால் இலங்கை அரசாங்கம் அதற்கு இன்றுவரை உடன்படவில்லை. பலாலி விமான நிலையத்துக்கு சொன்ன அதே காரணம் இதற்கும் பொருந்தும். ஏனெனில் காங்கேசன்துறை என்பது வடபகுதி ராணுவ படைக் கட்டமைப்பின் கேந்திரமான இடத்தில் காணப்படும் ஒரு துறைமுகம் ஆகும். அதை சிவில் போக்குவரத்துக்கு திறந்து விட்டால் அதுவும் நீண்ட கால நோக்கில் அப்பகுதியை ராணுவ மயநீக்கம் செய்துவிடும். எனவே இலங்கை அரசாங்கம் அதற்கு பின்னடிக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்திய பிரதமர் இலங்கைக்கு வருவதாக இருந்தால் மேற்கண்ட திட்டங்களை அவற்றின் அடுத்த கட்டத்திற்கு நகர்த்துமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்பாரா? அதற்கு இலங்கை அரசாங்கம் சாதகமான சமிக்கைகளை காட்டாது என்ற ஒரு எதிர்பார்ப்பிருந்தால், மோடி இலங்கைக்கு வருவாரா?

மோடியின் வருகை ஜெய்சங்கரின் வருகை போன்றன இன்றுவரையிலும் ஊகங்கள் தான். ஆனால் நெருக்கடி காலத்தில் இந்தியா இலங்கைக்கு கடன் கொடுக்கிறது. அதற்கு பிரதியுபகாரமாக இலங்கை எதையாவது செய்ய வேண்டும். அந்த அடிப்படையில் கூட்டமைப்பை ஜனாதிபதி அழைத்திருக்கலாம்.

இரண்டாவதாக ஜநாவில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ஒரு தகவல் திரட்டும் பொறிமுறை உருவாக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவா தீர்மானத்தின்படி இப் பொறிமுறை உருவாக்கப்படவிருக்கிறது. இப்பொறிமுறை இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான சான்றுகளை திரட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இலங்கை அரசாங்கத்திற்கு சார்பான சீனாவும் பாகிஸ்தான் போன்ற நாடுகளும் மேற்படி பொறிமுறையை பலவீனப்படுத்தும் விடயத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறியிருப்பதாக கருதப்படுகிறது. அப்பொறிமுறையின் செயற்படு காலம் முன்பு ஒரு வருடம் என்று அறிவிக்கப்பட்டது. இப்பொழுது ஆறு மாதங்களாக குறைக்கப்பட்டிருக்கிறது. அதன் அங்கத்தவர் எண்ணிக்கை முன்பு 12 என்று கூறப்பட்டது. இப்பொழுது எட்டாகக் குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பொறிமுறையைத் தரம் குறைப்பதில் இலங்கையும் அதன் நண்பர்களும் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள்.

அதோடு உள்நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திருத்தப் போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. மேலும் அச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒரு தொகுதி கைதிகளை விடுதலை செய்திருக்கிறது. நிலைமாறுகால நீதியின் கீழ் உருவாக்கப்பட்ட கட்டமைப்புகளுக்கு புதிதாக நிதியை ஒதுக்கி அவை வினைத்திறனோடு செயற்படுவதாக ஒரு தோற்றத்தையும் கட்டியெழுப்பி வருகிறது. இவற்றின்மூலம் ஜநாவைச் சமாளிக்கலாம் என்று அரசாங்கம் நம்புகின்றது.

இந்த அடிப்படையில்தான் கூட்டமைப்பை சந்திப்பது என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும். அதன் மூலம் நல்லிணக்கத்துக்கு தயார் என்று ஒரு செய்தியை அவர் ஜநாவுக்கும் வழங்கலாம், இந்தியாவுக்கும் வழங்கலாம். எனவே இப்போது இருக்கும் நெருக்கடிகளின் பின்னணியில், இந்தியாவையும் ஜநாவையும் சமாளிக்கும் நோக்கத்தோடு கோத்தாபய கூட்டமைப்பை சந்திக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்.அனைத்துலக அரங்கில் நெருக்கடிகளைக் குறைப்பதே அவருடைய இந்த அழைப்பின் நோக்கம். ஆனால் நாட்டுக்கு வெளியே அவர் நெருக்கடிகளை தணிக்க முயற்சித்துக் கொண்டிருக்க,நாட்டுக்குள்ளேயோ நெருக்கடிகள் அதிகரிக்கின்றன. அந்த நெருக்கடி காரணமாகத்தான் கூட்டமைப்புடனான புதன்கிழமை சந்திப்பு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

## வீணாவின் கவிக்கணை

உன் வெற்றிக்கும் தோல்விக்கும்
உன் பெற்றோரையோ சுற்றத்தாரையோ
சுட்டிக்காட்டாதே,
உன் வெற்றிக்கும் தோல்விக்கும்
நீயே காரணம் என்று உறுதியாக இரு,
துன்பம் வரும்,
உடனே துவண்டு போகாதே,
இன்பம் வரும்,
அதற்காக அளவுக்கு அதிகமாக
மகிழ்ந்து விடாதே,
தோல்வியின் மறுபக்கம் வெற்றி என்பதையும்
துன்பத்தின் மறுபக்கம் இன்பம் என்பதையும்,
உணர்ந்தால் தான், பூமி சுழல்வது போல்
நம் வாழ்க்கையும் சுழலுகிறது என்பதுணர்வாய்.

# தமிழ் மணம் - இளையர்களிடையே தமிழ் ஆர்வத்தைத் தூண்டும் நிகழ்ச்சி

இளையர்கள் மற்றும் குழந்தைகளிடையே தமிழ் ஆர்வத்தைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்டு "தமிழ் மணம்" என்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது, சிங்கப்பூரில் செயல்படும் அண்ணாமலை பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்கம். சனிக்கிழமை, பிப்ரவரி 26ம் தேதி இணைய வழி நடந்த இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக, தேசிய நூலக வாரியத்தின் தமிழ் மொழிச் சேவைகள் பிரிவின் தலைவர் திரு அழகிய பாண்டியன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியதோடு, பங்கேற்றவர்களுடன் கலந்துரையால் மூலமாக அவர்களின் கேள்விகளுக்கும் பதில் அளித்தார்.

நிகழ்ச்சியின் துவக்கமாக அண்ணாமலை பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்கத்தின் தலைவர் திரு. சௌந்தர ராஜன் வரவேற்புரை வழங்க, துணைத்தலைவர் திரு. முத்துமாணிக்கம் இந்த முயற்சியின் குறிக்கோள் பற்றி விவரிக்க, நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்த பேராசிரியர் முனைவர் சுப. திண்ணப்பன், இளையர்கள் மற்றும் குழந்தைகளிடையே தமிழ் ஆர்வத்தைத் தூண்டும் இந்த நிகழ்ச்சியைப் பாராட்டியதோடு, அவர்களுக்காக நன்னெறி ஒன்றை திருக்குறளில் இருந்து மேற்கோள் காட்டி எடுத்துரைத்தார். தமிழ் மணம் என்ற தலைப்பு, தமிழைப் பரப்புகின்ற நோக்கத்துடன் எவ்வளவு ஒன்றிப்போயிருக்கின்றது என்பதைப் பற்றிப் பேசிய அவர், தமிழிலே இருக்கக்கூடிய மூன்று "ந"கரங்களுக்கிடையேயான (ண, ன, ந) சிறப்பு பற்றியும் சுவையாக எடுத்துரைத்தார்.

நிகழ்ச்சியின் அங்கமாக குழந்தைகள், இளையர்கள், மற்றும் பெரியவர்கள் அனைவருக்கும் அவர்களது தமிழ் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பு அளிக்கப்பட்டது. பாட்டுப் பாடியும், கதை சொல்லியும், புத்தக விமர்சனம் செய்தும், மேலும் பல்வேறு விதமாகவும், தங்களின் தமிழ் திறமையை வெளிக்காட்டினர் பங்கேற்பாளர்கள்.

திரு அழகிய பாண்டியன் தனது சிறப்புரையில், தமக்கு எவ்வாறு தமிழ் மீது ஆர்வம் ஏற்பட்டது என்பது பற்றியும், அதற்கு அவரது தந்தை எவ்வளவு ஊக்கமளித்தார் என்பது பற்றியும் சுவையாக விவரித்தார். அதே ஆர்வம் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் கணினி அறிவியல் பட்டம் பெற்ற அவரை பின்னர் எவ்வாறு உந்திச்சென்று தொலைக்காட்சி, வானொலி, நூலகம் என்று தமிழ் சம்பத்தப்பட்ட துறைகளிலே முழு நேர வேலையை அமைத்துக் கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது என்பதைப் பகிர்ந்து கொண்டபோது, பங்கேற்ற இளையர்களின் தமிழ் மீதான பார்வை விசாலமாக விரிந்தது. தேசிய நூலக வாரியம் தமிழுக்காக தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கும் சேவைகள் பற்றி எடுத்துரைத்த அவர், அண்ணாமலை பல்கலைக்கழக முன்னாள் மாணவர் சங்கம், வாரியத்துடன் கைகோர்த்து நூல் குறிப்பு எழுதி, ஞாயிறு தோறும் தமிழ் முரசு நாளிதழில் வெளிவருவதற்கான தொண்டூழியம் பற்றியும் குறிப்பிட்டு தனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

நிகழ்ச்சியின் இறுதியில் ஏற்பாட்டுக் குழுத்தலைவர் திரு. குமரேசன் நன்றி நவில, திரு. செல்வமுத்துகுமரன் ஆரம்பம் முதல் இறுதி வரை கவிதைகள் பல கூறி நிகழ்ச்சியினை சிறப்பாக வழி நடத்தினார்.

தமிழ் வாழும் மொழியாக நீடித்து நிலைத்திருக்க இன்றைய இளைஞர்களின் ஈடுபாடு எவ்வளவு முக்கியமானது என்பதையும், அவர்களிடத்தில் தமிழ் ஆர்வத்தைத் தூண்டுவது எவ்வளவு இன்றியமையாதது என்பதை உணர்த்துவதாகவும் அமைந்தது இந்நிகழ்ச்சி.

நிகழ்ச்சி புகைப்படம்:



இடமிருந்து வலம்: பேராசிரியர் முனைவர் சுப. திண்ணப்பன், மற்றும் திரு அழகிய பாண்டியன்



# கனடா வாழ் தமிழ் எழுத்தாளர் குரு அரவிந்தன் வாசகர் வட்டம் சார்பில் கல்லாங்குத்து பள்ளிக்கு இலவச நூல்கள் வழங்கும் விழா

வந்தவாசி. மார்ச்.10. வந்தவாசி ஒன்றியத்திலுள்ள கல்லாங்குத்து ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் கனடா வாழ் தமிழ் எழுத்தாளர் குரு அரவிந்தன் சார்பில் குழந்தைகள் வாசிப்பு இயக்கத்தின் மூலமாக மாணவ-மாணவிகளுக்கு இலவச நூல்கள் வழங்கப்பட்டன.

அரசுப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளிடம் புத்தக வாசிப்பைத் தூண்டும் நோக்கில் தொடங்கப்பட்ட குழந்தைகள் வாசிப்பு இயக்கத்தின் மூலமாக வந்தவாசி ஒன்றியத்திலுள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாக நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனையறிந்த கனடா வாழ் தமிழ் எழுத்தாளர் குரு அரவிந்தன் வாசக வட்டம் சார்பில் கல்லாங்குத்து தொடக்கப் பள்ளி படிக்கும் குழந்தைகளுக்கு இலவசமாக நூல்களை வழங்க முன்வந்தனர்.

அதனடிப்படையில், கல்லாங்குத்து ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 3, 4, 5-ஆம் வகுப்பில் பயிலும் மாணவ-மாணவிகளுக்கு, வந்தவாசியை அடுத்த அம்மையப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த எழுத்தாளர் மு.முருகேஷ் எழுதிய மத்திய அரசின் "பால சாகித்திய புரஸ்கார் விருது"க்கு தேர்வான "அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை" எனும் சிறுவர் கதை நூல் இலவசமாக வழங்கப்பட்டது.

இவ்விழாவிற்கு கல்லாங்குத்து தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் சு.கண்ணகி தலைமையேற்றார். ஆசிரியர் ஷ.ரஷீனா அனைவரையும் வரவேற்றார். விழாவில், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட கல்லாங்குத்து ஊராட்சி மன்றத் தலைவர் கற்பகம், வந்தவாசி ஆசியன் மெடிக்கல் அகாடமியின் இயக்குநர் பீ.ரகமத்துல்லா ஆகியோர் குழந்தைகளுக்கு நூல்களை வழங்கி, வாழ்த்துரையும் வழங்கினர்.

இவ்விழாவில், எழுத்தாளர் மு.முருகேஷ், கவிஞர் தமிழ்ராசா, ஆசிரியை இல.சுமதி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**புகைப்படக் குறிப்பு:**

வந்தவாசி ஒன்றியத்திலுள்ள கல்லாங்குத்து தொடக்கப்பள்ளி மாணவ-மாணவிகளுக்கு கனடா



வாழ் தமிழ் எழுத்தாளர் குரு அரவிந்தன் சார்பில் குழந்தைகள் வாசிப்பு இயக்கத்தின் மூலமாக "பால சாகித்திய புரஸ்கார் விருது"க்கு தேர்வான "அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை" நூலினை ஆசியன் மெடிக்கல் அகாடமியின் இயக்குநர் பீ.ரகமத்துல்லா, ஊராட்சி மன்றத் தலைவர் கற்பகம் ஆகியோர் வழங்கியபோது எடுத்த படம். அருகில், பள்ளித் தலைமையாசிரியர் சு.கண்ணகி, கவிஞர் மு.முருகேஷ், ஆசிரியர்கள் இல.சுமதி, ஷ.ரஷீனா ஆகியோர் உள்ளனர்.

# துருக்கி நாட்டில் நடந்த ரஸ்யா - உக்ரைன் பேச்சுவார்த்தையின் அடுத்த கட்ட நகர்வு என்ன?



- குரு அரவிந்தன்

"ரஸ்யாவால் உக்ரைனின் சில நகரங்களைக் கைப்பற்ற முடியுமே தவிர முழுநாட்டையும் கைப்பற்ற முடியாது" என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்திருந்தார். பேச்சு வார்த்தை மூலம் இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு துருக்கி நாடு இரண்டு நாடுகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தது. ரஸ்யா - உக்ரையின் பிரச்சனைக்குத் தீர்வு காணும் வகையில் துருக்கி நாட்டில் நடந்த பேச்சுவார்த்தைக்கு உக்ரைன் வெளிவிவகார அமைச்சரான டெம்ரோ குலீபாவும், ரஸ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லவ்ரோவும் துருக்கிக்கு வருகை தந்திருந்தனர். ஏற்கனவே பெலாரஸில் இரண்டு தடவைகள் இரண்டு தரப்பினருக்கும் பேச்சு வார்த்தைகள் நடந்தாலும், எந்த முடிவையும் எட்டவில்லை. அதே போலத்தான் இம்முறையும் எந்த முடிவுக்கும் இருதரப்பினரும் வரவில்லை. "பட்டால்தான் தெரியும்" என்பதுபோல, இரண்டு தரப்பினரும் பட்டுத் தெளிவதற்காகக் காத்திருப்பது போலத் தெரிகின்றது.

உக்ரைன் ரஸ்ய யுத்தம் 15 வது நாளைக் கடந்த நிலையில் ஆங்காங்கே ரஸ்ய படைகள் தாக்குதல்களை நடத்திக் கொண்டு இருக்கின்றன. மரியுபோலில் உள்ள சிறுவர் வைத்திய சாலை ஒன்றும் தாக்கப்பட்டது. உக்ரைன் மக்களை உளரீதியாகக் களைப்படைய வைப்பதே ரஸ்யாவின் முதல் நோக்கமாகும். அதற்காக விமானத் தாக்குதல்கள், குறிப்பாகக் குடியிருப்புகள் மீது அதிகமாக நடைபெறுகின்றன. காலம் கனியும்போது சுற்றிப்பிடிப்பதுதான் அதன் நோக்கம். அதுவரை உலக நாடுகளின் நாடி பிடித்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றது ரஸ்யா. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ரஸ்யாவின் எண்ணெய் ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப் போவதாகவும் அறிவித்திருப்பதால், இதைச் சில ஐரோப்பிய நாடுகள் விரும்பவில்லை. காரணம் அனேகமான ஐரோப்பிய நாடுகள் ரஸ்யாவில் இருந்துதான் ஒரு பகுதி எண்ணெய்யைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் 40 வீதமான எண்ணெய்யை ரஸ்யாவில் இருந்தே பெறுகின்றன. எண்ணெய் ஏற்றுமதியை அமெரிக்கா தடுத்தால், ஜெர்மனிக்கான எரிவாயுவைத் தடை செய்யப் போவதாக ரஸ்யா அறிவித்திருக்கின்றது. இதனால் எதிர்பாராமல் கச்சா எண்ணெய் விலை 130 டொலரால் விலை உயர்ந்தது. உக்ரைன் ரஸ்யா பிரச்சனை காரணமாக, மேற்கு நாடுகளில் புகழ்பெற்ற உணவகங்களான மக்டொனால்ஸ், ஸ்ராபக்ஸ், கொக்காகோலா போன்றவை தங்கள் சேவையை ரஸ்யாவில் நிறுத்தி வைத்திருக்கின்றன.

18 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்டவர்களை நாட்டை விட்டு வெளியேற வேண்டாம் என்று உக்ரைன் அறிவித்திருக்கின்றது. தாய் மண்மீது கொண்ட பற்றினால் உக்ரைன் அழகு ராணியாகத் தெரிவு செய்யப்பட்ட 24 வயதான அன்ஸ் தேசியா என்ற மிஸ் உக்ரைனும் இராணுவத்தில் இணைந்து போராடச் சென்றிருக்கின்றார். இன்னுமொரு தளத்தில் உக்ரைன் இராணுவத்தில் இணைந்த காதலர்களான லெசியாவுக்கும் வலேரிக்கும் சக இராணுவ தோழர்கள் சென்ற வாரம் திருமணம் செய்து வைத்தனர். ஒரு பக்கம் தாக்குதல்கள் நடந்து கொண்டிருக்க, இவர்கள் தளத்தில் நின்றதால், இராணுவ உடையிலேயே அவர்களது திருமணம் நடந்தேறியது. உக்ரைன் அரசின் அவசர அழைப்பை ஏற்று வெளிநாடுகளில் வசித்த சுமார் 60,000 உக்ரேனியர்கள் இராணுவத்தில் இணைவதற்காக உக்ரைன் சென்றிருக்கிறார்கள். வெளிநாட்டவர்களும் இராணுவத்தில் இணைந்து கொள்ளலாம் என்ற உக்ரைன் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று, உக்ரைனில் படித்துக் கொண்டிருந்த இந்திய, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் உக்ரைன் இராணுவ உபபிரிவில் இணைந்து சேவையாற்றுகின்றார்.

மேற்குலக நாடுகள் ரஸ்யாவின் சொத்துக்களை முடக்கியதால் பங்குச் சந்தையிலும் ரஸ்யா வீழ்ச்சி கண்டது. ரஸ்யாவின் வர்த்தகம், மற்றும் தனிப்பட்டவர்களின் கொடுக்கல் வாங்கலையும் அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை தடுத்து வைத்திருக்கின்றன. மற்றும் எண்ணெய், எரிவாயு போன்றவற்றுக்கான ரஸ்யாவின் வருமானத்தையும் இலகுவில் பெறமுடியாதபடி கடுமையாக்கி இருக்கின்றன. ரஸ்ய ஜனாதிபதி, மற்றும் வெளியுறவு அமைச்சர் ஆகியோரின் தனிப்பட்ட சொத்துக்களும் தடுத்து வைக்கப் பட்டிருக்கின்றன. ரஸ்யாவின் பெரிய பணக்கார முதலாளிகள் பிரித்தானியாவுக்கு வருவதையும் தடைசெய்திருக்கிறது பிரித்தானியா. இந்த நாடுகள் ரஸ்யாவில் இருந்து வரும் விமானங்களையும், வேறுநாடுகளில் இருந்து வரும் ரஸ்யர்கள் சார்ந்த விமானங்களையும் தங்கள் நாடுகளில் தரை இறங்குவதைத் தடுத்து வைத்திருக்கிறார்கள்.

இந்த யுத்தத்தை ரஸ்யா வேண்டுமானால் ஒரு வாரத்தில் முடித்திருக்கலாம். ரஸ்யா தன்னுடைய இராணுவப் பலத்தில் மிகக்குறைந்த அளவு சக்தியையே இது வரை உக்ரைன் மீது பாவித்திருக்கின்றது. ரஸ்யாவின் அதி நவீன விமானங்கள் ஒன்றும் இந்த யுத்தத்தில் இதுவரை பாவிக்கப்படவில்லை. பொருளாதார ரீதியாக ரஸ்யாவை இந்த யுத்தம் பாதிக்கும் என்று தெரிந்தாலும், உக்ரைனுக்கு யாரெல்லாம் உதவிக்கு வருகிறார்களோ அவர்களும் பொருளாதாரத்தில் பாதிப்பு அடைய வேண்டும், காலம் கடத்தினால் அவர்களே தங்களுக்குள் அடித்துக் கொள்வார்கள் என்பதும் ரஸ்யாவுக்குத் தெரியும். எண்ணெய், எரிவாயுப் பிரச்சனையே எல்லா நாடுகளுக்கும் முக்கியமான பிரச்சனையாக மாறப்போகின்றது. இதனால் எல்லா கட்டணங்களும், முக்கியமாக உணவுப் பொருட்களின் விலை உயரப்போகின்றது. இருப்பில் உள்ள எரிபொருள் முடிவடையும்போது, என்ன நடக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்பதே சிறந்தது.

உக்ரைன் - ரஸ்ய யுத்தம் ஒரு பக்கம் போய்க் கொண்டிருக்க, மறுபக்கம் ஐ.நா.வின் ஜெனிவா நடவடிக்கைகள் சுவிட்சர்லாந்தில் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. வழக்கமாக மார்ச், ஏப்ரல் மாதங்களில் இந்த அமர்வு இடம்பெறுவதுண்டு. பல்வேறு பிரச்சனைகளுக்கு மத்தியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை நிகழ்ச்சி சென்ற வாரம் நடைபெற்றது. இலங்கையில் யுத்தம் முடிந்து 12 வருடங்கள் ஆகிய நிலையிலும் ஜெனிவாவில் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லாத நிலையில் இந்த நிகழ்ச்சி தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இம்முறையும் இலங்கைக்கு ஆதரவாக சில நாடுகள் தங்கள் கருத்தை வெளியிட்டிருந்தன. ஏற்கனவே இந்த நாடுகள் பற்றியும், அவர்கள் எந்தப் பக்கம் சாய்வார்கள் என்பதையும் தமிழ் மக்கள் அறிந்தே இருந்தனர். ஆகவே தமிழ் மக்கள் எதிர்பார்க்காதது ஒன்றும் புதிதாக நடந்தேறவில்லை. தமிழ் மக்களுக்கு ஆதரவாக ஜெனிவாவில் எதுவுமே நடக்கப் போவதுமில்லை, காரணம் வல்லரசுகளான ரஸ்யாவும், சீனாவும் ஐ.நா. வில் வீட்டோ வாக்கை வைத்திருப்பதேயாகும். இதைவிட வடகொரியா, பெலாரஸ், சிரியா போன்ற நாடுகளும் இலங்கைக்கு ஆதரவாக இம்முறை நடந்து கொண்டன. காலத்தைக் கடத்துவதன் மூலம் ஆதாரங்களை அழிப்பது என்பதுதான் இவர்களின் முக்கிய நோக்கமே அல்லாமல் வேறு ஒன்றுமில்லை.

கியூபாவில் நடந்த அரசியல் மாற்றங்கள் ரஸ்யாவை விட்டு கியூபா விலகிச் செல்கிறதோ என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்தி இருக்கின்றது. இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கிய அமெரிக்காவும், பிரித்தானியாவும் இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்களைக் கொண்ட வரக்கூடாது என்று 2012 ஆம் ஆண்டு அமர்வில் கியூபா பிரதிநிதி குறிப்பிட்டிருந்தது நினைவிருக்கலாம். 2012 ஆம் ஆண்டு 24 நாடுகளும், 2013 ஆம் ஆண்டு 25 நாடுகளும், 2014 ஆம் ஆண்டு 23 நாடுகளும் இலங்கைக்கு எதிராக வாக்களித்திருந்தன. எந்தவொரு தீர்மானத்தையும் தோற்கடிப்பதற்கு 24 நாடுகளின் ஆதரவு வேண்டும். எந்த நல்ல விடயத்தை எடுத்தாலும் அரசியல் காரணங்களுக்காக வீட்டோ மூலம் சில நாடுகள் தடுத்துக் கொண்டே இருப்பார்கள் என்பதும் தெரிந்ததே! ஒற்றுமையாக ஒன்றைச் செயற்படுத்த முடியாத நிலையில், முன்பு இருந்த ஆர்வம் இப்போது உள்ள தமிழ் அரசியல் வாதிகளுக்கும் இல்லை என்பதும் புரிகின்றது. பெரும்பான்மை இனத்தவர்கள் தங்குளுக்குள் முரண்படுவது போலக் காட்டிக் கொண்டாலும், சிறுபான்மையினரின் விடயங்களில் தங்களுக்குள் ஒன்றுபட்டே செயற்படுகின்றார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மக்களின் மனத்திருப்திக்காகக் காலமெல்லாம், குறைந்தது வருடத்தில் இரண்டு தடவையாவது ஜெனிவாவின் பெயரைச் சொல்லிக் கொண்டே காலத்தை ஓட்ட வேண்டிய நிலையில்தான் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களாகிய நாம் இருக்கின்றோம்.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றி அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் ஐ.நா. சபையில் எடுத்து வாதிட்டாலும் அதனால் எந்த ஒரு நன்மையும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கப் போவதில்லை. யார் பதவிக்கு வந்தாலும், இப்படித்தான் நடந்து கொள்வோம், இதுதான் அரசியல் என்ற நிலைப்பாட்டைத்தான் எல்லா அரசும் கொண்டிருக்கின்றன. இதனால் பிராந்திய ஆதிக்கம் செலுத்த விரும்பும் நாடுகளின் பிடியில் சிக்கி இலங்கை போன்ற சிறிய நாடுகள் அவதிப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. கனடா போன்ற அரசியலமைப்பு இருந்தால் சிறுபான்மையினர் ஓரளவு பாதுகாக்கப்படலாம். எதுவாக இருந்தாலும் முடிவு எல்லாமே மனித மனங்களைப் பொறுத்ததுதான்.

*(11ம் பக்கத் தொடர்ச்சி)*

# தமிழ்த் தலைமைகளுக்கு இன்று மீட்பரும் மேய்ப்பரும் இந்தியாதான்

ஆனால் தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றது

- வடக்குக் கிழக்கில் குடியேற்றங்கள் மும்முரமாக இடம்பெறுகின்றன.
- மகாவலி தொல்லியல் என பல திணைக்களங்கள் தாயகக் கோட்பாட்டை சிதறடிக்க களம் இறக்கப்பட்டுள்ளன.
- புதிய அரசியலமைப்பு வரைபு துரிதகதியில் நடைபெறுகின்றது.
- மொத்தத்தில் தமிழர்களுக்கெதிரான நிகழ்ச்சி நிரல்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எவ்வித தடங்களுமின்றி துரிதகதியில் முன்னெடுக்கப்ப்படுகின்றன.

6. தமிழர் விவகாரத்தை நீர்த்துப் போகச் செய்ய இலங்கை அரசு முழு வீச்சில் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றது.
7. அரச இயந்திரம் உட்பட அணைத்து தென்னிலங்கை சக்திகளும் கட்சி வேறுபாடுகளைக் கடந்து தமிழர் விவகாரத்தில் ஓரணியில் செயற்படுகின்றன.
8. இலங்கை தரப்புக்கு டெல்லியில் தூதரகம் மாத்திரமல்ல செல்வாக்கு செலுத்தக் கூடிய நபர்களையும் கொண்டுள்ளது.

அமைதி காத்த இந்தியா

இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கப்பால் இலங்கையின் செயற்பாடுகள் அமைந்த போதும் மூன்று தசாப்தங்களுக்கு மேல் அமைதி காத்த இந்தியா மறுபுறம் தமிழர் விவகாரத்திற்கு 13வது திருத்தமே தீர்வு என தொடர்ந்தும் வற்புறுத்திவருகின்றது.

13 வது திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போரிட்ட இந்தியா இலங்கையுடன் தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றவோ அல்லது இன விவகாரத்துக்கான தீர்வை வழங்கவோ இன்றுவரை முடியவில்லை.

அதே வேளையில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக இலங்கையை ஏற்றுக் கொள்ளுமாறு வைக்கவும் முடியவில்லை. இதுவரை இலங்கை இலங்கை இந்திய ஒப்பந்தத்தையோ அது பிரசவித்த 13வது திருத்தத்தையோ ஏற்றுக் கொண்டதாகவும் இல்லை.

மறுபுறம் இறுதிக்கட்ட போரில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டபோது அதில பார்வையாளராகமட்டுமன்றி பங்காளராகவும் இருந்து இந்தியா செயற்பட்டது என்ற குற்றச் சாட்டு தமிழர்தரப்பில் உள்ளது.
தமிழ் மக்களை பகடைக் காயாக வைத்துக் கொண்டு பிராந்திய அரசியலில் இலங்கையை தொடர்ந்தும் கையாளும் நிலையானது தமிழ்மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாரிய இடைவெளிக்கு இட்டுச்சென்றுவிடும் என்பது இந்தியா அறியாததல்ல. அந்தவகையில் ஆறு கட்சிகளின் கூட்டுக் கோரிக்கை பந்தினை ,ந்தியாவின் கைகளில் கொடுத்துள்ளது.

இந்திரா காந்தி அம்மையார் பிரதம மந்திரியாக இருந்தபோது இலங்கை விவகாரத்தில் சைப்ரஸ் அணுகு முறையைக் கொண்டிருந்ததாக முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி 1984 இல் குறிப்பிட்டிருந்தார்.

மொத்தத்தில் இலங்கைத் தமிழர் விவகாரம் இந்தியா இலங்கை சீனா ஆகிய முத்தரப்பின் கைகளில் சிக்கியுள்ளது. இந்த முத்தரப்பிற்குள்ளும் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் வெளிநாடுகள் அபிப்பிராயம் கூறலாம். ஆனால் முடிவினை மேற்கொள்வது இந்தியாவின் கைகளிலேயே தங்கியுள்ளது.
அப்படியானால் ஆறு கட்சிகளின் கூட்டுக் கோரிக்கைக்கு இந்தியா எவ்வாறு பதில் அளிக்கப் போகின்றது?

- 1987 ஒப்பந்தப்படியான சரத்துக்களுக்கு அமைவான தீர்வையா?
- அல்லது இலங்கை அரசாங்கத்தால் திருத்தப்பட்டு சிதைக்கப்பட்ட 13ஜயா?
- அல்லது புதிய வடிவிலான 13ஜ உருவாக்கியா இந்தியா தீர்வு வழங்கப் போகின்றது?
- அல்லது இதனை வைத்துக் கொண்டு இன்னொரு பேரத்தை இலங்கையுடன் இந்தியா தொடங்கப் போகின்றதா?
- அல்லது நோர்வேபாணியில் இந்தியத் தலைமையில் மேற்குலக கூட்டுடன் இன்னொரு பேச்சுவார்த்தைக்கான களத்தை இந்தியா திறக்கப் போகின்றதா?.
- அல்லது அரசியல் விமர்சகர்கள் கூறுவது போன்று தமிழர் விவகாரத்தைக் கையாள்வதற்கு சிறப்புத் தூதுவரை நியமிக்க உள்ளதா?

மேற் கூறிய கேள்விகளுக்கான பதில்கள் இந்தியா வழங்க உள்ள பதிலிலும் ராஜதந்திர நகர்விலுமே தங்கியுள்ளது.

இந்தியாவின் நகர்வை மூன்று விடயங்கள் தீர்மானிக்கவல்லன.

1. பூகோள அரசியல். சீனாவின் பிரசன்னத்தால் கொதி நிலையில் உள்ள தென்னாசிய அரசியல் சிக்கல்களுக்கு தீர்வு கண்டாக வேண்டும்.
2. இந்திய பொருளாதார நலன்களைப் பாதுகாத்தாக வேண்டும்
3. தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்க குறைந்தபட்சம் இலங்கையில் மோசமடைந்து கொண்டு போகும் தமிழர்களின் நிலையை தடுத்து நிறுத்தித் தமிழ் மக்களைப் பாதுகாத்தல்.
4. இன விவகாரத்துக்கான தீர்வினைக் காணுதல்.
5. மேற் கூறிய விடயங்களுக்காக இலங்கையைக் கட்டுக்குள் வைத்தல்.

ஆனால் இந்தியாவுக்கு இந்த விடயங்கள் இலகுவாக இருக்கப் போவதில்லை.

1. தமிழர் தரப்பு பலமானதாக இல்லை. 6 கட்சிகளின் கூட்டு ஒரு நெல்லிக்கனி மூட்டை. எவ் வேளையிலும் பிதுங்கி வெளியேறலாம் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. தற்போதே தமிழரசுக் கட்சி தனி ஓட்டத்தைத் தொடங்கிவிட்டது.
3. இலங்கையின் இராஜதந்திரத்தக்கு ஈடு கொடுக்கும் வல்லமை படைத்தவர்கள் அல்ல தமிழ்த் தலைமைகள் என்பது உண்மையாயினும் அதற்கு இந்தக் கூட்டு தம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்
4. இந்தியத் தூதுவரிடம் கடிதம் கையளித்துள்ளனரே தவிற இந்தக் கோரிக்கைகளுக்காக தமிழகத்திலோ டெல்லியிலோ செல்வாக்கு செலுத்தும் வகையில் அரசியல் நேச சக்திகள் இல்லை. டெல்லியில் செல்வாக்கு செலுத்தும் அளவுக்கு சக்தி படைத்தவர்களாக தமிழ்த் தலைமைகள் இல்லை என்பதும் உண்மையே.
5. அதேவேளையில் இலங்கை அரசியலில் இணக்க அரசியல் நடத்தும் அணி இன்று பலம் பொருந்தியதாக உள்ளது.

நடத்தும் அணி இன்று பலம் பொருந்தியதாக உள்ளது.

மொத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பிறகான இன்றைய தமிழர் அரசியலின் தலை விதி முற்று முழுதாக இந்தியாவின் கைகளிலேயே தங்கியுள்ளது. இதுவே இன்றைய யதார்த்தம்.

இன்றைய நிலையில் தமிழ்த் தலைமைகளின் விருப்பு வெறுப்புகளுக்கப்பால் அவர்களுக்கு மீட்பரும் மேய்ப்பரும் இந்தியாதான்.

இதனை உணர்ந்தால் ஆறு கட்சிகளும் திறந்துள்ள கடிதக் களம் எந்தளவுக்கு முக்கியமானது என்பது புலனாகும்.



# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




என்றுமே மாறாத மதுரைச் சுவையுடன் உணவு படைக்கின்றோம்

# Taste of MADURAI







Taste Of Madurai

Telephone: (416) 332-8000

திறப்பு விழாவையொட்டி விசேட விலைகளில்
சைவ, அசைவ உணவுகளைப் ஆடர் செய்து வாங்கிச் செல்லுங்கள்



## திறப்பு விழா ஸ்பெஷல்

**Madurai Killi Parotta (2 Pcs) $9.99**

மேலும். நாவுக்கு விருந்தாகும் பல வகை உணவுகள்: தோசை வகைகள். பரோட்டா வகைகள்
அத்துடன் மதுரைச் சாப்பாடு பல கறிகளுடன். சூப் வகைகள். இன்னும் பல...

AVAILABLE
DOORDASH
Uber Eats
SKIP THE DISHES













3500 McNicoll Ave. Unit-7
Scarborough, ON
(Markham / McNicoll)

Telephone: (416) 332-8000
Email: mahendran1980@hotmail.com

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



**CHRISTEEN SEEVARATNAM**

**(416) 258-6759**

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்

**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
**www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca**



# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# பத்திரிகையாளர்களோடும் படைப்பிலக்கிலக்கியவாதிகளோடும் இணைந்து பயணிக்கும் சிறந்த சஞ்சிகையாளர் "நந்தவனம் சந்திரசேகரன்" ஆவார்

## நந்தவனம் பவுண்டேசன் சாதனைப் பெண்கள் விருது விழாவில் இலஙகைப் பத்திரிகையாளர் செந்தில்வேலவர் புகழாரம்





**- சென்னையிலிருந்து உதயன் செய்தியாளர் அருண்**

“எனது நீண்ட கால பத்திரிகைத் துறை அனுபவத்தில் பல சஞ்சிகையாளர்களைச் சந்தித்துள்ளேன். அவ்வாறான பயணத்தில் சஞ்சிகையாளர்களோடும் பத்திரிகையாளர்களோடும் பழகுவதில் நான் ஆர்வத்தோடு செயலாற்றி வந்துள்ளேன். எனது பார்வையில் பத்திரிகையாளர்களோடும் படைப்பிலக்கிலக்கியவாதிகளோடும் இணைந்து பயணிக்கும் சிறந்த சஞ்சிகையாளர் “நந்தவனம் சந்திரசேகரன்” தனித்துவம் பெற்றவராக விளங்குகின்றார் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமே இல்லை என்றே கூறுவேன்.

இவ்வாறு கடந்த சனிக்கிழமையன்று சென்னை மாநகரில் நந்தவனம் பவுண்டேசன் நடத்திய சாதனைப் பெண்கள் விருது விழாவில் இலஙகைப் பத்திரிகையாளர் செந்தில்வேலவர் புகழாரம் சூட்டி மகிழ்ந்தார். மேற்படி விழாவில் கனடா உதயன் பத்திரிகையாளரும் கவிஞருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களும் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பெறறிருந்தார்.

தமிழ்நாடு திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் நந்தவனம் பவுண்டேசன் ஆண்டுதோறு உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பல்துறைகளில் சாதித்த பெண்களுக்கு சாதனைப் பெண் விருது வழங்கி சிறப்பித்து வருகிறது.

2022 ஆம் ஆண்டுக்கான சாதனைப் பெண்கள் விருது வழங்கும் விழா 13.ʼ.03.ʼ.2022 அன்று சென்னை அரும்பாக்கம் விஜய் பார்க்கில் சிறப்பாக நடைபெற்றது நந்தவனம் பவுண்டேசன் தலைவர் நந்தவனம் சந்திரசேகரன் வரவேற்புரை வழங்க பொருளாலர் பா.தென்றலின் நோக்கவுயுரையுடன் தொடங்கிய நிகழ்வில் கனடா உதயன் வார இதழின் பிரதம ஆசியர் ஆர்.என். லோகேந்திரலிங்கம், வளரும் அறிவியல் இதழ் ஆசிரியர் இ.கே, தி.சிவகுமார், இலங்கை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், காவல்துறை உதவி ஆய்வாளர் எஸ். ராஜா, ஸ்ரீவெங்கடேஸ்வரா ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தாளாளர் திருமதி விஜயா, ஊடகவியளாலர் விக்ரமசிங்க, இலக்கை தினகரன் நாளிதழ் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர் ஆகியோ சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு விருது பெற்ற பெண்களுக்கு சாதனைப் பெண் விருது வழங்கி சிறப்பித்தனர்.





கோமதிசங்கரன் (மலேசியா), தீஷ்மா கருப்பசாமி (கோவை), கீதா குணாலன் (நீலகிரி), சுபத்திரா இராஜேந்திரன் (சென்னை), நாச்சியார் (கிழக்கு ஆப்பிரிக்கா), தமிழணங்கு (சென்னை), சூரியா யாலின் (இலங்கை), எஸ்.மோகனா (சென்னை), மரு.நந்தினி (புதுக்கோட்டை), கௌசல்யா (ராணி பேட்டை), ஜெயலட்சுமி (புதுக்கோட்டை), சுஹாசினி பரமானந்தன் (இலங்கை), வெற்றிச் செல்வி சந்திரகலா (இலங்கை), ஆர். சிரிலேகா (சேலம்), பி.கவிதா (சேலம்), மரு. பத்மினி ரகுநாதன் (பெங்களூர்), பத்மலோசனி லோகேந்திரலிங்கம் (கனடா), வாசுகி ராஜா (ஹைதராபாத்), விஜி வெங்கட் (சென்னை), ஜமுனா ரவி (புதுச்சேரி), பரிமளாவீரசேகரன் (திருவள்ளூர்) இவள் பாரதி (சென்னை), சுகன்யா கந்தசாமி (சென்னை), ப.நித்யா (சென்னை), சுஷாந்தி சாந்தகுமார் (இலண்டன்) ஆசியாருக்கு சாதனைப் பெண் விருது வழங்கப்பட்டது.







செல்லி ஹரிப்பிரியவின் நடனமும் செல்வி சாய் காயத்திரியின் திரையிசைப் பாடலும் நிகழ்வை அழகுபடுத்தியது கவிஞர் சொர்ணபாரதி நிகழ்வை அழகாக தொகுத்து வழங்க நந்தவனம் பவுண்டேசன் செயலாளர் எம். சாதிக்பாட்சா அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.


A C TOUR

ALL COUNTRIES TOUR SERVICES

இலங்கைச் சுற்றுலா



2022 வைகாசி மாதம் முதலாவது கிழமை.

இலங்கையில் உள்ள முதல் தரமான சுற்றுலா தளங்கள், கோவில்கள், தேவாலயங்கள், புத்த விகாரைகள், (மசூதி) மொஸ்க் இவற்றில் நீங்கள் விரும்பும் இடங்களுக்கும், உங்கள் உறவினர்கள் வீடுகளுக்கும் கூட்டிச்செல்லப்படும்.

| 1 STAR | 2 STAR | 3 STAR | 4 STAR |
|---|---|---|---|
| ★ | ★★ | ★★★ | ★★★★ |
| 1 கிழமை | 2 கிழமை | 3 கிழமை | 4 கிழமை |
| ¼ மாதம் | ½ மாதம் | ¾ மாதம் | 1 மாதம் |
| REGULAR C$2,500 | REGULAR C$3,000 | REGULAR C$3,500 | REGULAR C$4,000 |
| SALE PRICE C$ 2,000.00 | SALE PRICE C$ 2,500.00 | SALE PRICE C$ 3,000.00 | SALE PRICE C$ 3,500.00 |

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு, இந்த விலை.

நல்ல சேவைக்கு விளம்பரம் தேவையில்லை. மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஒருமுறை மட்டும் தான் வரும் விளம்பரத்தை எடுத்து வைக்கவும்.

a1actour.com@gmail.com

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது

விமான சீட்டு · தங்குமிட வசதி · விமான நிலையத்திற்கும் தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை

காலை உணவு · மதிய உணவு · இரவு உணவு · மது பானம் · குளிர்பானம் · சுடுபானம்

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide,மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER

www.a1actour.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007

CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956

# உருசிய - உக்கிரேன் இடையிலான சண்டை நிறுத்தப்படா விட்டால் அது மூன்றாவது உலகப் போருக்கு வழிகோலும்!

- கனடா நக்கீரன்

தமிழுக்குக் கதி கம்பராமாயணமும் திருக்குறளும் எனக் கூறியவர் செல்வக் கேசவராய முதலியார். இதில் திருக்குறளே நாடு, மொழி, இனம், சமயம், காலம் கடந்த நூல். திருவள்ளுவமாலையில் ஐம்பத்தைந்து பாடல்கள் உள்ளன. ஐம்பத்து மூன்று புலவர்கள் பாடியுள்ளார்கள். அதில் மதுரைத் தமிழ்நாகனார் என்ற புலவர் எல்லாப் பொருளும் இதன்பால்உள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை எனப் புகழ்ந்துள்ளார்.

திருவள்ளுவர் இயல் அரசியல், அதிகாரம் அறிவுடைமையில் பின்வருமாறு கூறுவார்.

*அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது*
*அஞ்சல் அறிவார் தொழில். (குறள் 428)*


இதன் பொருள் அறிவில்லாதவர்கள்தான் அஞ்ச வேண்டியதற்கு அஞ்ச மாட்டார்கள். அறிஞர்கள் மட்டுமே அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுவார்கள். இது உக்கிரேன் நாட்டின் ஆட்சித்தலைவர் வொலடிமிர் செலன்ஸ்கி அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. உருசியா மீது மேற்குலக நாடுகள் விதித்துள்ள கடுமையான பொருளாதாரத் தடைகள், நிதி மற்றும் பயணக் கட்டுப்பாடுகள், உருசியர்களது உடைமைகள் மீது விதித்துள்ள கட்டுப்பாடுகளால் உக்கிரேனுக்கு எந்த நன்மையும் இல்லை.

உருசியா - உக்கிரேன் நாடுகளுக்கு இடையிலான போர் 15 நாட்களைக் கடக்கிறது. இந்தப் போரின் உக்கிரகம் உலகில் உள்ள நாடுகள் அனைத்திலும் எதிரொலிக்கிறது. உக்கிரேனின் இராணுவ தளங்கள், அணுவாயுத எண்ணெய் கிணறுகள், தொலைக்காட்சி கோபுரங்கள், கட்டிடங்கள் உருசியப் படைகளின் தாக்குதலுக்கு இலக்காகி வருகின்றன.



கடந்த புதன்கிழமை (மார்ச் 09) உக்கிரேன் அதன் செர்னோபில் அணுமின் நிலையத்திற்கு மின்சாரம் முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளது என எச்சரித்துள்ளது. இதனால் கதிரியக்க பொருள் வெளியிடப்படலாம். காரணம் அதன் சேமிப்பு வசதி செலவழித்த அணு எரிபொருளை குளிர்விக்க முடியாது.

உக்கிரேனின் ஆயுத பலத்தை குறைப்பதுதான் தனது குறிக்கோள் என உருசியா அறிவித்துள்ளது. போரின் அழிவுகளை மீள்கட்டி எழுப்பப் பல பில்லியன் டொலர்களும் பல ஆண்டுகளும் தேவைப்படும்.



இந்தப் போருக்கான காரணம் தெரிந்ததே. உக்கிரேன் நேட்டோ இராணுவ அமைப்பில் சேர எடுத்த முடிவை உருசியா எதிர்த்தது. உக்கிரேன் நேட்டோ நாடுகளது இராணுவ அணியில் சேர்ந்தால் தனது தேசியப் பாதுகாப்புக்கு ஊறு ஏற்படும் என உருசியா அஞ்சுகிறது. அது மட்டுமல்ல, அந்த நாட்டின் கிழக்குப் பகுதியில் வாழும் உருசிய இன மக்களை உக்கிரேன் இரண்டாம்தர குடிமக்களாக நடத்துகிறது. அவர்களது மொழியுரிமையை மறுக்கிறது என உருசியா குற்றம் சாட்டுகிறது.

இந்தப் போர் ஒரு உலக வல்லரசுகளின் ஒன்றான உருசியாவுக்கும் ஒப்பீட்டளவில் சிறிய நாடான உக்கிரேன் இடையிலான போர். அதன் காரணமாக ஆட் பலம், ஆயுத பலம், பொருள்வளம் கொண்ட உருசிய நாட்டோடு உக்கிரேன் அதிக காலம் தாக்குப் பிடிக்க முடியாது. உக்கிரேன் தலைநகரான கீவ் நகரை உருசிய படைகள் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தி வருகின்றன. அது எந்த நேரத்திலும் உருசியப் படைகளிடம் விழலாம்.

பிந்திய செய்திகளின்படி உக்கிரேன் நேட்டோ அமைப்பில் உறுப்பினராகச் சேரும் எண்ணத்தை விட்டுவிட்டது. அமெரிக்காவும் உக்கிரேன் நாட்டை நேட்டோ அமைப்புக்குள் இழுக்கும் எண்ணம் இல்லை என அறிவித்துள்ளார். அப்படிச் செய்தால் மூன்றாவது உலகப் போர் மூழுவதைத் தடுக்க முடியாது. அப்படியொரு நிலை ஏற்பட்டால் அது அணுவாயுதப் போருக்கு அடிகோலும் என உருசிய நாட்டின் ஆட்சித்தலைவர் புட்டின் எச்சரித்துள்ளார். அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் உக்கிரேன் நாட்டுக்கு வாரி வாரி ஆயுதங்கள், புலனாய்வு, நிதியுதவி கொடுக்கின்றன. ஆனால் தங்கள் நாட்டுப் படைகளை போர்க்களத்தில் இறக்க அணியமாக இல்லை. இதுதான் இன்றைய யதார்த்தம். இதனை உக்கிரேன் நாட்டின் ஆட்சித்தலைவர் செலனஸ்கி முற்றிலும் எதிர்பார்க்கவில்லை.

வினைவலி, தன்வலி, மாற்றான் வலி, துணைவலி போன்றவற்றை உக்கிரேன் கணக்கில் எடுக்கவில்லை என்பது தெரிகிறது. தான் தனித்து விடப்பட்டதாக உக்கிரேன் அதிபர் வொலடிமிர் செலன்ஸ்கி புலம்புகிறார்.



அமெரிக்கா உட்பட நேட்டோ படைகள் உருசியாவுக்கு எதிராக போரில் நேரடியாக இறங்கும் என அவர் எதிர்பார்த்து ஏமாந்து போனார். இப்போது அவர் நாட்டை விட்டு ஓடிவிடும் நிலை அல்லது சிறை பிடிக்கப்படும் நிலை ஏற்படும் என உளவு நிறுவனங்கள் எதிர்கூறல் கூறுகின்றன.

உக்ரேன் உருசியா படை மற்றும் ஆயுத பலம்

| | உக்கிரேன் | உருசியா |
|---|---|---|
| பிரதேசம் | கிழக்கு ஐரோப்பா | ஐரோப்பா, ஆசியா |
| தலைநகர் | கீவ் | மொஸ்கவ் |
| மொழி | உக்கிரேன் | உருசியா ப |
| மக்கள் தொகை | 44.46 மி | 145,054, 637 மி |
| மொத்த உற்பத்தி | 155,300 மி | 1,478,570 மி |
| தனிமனித வருமானம் | $ 3,741 | $10,115 |
| பரப்பளவு | 603,500 ச.கி.மீ | 17,125,191 ச.கி.மீ |
| படை | 200,000 | 850,000 |
| துணைப் படை | 50,000 | 250,000 |
| தாங்கிகள் | 2,596 | 1,420 |
| கவசயாகனங்கள் | 1,103 | 30,122 |
| போர் விமானங்கள் | 69 | 772 |
| உலங்குவானூர்தி | 34 | 544 |
| மொத்த விமானங்கள் | 318 | 4,173 |

உக்கிரேன் நாட்டில் உக்கிரேனியர்கள் 77.8 விழுக்காடும், உருசியர்கள் 17.3 விழுக்காடும் உள்ளனர். இருந்தும் சிறுபான்மை உருசியர்கள் மொழி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் புறக்கணிக்கப்படுகின்றனர். இதை எழுதிக் கொண்டிருக்கும் போது உருசிய குடிமக்களது உடைமைகளை கையகப்படுத்துமாறு உக்கிரேன் நாட்டு ஆட்சித்தலைவர் செலன்ஸ்கி கட்டளை பிறப்பித்துள்ளதாக செய்தி வந்துள்ளது.




உண்மையில் சிறிலங்காவுக்கும் உக்கிரேனுக்கும் பல ஒற்றுமை காணப்படுகிறது என்று சொல்லலாம்.

1) இரண்டும் பல்லின மக்கள் வாழும் நாடு
2) அரசியல் அமைப்பு இரண்டிலும் ஒற்றையாட்சி
3) உக்கிரேனின் உத்தியோக மொழி உக்கிரேன். சிறிலங்காவின் உத்தியோக மொழி சிங்களம். தமிழும் பெயரளவில் உத்தியோக மொழி
4) உக்கிரேனில் சிறுபான்மை உருசியர்கள் கிழக்கில் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். இலங்கையில் எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருக்கும் தமிழர்கள் வடக்கு - கிழக்கில் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள்.
5) இனவெறி மற்றும் மொழிவெறி ஆகியவை உக்கிரேனில் வேரூன்றிய சிக்கல்களாக உள்ளன.
6) உக்கிரேன் நாட்டு ஆயுதக் குழுக்களால் கிழக்கில் வாழும் உருசிய மக்கள் சித்திரவதை அடக்குமுறைக்கு உள்ளாகி வருகிறார்கள். சிறிலங்காவில் வட - கிழக்குத் தமிழர்கள், முஸ்லிம்கள் இராணுவம் மற்றும் காவல்துறை போன்றவற்றால் அடக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

வி.புலிகளுக்கும் சிறிலங்கா படையினருக்கும் இடையில் நடந்த போரில் உக்கிரேன் சிறிலங்காவுக்கு ஆயுதங்கள், போர் விமானங்கள் கொடுத்து உதவின. போர் விமானங்களை உக்கிரேனிய நாட்டு விமானிகளே ஓட்டினார்கள். இன்று அதே நாடு உருசிய நாட்டுப் படைகளால் துவம்சம் செய்யப்படுகிறது.

உருசியா உக்கிரேன் நாட்டின் மீது படையெடுத்தது தவறு. இன்றைய பூகோள அரசியலில் போர் மூலம் சிக்கல்களை தீர்க்க முடியாது. காரணம் போரில் வென்ற நாட்டுக்கும் தோற்ற நாட்டுக்கும் இழப்புத்தான் மிச்சம்.

இப்போது நடைபெறும் போர் உக்கிரேன் நாட்டுக்கும் உருசியாவுக்கும் இடையிலான போர் என்பதை விட அமெரிக்கா தலைமை வகிக்கும் நேட்டோ நாடுகளுக்கும் உருசியாவுக்கும் இடையிலானபோர் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். அமெரிக்கா, உக்கிரேன் நாட்டின் ஆட்சித்தலைவரை ஒரு பகடக் காயாகப் பயன்படுத்துகிறது. அதற்கு செலென்ஸ்கி பலியாகியுள்ளார். அமெரிக்க அரசின் கைப்பாவையாக மாறியிருக்கிறார். சட்டத்துக்கு மாறான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இவை உருசியாவின் கோபத்தைக் கிளறியுள்ளது.

செலென்ஸ்கி உருசிய சார்பு விக்டர் மெட்வெட்சுக்கின் கட்சியை அடக்கிவிட்டார். எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவாக இருப்பதாகக் கருதப்படும் சில ஊடகங்களை அவர் மூடிவிட்டார், ஆனால் அமெரிக்காவோ அல்லது அதன் கூட்டாளிளோ எவரும் இத்தகைய சனநாயக விரோத நடவடிக்கைகளைக் கண்டிக்கவில்லை. செலென்ஸ்கி, அமெரிக்க ஆட்சித்தலைவர் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் போரிஸ் யோன்சனை திருப்திப்படுத்த முயற்சிக்காமல் புத்திசாலித்தனமாக செயல்பட்டிருக்க வேண்டும்.

உருசியாவைக் கண்டிக்கிற தார்மீக உரிமை அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளுக்கு இல்லை. காரணம் இந்த நாடுகளே கடந்த காலத்தில் சிறிய சிறிய நாடுகள் மீது போர் தொடுத்து அவற்றை அழித்துள்ளன.

வியட்நாம் போரை (1979) விட்டுவிடுவோம். அண்மைக் காலத்தில் (2003) இராக் (அமெரிக்க, ஐக்கிய இராச்சியம்) ஆப்கனிஸ்தான் 2001 (அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம்) கெயிட்டி 1994 (அமெரிக்கா) இராக் 1991 (அமெரிக்கா,ஐக்கிய இராச்சியம், சவுதி, எகிப்து) பனாமா 1989 (அமெரிக்கா) 1988 Spratly Islands, 1983 கிரனேடா (அமெரிக்கா) ஆகிய நாடுகள் மீது அமெரிக்கா, ஐக்கியராச்சியம் போன்ற நாடுகள் படையெடுத்திருந்தன. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போர் 20 ஆண்டுகள் நீடித்தன. இவற்றை விட லிபியாவில் ஆட்சிமாற்றத்தை அமெரிக்கா கொண்டு வந்தது.

எனவே உருசியா மீது கை நீட்டுவதற்கு அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், கனடா போன்ற நாடுகளுக்கு தார்மீக உரிமை அறவே கிடையாது.

02 டிசெம்பர் 1823 இல் அமெரிக்கா மொன்றோ கோட்பாடு ஒன்றைப் பிரகடனப்படுத்தியது. இதன் அடிப்படையில் ஒரு ஐரோப்பிய நாடு மேற்கு அரைக்கோளத்தில் ஒரு தேசத்தை கட்டுப்படுத்த அல்லது தலையிட முயன்றால், அமெரிக்கா அதை தனது நாட்டுக்கு எதிரான செயலாகப் பார்க்கும்.

1964 இல் அன்றைய சோவியத் ஒன்றியம் அமெரிக்க மண்ணிலிருந்து 90 மைல் தொலைவில் உள்ள கியூபாவில் ஒரு அணுவாயுத தளம் அமைக்க சோவியத் ஒன்றியம் முற்பட்ட போது அதனை அமெரிக்க ஆட்சித்தலைவர் யோன் கெனடி தடுத்து நிறுத்தினார். இந்த நிலைப்பாடு சரியென்றால் உருசியா தனது எல்லை நாடா-ன உக்கிரேன் நேட்டோ நாடுகளது இராணுவ கூட்டணியில் சேரக் கூடாது எனக் கோருவதில் என்ன தவறு இருக்கிறது? அமெரிக்காவிற்கு ஒரு நியாயம் உருசியாவுக்கு இன்னொரு நியாயமா?

உருசியாவைச் சுற்றி உள்ள அனைத்து நாடுகளிலும் நேட்டோ தனது படையை நிறுத்தி வைத்திருக்கிறது. 1989 இல் நேட்டோவை கிழக்கு திசையில் ஒரு அங்குலம் கூட விரிவாக்கம் செய்ய மாட்டோம் என்று முன்னால் உருசிய ஆட்சித்தலைவர் கோர்பச்சேவிடம் நேட்டோ ஒப்பந்தம் மூலம் உறுதி அளித்திருந்தது. அதை மீறி, இது வரை 14 முறை நேட்டோ கிழக்கு நோக்கி விரிவாக்கம் செய்திருக்கிறது.

2014ல் உக்கிரேனில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கவிழ்த்து தனக்குச் சாதகமான பொம்மை அரசை அமெரிக்கா நியமித்தது. 2014 இல் இருந்து உக்கிரேனின் கிழக்கு பகுதியில் Luhansk, Donetsk ஆகிய இரண்டு பகுதியும் கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ளது. இப்போது இந்த இரண்டு பகுதிகளையும் தனித்தனி நாடாக உருசியா அங்கீகரித்து உள்ளது.

1969 ஆம் ஆண்டில், மறைந்த பிரதமர் பியர் ட்ரூடோ சனாதிபதி ரிச்சர்ட் நிக்சனைச் சந்திக்க வோஷிங்டனுக்குச் சென்றிருந்தார். கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகளை வரையறுக்க அவர் ஒரு சொற்றொடரை உருவாக்கினார்.

"அமெரிக்கா அருகில் வாழ்வது ஒரு யானையுடன் உறங்குவது போன்றது போன்றது என்றார். ஒவ்வொரு இழுப்பும் மற்றும் முணுமுணுப்புகளால் கனடா பாதிக்கப்படும்" என்று மறைந்த பியர் ட்ரூடோ கூறினார். உருசியா என்ற யானையோடு உக்கிரேன் நாட்டின் ஆட்சித்தலைவர் செலென்ஸ்கி பகைத்துக் கொள்வது ஆபத்தானது!

பிந்திக் கிடைத்த செய்தியின்படி உக்கிரேன் நாடு, நேட்டோ இராணுவக் கூட்டமைப்பில் உறுப்புரிமை கோருவதை வற்புறுத்தாது எனச் சொல்லப்படுகிறது. இது வரவேற்கத்தக்க புத்திசாலித்தனமான முடிவு. இல்லையேல் உருசிய - உக்கிரேன் இடையிலான சண்டை மூன்றாவது உலகப் போருக்கு வழிகோலும்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

# பாடசாலை வரலாற்றில் 47 வருடங்களுக்கு பின் வரலாற்றுச் சாதனை படைத்த ஊடகவியலாளரின் மகள்

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பனிக்கன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வரலாற்றில் 47 வருடங்களுக்கு பின் சாதனை படைத்துள்ளார். ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் அவர்களுடைய மகள் தவசீலன் புவனாஜினி அவர்கள்.

பனிக்கன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து பாடசாலையில் 1975 ஆண்டு மாணவி ஒருவர் மாவட்ட மட்ட வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தி பெற்றிருந்தார். அதன் பிற்பாடு பல மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருந்தாலும் கடந்த 47 வருடத்தின் பின்பு மாவட்ட வெட்டுப் புள்ளியைத் தாண்டி சிறந்த பெறுபேற்றைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார் தவசீலன் புவனாஜினி.






இன்று வெளியாகிய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் அவர்களுடைய மகள் தவசீலன் புவனாஜினி அவர்கள் 162 புள்ளிகளை பெற்றுள்ளார் முல்லைத்தீவு மாவட்ட வெட்டுப்புள்ளியாக 147 அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**








# யாழ் தீவக பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தினம்

சர்வதேச மகளிர் தினத்தை நினைவு கூறுமுகமாக யாழ் தீவக பெண்கள் வலையமைப்பினால் சர்வதேச மகளிர் தினம் வெள்ளிக்கிழமை (11) புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கத்தில் மி-கவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக புங்குடுதீவு பனை பொருள் போதனாசிரியர் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ விருந்தினர் தூய சவேரியார் ஆலய பங்கு தந்தை ரமேஷ் அடி-களார், புங்குடுதீவு இந்து மத குரு முரளி ரத சர்மா, சிறப்பு விருந்தினர்களாக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, மன்னார் சட்டத்தரணி புராதனி, அருட்தந்தை கலாநிதி ஜோன் போல் சிவலிங்கம் D.X.N.NWC.CCTV பிரதிபலிப்பு சிகிச்சையாளர் ப.நிர்மலன் வேலணை கிராம சேவையா-ளர் பத்மசிறி கனகரெத்தினம் நோனா வின்சன், சமூக சேவையாளர் புங்குடுதீவு மற்றும் தீவக பெண்கள் அமைப்பினர் போன்றோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மேலும் இந்த நிகழ்வில் மாணவ மாணவி-யரின் அழகிய கலை நிகழ்வுகளும் விழிப்புணர்வு நாடகம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது

**- மன்னார் நிருபர்**














# வெகுவிமர்சையாக இடம்பெற்ற கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 25 வது பொதுப் பட்டமளிப்பு விழா

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசி-ரியர் வல்லிபுரம் கனகசிங்கம் அவர்களின் ஒருங்கிணைப்பில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் வைத்திய கலாநிதி வேல்முருகு விவேகானந்தராஜா அவர்களது தலைமையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நல்லையா கேட்போர் மண்டபத்தில் சனிக்கிழமை (12) காலை 25வது பொதுப் பட்டமளிப்பு விழா வி-மரிசையாக இடம்பெற்றது.

இரண்டு நாட்களில் இரண்டு அமர்வுகளாக இடம்பெறவுள்ள பொதுப்பட்டமளிப்பு விழாவின்போது இம்முறை 1958 உள்வாரி மற்றும் வெளிவாரி பட்டதாரி மாணவர்களுக்கும், பட்டப்பின் தகைமை பெறுபவர்களுக்கும், கௌரவப் பட்டம் பெறுபவர்களும் தமக்கான பட்டத்தினை பெறவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தவிசாளர் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பீ.உடவத்த அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார்.

இம்முறை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இப் பல்கலைக்கழகத்தின் காலஞ்சென்ற முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் அவர்களின் சேவையை நினைவு கூர்ந்து கௌரவ விஞ்ஞான கலாநிதிப் பட்டமும் மட்டக்களப்பின் மூத்த எழுத்தாளரும் சமூகவியலாளருமான வெல்லவூர் கோபால் என அழைக்கப்படும் தேசிய கலைஞர் சீனித்தம்பி கோபாலசிங்கம் அவர்களின் சேவையை பாராட்டி கௌரவ முது இலக்கியமாணி பட்டமும் வழங்கிவைக்கப்பட்டிருந்தமை மிகவும் முக்கியமான விடயமாக கருதப்படுகின்றது.

கிழக்கு பல்கலைக்கழக வரலாற்றில் முதல் முறையாக 1958 மாணவர்களுக்கான பொதுப்பட்டமளிப்பு நிகழ்வு நடாத்தப்படுவது இதுவே முதல் தட-வையாகும்.

பாரம்பரிய இசை வாத்தியங்கள் முழங்க அதிதிகள் மற்றும் பட்டம் பெறவுள்ள மாணவர்களுக்கும் வரவேற்பளிக்கப்பட்தனைத் தொடர்ந்து, மங்கள விளக்கேற்றலுடன் முதல் நாள் பட்டமளிப்பு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், கிழக்குப்பல்கலைக்கழகத்தின் வேந்தர் வைத்திய கலாநிதி வேல்முருகு விவேகானந்தராஜா அவர்களினால் பட்டதாரி மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கிவைக்கப்பட்டன.



இம்முறை இடம்பெறும் குறித்த பட்டமளிப்பு விழாவில் வணிக நிர்வாகத்தில் முதுமாணி (MBA), முதுகலைமாணி (MA), முதுகல்விமாணி (MEd), அபிவிருத்திப் பொருளியலில் முதுமாணி (MDE) ஆகிய 133 பட்டப்பின் தகமைகளுக்கான பட்டங்களும், 2 கௌரவப் பட்டங்களும் முதலாம் நாள் முதலாவது அமர்வில் வழங்கப்பட்டிருந்தது. ஏனைய இளமாணிப் பட்டங்களுக்காக 2வது அமர்வில் 408 பட்டதாரி மாணவர்களும், 3வது அமர்வில் 340 பட்டதாரி மாணவர்களும், இரண்டாம் நாள் நிகழ்வில் முதலாவது அமர்வில் 330 பட்டதாரி மாணவர்களும், 2வது அமர்வில் 360 பட்டதாரி மாணவர்களும், 3வது அமர்வில் 385 பட்டதாரி மாணவர்களும் பட்டமளித்து கௌரவிக்கப்படவுள்ளனர்.


இப் பொதுப்பட்டமளிப்பு விழாவின் முதல் நாள் நிகழ்வில் பட்டமளிப்பு விழா குழு தலைவர் பேராசிரியம் எம்.சிதம்பரேசன், பீடாதிபதிகள், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஏ.பகீரதன், சிரேஸ்ட உதவிப் பதிவா-ளர் (கல்விப் பிரிவு) திருமதி.நிசாந்தினி நிருமிதன், செனட் உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், பட்டதாரி மாணவர்கள் மற்றும் பட்டதாரி மாணவர்களின் பெற்றோர்கள் என பெரும-ளவிலானோர் இதன்போது கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# பேச்சுவார்த்தைகளும் பேரினவாத அரசுகளும்

- திருமலை நவம்



கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்குமிடையில் கடந்த 15 ஆம் திகதி நடைபெறவிருந்த பேச்சுவார்த்தை தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர்வரும் மார்ச் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடுகளை கண்டித்து எதிர்க்கட்சியினர் முன்னெடுத்த ஆர்ப்பாட்டம் காரணமாக இச்சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக இருதாரப்பினருக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெறும் நடைபெறும் என்று எதிர்பார்த்தபோதும் அது நடைபெறவில்லை. ஜனாதிபதி கோத்தபாயாவின் அழைப்புக்கா தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு காத்திருந்த நாட்கள் அதிகம்.

கடந்த 2021 ஆண்டு ஆனிமாதமளவில் கூட்டமைப்புடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும் இறுதி நேரத்தில் அது ஒத்திவைக்கப்பட்டது என்பதைவிட இரத்து செய்யப்பட்டது என்பதே உண்மை. இதற்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும் ஜனாதிபதியுடன் மிக நெருக்கமான தெற்கு அரசியல்வாதிகளின் வலியுறுத்தல் காரணமாக சந்திப்பு இரத்துசெய்யப்பட்டதாக தகவல் வெளிக்கொண்டுவரப்பட்டது.

சாண் ஏற முழஞ்சறுக்குவதுபோல் இந்த திகதியும் சறுக்கியிருக்கிறதாக கூறப்பட்டாலும் ஆரிடத்தார் கூறுவதுபோல் இராகுவும் கேதுவும் ஒன்றாக சந்திப்பதற்கு இன்னும் நேரம் கைகூடப்போலவில்லை.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட நாளிலிருந்து தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைப்பார் என்று பல தரப்பினராலும் எதிர்பார்க்கப்பட்டபோதும் அந்த காரியம் இதுவரை கைகூடாத நிலையில்தான் இலங்கைக்கு அண்மைக்காலமாக கொடுக்கப்பட்டுவரும் அழுத்தம் காரணமாகவே கூட்டமைப்பை அழைத்து பேசும் முடிவுக்கு அரசாங்கம் வந்துள்ளது என்ற கருத்து விமர்சன முறையில் எடுத்துக்கூறப்படுகிறது.

மனிதவுரிமைப்பேரவையால் ஏற்படுத்தப்பட்டுவரும் மறைமுக அழுத்தம், இந்தியப்பிரதமர் நரேந்திரமோடிக்கு தமிழ்க்கட்சிகளால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி (24.2.2022) ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் காணி அபகரிப்புக்கு எதிராக நடத்திய போராட்டம், நாட்டின் இறுக்கமான பொருளாதார நெருக்கடிகள் என்பவற்றை சமாளிக்கும் விதத்தில் இந்த அழைப்பை ஜனாதிபதி கூட்டமைப்புக்கு விடுத்திருக்கலாம் என்பது பொதுவான கருத்தாக கருதப்படுகிறது.

ஆனால் இந்த சந்திப்புத் தொடர்பில் புலம்பெயர் அமைப்புக்கள் தாயக பற்றாளர்கள் கூட்டமைப்பின் பங்காளி கட்சியை சேர்ந்தவர்கள் மற்றும் இன்னும் தமிழ்த்தேசியத்தை முன்னிலைப்படுத்தும் கட்சியை சார்ந்தவர்கள் திருப்தியான அல்லது ஆர்வமான தமது சமிஞ்சையை காட்டவில்லை. ஏன்றே கூறலாம். காரணம். அரசுடனான பேச்சுவார்த்தை என்பது வெறும் ஏமாற்று நாடகமாவும் காலம் கடத்தும் செப்படி வித்தையாகவும் இருப்பதனால் இந்த வெறுப்பை அல்லது எதிர்ப்பை தெரிவிப்பதாக கூறப்படுகிறது.

நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிகட்சியான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கூட்டமைபின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அண்மையில் கடிதமொன்ற எழுதியிருந்தார் அக்கடிதத்தில் “ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைக்கு நாம் அவசரப்படவேண்டியதில்லை. துற்போதைய சூழலில் ஏற்பட்டுள்ள உள்ளூர், சர்வதேச நெருக்கடிகளை தவிர்த்துக்கொள்வதற்காகவே பேச்சுவார்த்தைக்கான அழைப்பு ஜனாதிபதியால் விடுக்கப்பட்டுள்ளது ஆகவே சந்தித்து எமாறவேண்டாம்” என்ற அவநம்பிக்கையோடு இக்கடிதத்தை அனுப்பிருக்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

இதேவேளை புலம்பெயர் சமூகத்தின் சார்பில் பிரித்தானியாவிலிருந்து ஓர் அமைப்பு தமது கருத்தை பதிவு செய்தபோது கூட்டமைப்பினர் ஜனாதிபதியை சந்திப்பதற்கு முன்பு:

- ஜனாதிபதி என்ன நிகழ்ச்சி நிரலின்கீழ் பேச அழைக்கிறார். ஏன்பது தெளிவு படுத்தப்படவேண்டும்.
- ஜனாதிபதி பதவியேற்ற காலத்திலிருந்து மேற்கொண்டுவரும் காணிசுவீகரிப்பு பௌத்த சின்னங்களின் விஸ்தரிப்புக்களை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.
- பல வருடங்களாக அரசியல் கைதிகளாக அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளை எந்தவித நிபந்தனையுமின்றி விடுவிக்கவேண்டும்.
- வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சனைக்கு உடன் தீர்வு வழங்க செயற்படவேண்டும்.
- பயங்கரவாத தடைச்சட்டம் உடன் நீக்கப்படவேண்டும்.
- 13 ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- காத்திரமான அரசியல் தீர்வு கொண்டுவரப்பட வேண்டும்.

இவற்றை நடை முறைப்படுத்தும் உறுதி மொழியை ஜனாதிபதி தருவதாக நம்பினால் பேச்சு வார்த்தைக்கு செல்லுங்கள் இல்லையேல் இலங்கை ஜனாதிபதி கோத்தபாயாவின் பொறிக்குள் விழுந்துவிடவேண்டாம். அழைப்பை மறுபரிசீலனை செய்யுங்கள். என்று அந்த அமைப்பு தமது கருத்தை பதிவு செய்திருப்பதோடு இந்தியப்பிரதமர் நரேந்திரமோடியின் அழைப்பை ஏதேதோ காரணங்காட்டி இழுத்தடிப்பு செய்துவிட்டு ஜனாதிபதியின் அழைப்பை கனம்பண்ணி விழுந்தடித்து ஓடவேண்டுமா? என கேள்வி எழுப்பியிருக்கிறது அந்த அமைப்பு.



ஆனால் இது தொடர்பாக கருத்துத் தெரிவித்திருக்கும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்கள் “பேச்சுவார்த்தைக்கான கதவு திறக்கப்படும்போது அச்சந்தர்ப்பத்தினை கை நழுவ விட்டுவிட முடியாது. தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வினை அழுத்தமாக வலியுறுத்துவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றபின்னர் நடை பெறுகின்ற முதலாவது பேச்சுவார்த்தையாக இது அமையப்போகிறது. ஞாயமான கோரிக்கைகளை முன்வைத்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக்கொள்வதில் எந்தவித தவறுமில்லை” என சம்பந்தன் தமது பக்க கருத்தை ஞாயப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பங்காளிக்கட்சியான புளட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு தொடர்பில் விசனங்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகிறதே இதுபற்றி தங்கள் கருத்தென்ன என்று வினவியபோது அவர் தெரிவித்த கருத்து.


“மக்களின் அபிப்பிராயத்தில் ஞாயம் இருக்கலாம் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன் தமிழ் தலைமைகளுடன் பேசுவதற்கு ஜனாதிபதி கடந்த இரண்டுவருடங்களாக ஆர்வம் காட்டவில்லை என்பது உண்மைதான் ஆனால் தற்போது பேச அழைத்திருக்கிறார் என்றால் அவர் தானாக முன்வந்து பேச அழைக்கவில்லை. சூழ்நிலை அவ்வாறு அமைக்கப்படடிருக்கிறது.

“தங்களுடனான பேச்சுவார்த்தைக்கு நேரம் ஒதுக்கி தாருங்கள் என கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஏலவே கடிதம் எழுதியிருக்கிறார். இதுதவிர இன்னொரு முக்கிய விடயம் தமிழ்த்தேசியப்பரப்பிலுள்ள அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அண்மையில் (24.2.2022) ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக ஒரு ஆர்ப்பாட்டம் நடாத்தினோம். அந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஜனாதிபதியை சந்திக்கவேண்டுமென்ற கோரிக்கையை நாம் முன் வைத்திருந்தோம்.

இவை ஒருபுறமிருக்க சர்வதேசம் என்ன கூறுகிறது இலங்கை ஜனாதிபதிக்கு நாம் அழுத்தம் கொடுத்துவருகிறோம் தமிழ்க்கட்சிகளுடன் பேசி பிரச்சனைக்கு தீர்வு காணுங்கள் என்று அதேவேளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாங்கள் முன்வந்து இலங்கைப்பிரச்சனையை பேசி முடிப்போம் என்று சர்வதேசமோ இந்தியாவோ கூறவில்லை இதுதான் உண்மை. ஆனால் அவர்களுடைய அழுத்தம் காரணமாகவே ஜனாதிபதி தற்போது தமிழ்த்தரப்பினருடன் பேச முன்வந்துள்ளார் என்பது பகிரங்கமாக தெரிந்தவிடயம்.

மிக நீண்ட காலத்துக்குப்பின் அண்மையில் இந்தியா இலங்கை அரசாங்கத்தை நோக்கி ஒரு அழுத்தத்தை பிரயோகித்துள்ளது 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தமிழ் மக்களுடைய பிரச்சனைக்கு தீர்வு காணுங்கள் என்று” இவ்வாறு ஒரு சாதகமான சூழ் நிலை ஏற்பட்டிருக்கும் நிலையில் அதை நாம் தவற விட முடியாது.

தமிழ் மக்களுடைய பிரச்சனை தீர்க்கப்படவேண்டுமாயின் இலங்கை ஜனாதிபதியுடனையே நாம் பேசி ஆகவேண்டும் இதுதான் யதார்த்தம். ஜனாதிபதி எப்போது பலவீனப்பட்டிருக்கிறாரோ அப்போதுதான் நாம் பேசமுடியும் இப்பொழுது அந்த நிலை ஏற்பட்டுள்ளது. அவர் தற்போது பலவீனப்பட்டிருக்கிறார் நாங்கள் பலப்பட்டிருக்கிறோம். அதுதான் பேச உடன்பட்டோம்”. என சித்தார்த்தன் தனது கருத்தை தெரிவித்தார்.



சித்தார்த்தனும் கூட்டமைப்பின் தலைமைகளும் இத்தகைய கருத்துக்களை கொண்டிருந்தாலும் பங்காளிகட்சியான ரெலோவின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தரப்பினர் திட்டவட்டமாக தாம் இச்சந்திப்பில் கலந்துகொள்ளமாட்டோம் எனவும் ஒத்தி வைக்கப்பட்டுள்ள மார்ச் 25 ஆம் திகதி சந்திப்பில் கலந்து கொள்வதா இல்லையா? என்பது பற்றி ரெலோவின் மத்தியகுழுக்கூட்டத்தில் முடிவெடுக்கப்படுமென அடித்துக்கூறியுள்ளனர். ரெலோ அமைப்பு மிக நீண்டகாலமாகவே கூட்டமைப்புடன் ஒருமித்து பயணித்துவரும் ஒருகட்சி என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

இவையெல்லாவற்றையும் ஆராய்ந்து பார்க்கிறபோது சந்திப்பு தொடர்பில் கூட்டமைபினருக்கிடையில் ஒருமித்த கருத்து உண்டாக்கப்படவில்லை என்பது மட்டுமன்றி தமிழ்த்தேசியப்பினருக்கிடையில் நேரொத்த கருத்துக்கள் இல்லை என்பது புலனாகிறது. இதற்குரிய வரலாற்று காரணங்கள் பலவுள்ளன என்பது மறைமுகமாக உணர்த்தப்படுகிற விடயமாக இருக்கலாம். உதாரணமாக இலங்கை சுதந்தரம் அடைந்த காலத்திலிருந்து இலங்கை அரசாங்கங்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தங்கள் வட்டமேசை மகாநாடுகள் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அரசியல் மயப்பட்ட பேச்சுவார்த்தைகள் சந்திப்புக்கள் ஆகிய எவையுமே முற்பயனும் தரவில்லை பிற்பயனும் தரவில்லை என்பதுதான் உண்மை. இந்த யதார்த்தமே மக்களுக்கும் அரசியல் தலைமைகளுக்கும் பேச்சுவார்த்தை தொடர்பான வெறுப்பையும் விரக்தியையும் தந்து நிற்பதற்கான காரணங்களாக இருக்கலாம்.

2011 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துடன் கூட்டமைப்பு 18 தடவைகள் பேச்சுவார்த்தைகளை நடாத்தியிருக்கிறது. முடிவில் என்ன நடந்தது? ஆதியும் காணாமல் அந்தமும் காணாமல் அரசாங்கத் திட்டமிட்டமுறையில் பேச்சுவார்த்தையை தானாகவே முறித்துக்கொண்டது.

யுத்தம் முடிவுற்ற காலத்தில் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பாங்கிமூனும் சேர்ந்து வெளியிட்ட அறிக்கையில் தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சனைக்கு முறையான தீர்வை வழங்குவோம் என இலங்கை அரசாங்கம் அளித்த வாக்குறுதிக்கு என்ன நடந்தது?. 1983 ஆம் ஆண்டு இடம் பெற்ற திம்பு பேச்சுவார்த்தை, 1989 ஆம் அண்டு ஜனாதிபதி பிரேமதாஸ காலத்தில் வரையப்பட்ட மங்கள முனசிங்க தீர்வு ஆலோசனைகள், 2000 ஆம் ஆண்டு சந்திரிக்கா அம்மையார்காலத்தில் பாராளுமன்றில் முன்வைக்கப்பட்ட தீர்வுப்பொதி, 2006 ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட சர்வகட்சி பிரதிநிதிகள் மற்றும் நிபுணர் குழு நியமனம் அதன் சிபார்சுகளும், 2016 ஆம் அண்டு ஜனாதிபதி மைத்தரிபாலசிறிசேன நல்லாட்சி கால அரசியல் நிர்ணசபை விவகாரங்கள் இவை அனைத்துக்கும் என்ன நடந்தது?.

இதற்கு அப்பால் விடுதலைப்புலிகள் காலத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆகியோருக்கிடையில் நடந்த உடன்படிக்கை, 2003 ஆண்டுகளில் இடம்பெற்ற பிரான்ஸ் சுவீஸ் நோர்வே மற்றும் யப்பான் போன்ற நாடுகளில் இடம் பெற்ற சமாதான பேச்சுவார்த்தைகள், எல்லாமே அர்த்தமற்றவகையில் இத்துப்போனது. இந்த தோல்விகள் பற்றிய மக்களின் அவநம்பிக்கைகளே பேச்சுவார்த்தையென்று உச்சரிக்கப்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம் மக்கள் வெறுப்படைவதும் விரக்தியுறுவதும் அரசியல் தலைமைகள் நம்பிக்கை இழப்பதும் வழமையாகிவிட்டது.

(தொடர்ச்சி 25ம் பக்கம்)

சினிமா

# "ராதேஷ்யாம்" திரைப்படத்தின் முதல் நாள் வசூல் ரூ.79 கோடி என அறிவிப்பு




பிரபாஸ், பூஜா ஹெக்டே மற்றும் பலர் நடிக்க ராதாகிருஷ்ணகுமார் இயக்கத்தில் உருவான "ராதேஷ்யாம்" படம் நேற்று ஐந்து மொழிகளில் வெளியானது. இப்படம் பிரபாஸின் முந்தைய பான்--இந்தியா படமான "சாஹோ" படத்தின் வசூலை முறியடிக்கும் என பட வெளியீட்டிற்கு முன்பு சொன்னார்கள். ஆனால், படம் காதல் படமாக மட்டுமே இருப்பதால் படத்திற்கான வசூல் எதிர்பார்த்த அளவு இல்லை என்று முதல் கட்டத் தகவல்கள் தெரிவித்தன.இந்நிலையில் படத்தைத் தயாரித்துள்ள யுவி கிரியேஷன்ஸ் அவர்களது சமூகவலைதளத்தில் படத்தின் முதல் நாள் வசூல் ரூ.79 கோடி என அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. ஆனால், மொழிவாரியாக எவ்வளவு வசூல் என்பதை அவர்கள் அறிவிக்கவில்லை. தயாரிப்பு நிறுவன அறிவிப்பின்படி இந்த ஆண்டில் இதுவரையில் வெளிவந்த தெலுங்குப் படங்களின் முதல் நாள் வசூலில் "ராதேஷ்யாம்" முதலிடத்தைப் பிடித்துள்ளது.



# இலட்சியத்தை அடைவதற்கு ஊனம் ஒரு தடை இல்லை – "கிளாப்" திரைப்பட விமர்சனம்

வாழ்வின் இலட்சியத்தை அடைவதற்கு ஊனம் ஒரு தடை இல்லை என்பதை அழகாகச் சொல்லி இருக்கிறார் இயக்குநர் பிர்த்தவி ஆதித்தியா. ஓட்டப்பந்தைய சங்கத்தின் தலைவர் நாசரின் மகனை 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் தோற்கடித்து ஆதி தங்கப் பதக்கம் வெல்கிறார். அதன் பிறகு ஆதியும் அவரது தந்தை பிரகாஷ் ராஜும் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது ஏற்பட்ட விபத்தில் பிரகாஷ் இறந்து விடுகிறார். பலத்த காயத்துடன் ஆதி மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார்.

இந்த விபத்தை பயன்படுத்தி நாசர் தனது மகனை தோற்கடித்த ஆதி இனிமேல் ஓட்டப் பந்தையத்தில் கலந்து கொள்ளக் கூடாது என்பதற்காக டாக்டருக்கு பணம் கொடுத்து ஒரு காலை வெட்டி எடுக்கச் சொல்கிறார். டாக்டரும். பணத்தாசை பிடித்து காலை வெட்டி ஆதியை ஊனமாக்கி விடுகிறார். விபத்தில் தந்தை இறந்த கவலை, தான் ஊனமாகியது இவற்றால் ஆதி தனது மனைவி அகான்ஷா சிங்குடன் 6 வருடங்களாக பேசாமல் இருக்கிறார் ஆதி.

இந்த நிலையில்தான் ஆதிக்கு முனிஷ்காந்தின் மூலமாக, கிரிஷா குரூப் தடகள போட்டியில் தங்கப் பதக்கம் வெல்லும் வரை ஓடியவரை, தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்தவர் என்பதற்காக நாசர் கிருஷா குரூப்பை போட்டியிலிருந்து விலக்கியது தெரியவருகிறது. அந்த இளம். பெண்னுக்கு பயிற்சி கொடுத்து இண்டர் நேஷ்னல் போட்டியில் வெற்றிபெற வைக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் கிரிஷா குருப்புக்கு பயிற்சி கொடுக்க பயிற்சியாளர்களிடம் அழைத்துச் செல்கிறார் ஆதி. பயிற்சியாளர்கள் நாசருக்குப் பயந்து பயிற்ச்சியளிக்க மறுக்குகிறார்கள். கிருஷா குரூப் பயிற்சி பெற்று இண்டர்நேஷ்னல் தடகள போட்டியில் வெற்றி பெற்றாரா என்பததை சொல்கிறது மீதிக்கதை.

ஊனமுற்றவராக நடிக்கும் ஆதி மிக அற்புதமாக நடித்திருக்கிறார். சோகத்தையும் ஏக்கத்தையும் முகத்தில் படரவிட்டிருக்கும் விதம் பாராட்டுக்குறியது. உச்சக்கட்ட காட்சியில்தான் ஆதியின் சிரிப்பை காணமுடிகிறது. படமுழுக்க சோகத்தின் நிழலை ஆதியின் முககத்தில் படரவிட்டிருக்க வேண்டாம். வில்லத்தனத்தின் மொத்த உருவத்தை நாசரிடம் காணமுடிகிறது. அலட்டிக் கொள்ளாமல் எதார்த்தமாக வில்லத்தனத்தை வெளிப்படுத்தும் நாசருக்கு இனி வில்லன் வேடம்தான் கிடைக்குமென்றாலும் ஆச்சரியமில்லை. ஓட்டப்பந்தைய வீராங்கனையாக நடித்திருக்கும் கிருஷா குரூப் கடுமையாக உழைத்திருக்கிறார். திரைவானில் ஒரு நட்சத்திரமாக ஜொலிக்கும் வாய்ப்பு கிடைக்குமென்பதை எதிர்பார்க்கலாம். முனிஷ்காந்தின் கையும் வாய்யும் தான் நடித்திருக்கிறது. கதையின் ஓட்டம் பார்வையாளர்களை அசையவிடாமல் உட்கார வைத்து விடுகிறது.

இலட்சியதை அடைய ஊனம் ஒரு தடை இல்லை என்பதை திரையில் காட்டிய இயக்குநர் பாராட்டுக்குறியவர். படமுடிவில் ரசிகர்கள் கிளாப் அடிப்பார்கள்.


**Sapphire Banquet & Catering**

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Children's Party
- Engagement Party
- and more...
- Family Get-together
- Graduation Party
- Holiday Party
- Religious Ceremonies
- Wedding Showers

SHIVA SUBRAMANIAM
(647) 406-4868





(23ம் பக்கம் தொடர்ச்சி)

## பேச்சுவார்த்தைகளும் பேரினவாத அரசுகளும்

தமிழ் மக்களின் பொதுவான எதிர்பார்ப்புக்களின் மத்தியில் பேச்சுவார்த்தை என்ற பதம் அருவருப்புக்குரியதாகவும் அவநம்பியுடையதாகவும் மாறிப்போனமைக்கு கடந்த கால வரலாற்று அனுபவங்களே காரணமாக இருக்கின்றன.

குறிப்பாக இன்றைய ஆட்சியாளர்களுடனான பேச்சுவார்த்தை தொடர்பில் தமிழ் மக்கள் தங்கள் விசனங்களை வெளிப்படுத்துவதற்கு காரணமாக இருப்பவை ஆட்சியாளர்களின் குறிப்பாக ஜனாதிபதியவர்களின் உதாசீனப்போக்கும் சிறுபான்மை சமூகத்திமீது அவரால் கட்டவிழ்த்துவிடப்படுகிற ஜனநாயக தன்மை மீறிய அரசியல் அதிகாரப்பிரயோகங்களுமாகும்.

கடந்த மூன்று வருடங்களாக ஜனாதிபதியின் இராணுவ மயமாக்கும் போக்குக்கள். தொல்லியல் அகழ்வாராட்சிகள், வனவிலங்கு பாதுகாப்பு, வனப்பாதுகாப்பு என்ற போர்வையில் தற்போது இடம் பெற்றுவரும் காணி சூறையாடல்கள், காணமல் ஆக்கப்பட்டோர்விவகாரத்தில் கரிசனைகாட்டாமல் மூடிமறைப்புசெய்தல், அரசியல் கைதிகள் விடுதலை விவகாரத்தில் உதாசீனமாக நடந்து கொள்ளல், யுத்த காலத்திலும் அது மௌனித்த காலத்திலும் மரணித்த சிவில் சமூகம் மற்றும் ஊடகத்துறையினரை குடும்ப உறுப்பினர்களை நினைவு கூறுவதை தடுப்பதும் அவர்களை கைது செய்வதும், தமிழ் மக்களை அவர்தம் காணிகளில் மீளக்குடியேற விடாது தடுப்பது கலாசர மையங்கள் பௌத்த விஸ்தரிப்புக்கள் இராணுவ விஸ்தரிப்புக்கள் என்ற வகையில் குடியிருப்புக்காணிகள் மத தலங்களுக்குரிய நிலங்களை கையகப்படுத்தல் என்ற நிகழ்ச்சி நிரல்களை அமுல்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகள். அரசாங்கத்தின் அடாவடித்தனங்களை படம் பிடித்து காட்டுவனவாக இருக்கின்றன என்று எடுத்துக்கூறப்படுகிறது.

இவை அனைத்துக்கும் அப்பால் தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் பிரச்சனைக்கு தீர்வுகாணும் வழிமுறைகளை ஏற்றுக்கொள்ள மறுப்பதும் உதாசீனப்படுத்துவதும் யுத்தகால குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் என்பவற்றை ஏற்றுக்கொண்டு பொறுப்புக்கூறும் விடயத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பதும் போன்ற பல்வேறு செயலாட்டங்கள் தற்போதைய அரசாங்கத்தின்மீது சர்வதேச சமூகத்துக்கும் உள்ளூர் மக்களுக்கும் நம்பிக்கை குறைவை ஏற்படுத்தியிருப்பதனாலையே பேச்சுவார்த்தை என்ற வாசகம் தமிழ் மக்களுக்கு புளிச்சுப்போன வார்த்தைகளாக காணப்படுகிறது.

அண்மையில் இந்தியாவுக்கு சென்று நாடு திரும்பியுள்ள வெளிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வுகாணும் வகையில் ஜனாதிபதி அவர்கள் தமிழ்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று கூறியிருப்பதுடன் இந்தியப்பிரதமருக்கு கடிதம் அனுப்பலாம் அதைவிட எங்கள் பிரச்சனையை எங்கள் நாட்டிலையே தீர்த்துக்கொள்ளவேண்டும் என அவர் கூறியிருப்பது எந்தளவுக்கு சாத்தியமானது என்பதை சந்திப்பின் முடிவில்தான் தெரிந்து கொள்ள முடியும்.

கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான சந்திப்பு தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் விமர்சனங்கள் விசனங்கள் முரண்பாடுகள் வெளிப்படுத்தி காட்டப்பட்டாலும் காலத்தின் நியதி கருதி கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான சந்திப்பு அவசியமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அச்சந்திப்பு பயனற்றதாக போகுமாயின் அது நீண்டகால அபகீர்த்தியை உண்டாக்கிவிடும் என்பதை சந்திப்பாளர்கள் புரிந்து கொள்ளவேண்டும். அதை மாற்றும் வகையில் ராஜதந்திரங்களை கையள்வதில்தான் தமிழ் மக்கள் மத்தியில் எதிர்கால நம்பிக்கைகளை ஊட்ட முடியும்.


உ
அம்பாள் துணை
தெல்லிப்பழை
அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தலைவாயில் ஸப்ததள ஏகாசீதி தூள
மகா இராஜ கோபுர கும்பாபிஷேக விஞ்ஞாபனம்
கர்மாரம்பம்
18.03.2022 பங்குனி 4ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 4.00மணி
மஹா கும்பாபிஷேகம்
23.03.2022 புதன்கிழமை
காலை 9.51 மணிமுதல் 10.15 மணிவரை
கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
அனைவரும் வருகை தந்து அம்பாளின் திருவருளைப் பெறுவோமாக.
நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.








கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

கடன் அட்டை. வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைமேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
rotec all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# ஐம்பது வருடங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டின் "வானம்பாடிகள்" இலக்கிய குழுவினர் வழிகாட்டலில் தங்களை கவிஞர்களாக அடையாளப்படுத்தியவர்கள் மிக அதிகம்

## விழுப்புரம்' நகரில் இடம்பெற்ற "அத்தியூர் விஜயா" நூல் வெளியீட்டு விழாவில் உதயன் லோகேந்திரலிங்கம் தெரிவிப்பு

**(சென்னையிலிருந்து அருண் கதாகரன்)**



ஐம்பது வருடங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டின் "வானம்பாடிகள்" இலக்கிய குழுவினர் வழிகாட்டலில் தங்களை கவிஞர்களாக அடையாளப்படுத்தியவர்களில் பலர் இன்றும் எழுதிக்கொண்டிருகின்றார்கள். அவர்களில் நானும் ஒருவன் என்தை இங்கு கூடியிருக்கின்றவர்களோடு பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். அன்றைய இலக்கிய ஈடுபாடும் அக்கறையும் தற்போதைய இலக்கியவாதிகளிடம் இல்லாத ஒன்றாகிவிட்டது. பல இலக்கியவாதிகளுக்கு "தலைக்கனம்" அதிகமாகி விட்டது. தங்களை மட்டுமே உயர்த்திக் கொள்வதில் ஆர்வம் கொண்டவர்களாக காணப்படுகின்றார்கள்.

ஆனாலும் இன்றைய நமது கதாநாயகன் நண்பர் ஜோதி நரசிம்மன் எவ்விதமான கர்வம் அற்றவராய் அடி மட்டத்தில் வாழ்ந்து அரசினதும் காவல்துறையினதும் அடக்கு முறைக்கு உள்ளாகிய பல்வேறு இன்னல்களை அனுபவித்த இருளர் இன மக்களின் துன்பியல் அனுபவம் கொண்ட வாழ்க்கையையும் குறிப்பாக அத்தியூர் விஜயா என்னும் சமூகப் போராளியைப் பற்றியும் மற்றவர்கள் அறிந்து கொள்ள இந்த "அத்தியூர் விஜயா" என்னும் நாவலைப் படைத்துள்ளார். அத்துடன் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு இன்று வெளியிடப்படுகின்றது. இந்த விழாவில் நான் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.





இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை 13ம் திகதி விழுப்புரம்" நகரில் இடம்பெற்ற "அத்தியூர் விஜயா" நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய உதயன் லோகேந்திரலிங்கம் தெரிவித்தார் அங்கு அத்தியூர் விஜயாவின் போராட்டங்கள் மற்றும் தன்னை மானபங்கம் செய்த காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக தொடுத்த வழக்குகள் ஆகியவற்றில் அவருக்காக நீதிமன்றத்தில் வாதாடிய வழக்கறிஞர் எம். ஆர். செரிப் அவர்களை பாராட்டும் வைபவமும் இணைக்கப்பட்டிருந்தது.

விழுப்புரம் "சாந்தி நிலையம்" மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு ஆசிரியர் த.பாலு அவர்கள் தலைமை தாங்கினார். வரவேற்புரையை இரா முருகப்பன் வழங்கினார். அங்கு உரையாற்றிய ஆர். என்.லோகேந்திரலிங்கம் அவர்கள் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், "இன்றிலிருந்து நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் நான் எழுதிய கவிதை வரிகளிலிருந்து ஒன்றைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். அதற்கு காரணம் இன்றை இந்த விழாவான அந்த வரிகளுக்கு மிகவும் பொறுத்தமானவை என்று கருதுகின்றேன்.





அடக்கப்பெற்று வாழ்ந்த நான் ஒரு நாள் வெகுண்டெழுந்தேன். அன்று முதல் நான் ஒரு போராளி" என்பதுதான் இந்த வரிகள்.

இன்று இந்த மண்டபத்தில் கூடியிருக்கின்ற அனைவரும் ஒரு வகையான போராளிகளே ஆவார்கள். சமூகப் போராளிகளான இருளர் இன மக்கள் அவர்களில் தலைமைத்துவத்தை எடுத்துப் போராடுகின்றவர்கள் எழுத்துப் போராளிகள் சட்டப்போராளிகள் போன்றவர்கள் கூடியிருக்கின்ற இந்த மண்டபத்தில் இந்தியாவின் தமிழ்நாட்டில் எங்கோ ஒரு இடத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் காவல்துறையின் அடக்குமுறைகளுக்கு எதிராக இடம்பெறும் உணர்வு மிக்க போர்க்குணத்தை நேரடியாக அனுபவிக்கின்றேன்" என்றார்.



"அத்தியூர் விஜயா" நூலை எழுதிய ஜோதி நரசிம்மன் ஏற்புரையாற்றுகையில் தனது படைப்பிற்கு தான் எதிர்பார்த்ததை விட மிகுந்த பாராட்டுக்கள் கிடைத்து வருவதாகவும். தற்போது வெளிவந்த ஆங்கில மொழிபெயர்ப்பிற்கும் உலகெங்கும் இருந்து நல்ல வரவேற்பு கிடைப்பதாகவும் மகிழ்ச்சியோடு தெரிவித்தா.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் வகையில் "புத்தாண்டு சந்தை"

மன்னார் ஹற்றன் நஷனல் வங்கியினால் இலத்திரனியல் கொடுப்பனவை ஊக்குவிக்கும் வகையிலும், உள்ளூர் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் வகையிலும் மன்னார் பஜார் பகுதியில் புதன்கிழமை (16) காலை "புத்தாண்டு சந்தை" மற்றும் விற்பனை இடம் பெற்றது.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து விதமான உள்ளூர் உற்பத்தி பொருட்களும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டதோடு, மலிவு விற்பனையும் இடம் பெற்றது.

குறித்த புத்தாண்டு சந்தை கண்காட்சி மற்றும் விற்பனையின் போது





பெண் தலைமைத்துவ குடும்ப பெண்களும் அதிக அளவில் தமது உற்பத்தி பொருட்களை காட்சிப்படுததியதோடு, விற்பனையும் இடம் பெற்றது.



பொருட்களை கொள்வனவு செய்கின்றவர்கள் கொடுப்பனவை இலத்திரனியல் ஊடாக வங்கிக்கு பரிமாற்றம் செய்ய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்வி டி மெல், மன்னார் ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய முகாமையாளர் (விற்பனை) விற்பனை ரி.நிஷாந்தன் மற்றும் வங்கி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# மன்னாரில் நவீன தொழில் நுட்பத்தில் அமைக்கப்படும் இறால் வளர்ப்பு பண்ணைக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொன்னையன் குடியிருப்பு தெற்கு கடற்கரை கரையோர பகுதியில் அதி நவீன தொழில் நுட்பத்தில் இறால் வளர்ப்பு பண்ணை அமைக்கும் பணியை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புதன்கிழமை மதியம் 1.30 மணி அளவில் நேரடியாக விஜயம் செய்து பார்வையிட்டார்.

ஏற்றுமதி தொழில் அபிவிருத்தியை ஊக்குவிக்கும் நோக்கோடு தேசிய நீரியல் வளர்ப்பு அதிகார சபையின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கு அமைவாக பெருந்தோட்ட அமைச்சின் வேளாண்மைத் துறை, நவீனமயமாக்கல் திட்டம், மதிப்பு சங்கிலி வளர்ச்சி மானியம் மற்றும் வங்கி கடன் உதவிகள் இன் ஊடாக தனியார் ஒருவரினால் கொன்னையன் குடியிருப்பு பகுதியில் அதி நவீன தொழில் நுட்பத்தில் இறால் வளர்ப்பு பண்ணை அமைக்கப்பட்டு வருகின்றது.

வட மாகாணத்தில் முதல் தடவையாக குறித்த திட்டம் வெளிநாட்டு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் மன்னாரில் உருவாக்கப்பட்டு வரும் குறித்த இறால் பண்ணை சுமார் 28 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் குறித்த பண்ணையை பார்வையிட்ட கடற்றொழில் அமைச்சர் நவீனமயப்படுத்த உடன் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்கு மேலதிக நடவடிக்கைகள் குறித்து திட்டம் தொடர்பாகவும் பண்ணை உரிமையாளரிடம் கேட்டு அறிந்து கொண்டார்.

**- மன்னார் நிருபர்**

# தக்க தருணத்தில் உதவிகளை மேற்கொள்வதே நட்புக்கு அழகு – இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் ராகேஷ் நடராஜன் தெரிவிப்பு



ஒருவருக்கு கஷ்டம் வருகின்ற போது யார் வந்து தக்க தருனத்தில் உதவிகளை செய்கிறார்களோ அது தான் நட்புக்கு அழகு. அந்த உதவியையே தக்க தருனத்தில் இந்திய அரசு மன்னார் மீனவர்களுக்கு தற்போது மேற்கொண்டுள்ளது என இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் ராகேஷ் நடராஜன் தெரிவித்தார்.

இந்திய அரசின் உதவியுடன் மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உலர் உணவு பொதிகள் கையளிக்கும் நிகழ்வு புதன்கிழமை (16) மாலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் ராகேஷ் நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது உரையாற்றுகையிலேயே இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் ராகேஷ் நடராஜன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நட்பு என்பது ஒருவருக்கு கஷ்டம் வருகின்ற போது யார் வந்து தக்க தருனத்தில் உதவிகளை செய்கிறார்களோ அது தான் நட்புக்கு அழகு.தாய் ஒருவர் தனது குழந்தையின் தேவையை யாரும் கூறாமல் எவ்வாறு தெரிகின்றதோ அவ்வாறுதான் இந்த உதவியும் அமைகின்றது.

தற்போது கொரோனா காலமாக இருக்கலாம்.பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு இருக்கலாம். இந்த நேரத்தில் குறித்த உதவி தக்க தருனத்தில் செய்ய வேண்டி உள்ளது.

இன்றைய நிகழ்வு ஒரு ஆரம்பமே. முதலீட்டிற்கும், வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கும் குறிப்பாக மீனவ சமூகத்தின் அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும் நாங்கள் ஆராய்ந்து வருகிறோம்.

அவற்றை சமீப காலத்தில் நிறைவேற்ற இருக்கின்றோம். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் குறித்த உதவியை மீனவ சமூகத்திற்கு வழங்கி உள்ளோம். இதே போன்று முல்லைத்தீவிலும் வழங்க உள்ளோம். எமது கருத்துக்கள் மேடைப் பேச்சாக இருக்காது.

எமக்கு பக்க பலமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருக்கின்றார். அவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.என அவர் மேலும் தெரிவித்தார். குறித்த நிகழ்வில் திணைக்கள தலைவர்கள்,மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவர்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**





# மறைந்த கலைஞர்களுக்கு அஞ்சலி



மன்னார் மாவட்டத்தில் கடந்த இரண்டு வருடங்களில் மறைந்த கலைஞர்களுக்கு அஞ்சலி நிகழ்வும் மன்னார் மாவட்ட கலாச்சார பேரவையின் பொதுக்கூட்டமும் மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் புதன்கிழமை (16) மாலை மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாவட்டத்தின் கலை பண்பாட்டு வளர்ச்சிக்காக உழைத்து மறைந்த கலைஞர்களின் திரு உருவ படங்களுக்கு மலர் மாலை அணிவித்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.





பின்னர் மாவட்ட கலாச்சார பேரவையின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெற்றது. அதன்படி வருகின்ற ஜூன் மாதம் திருவள்ளுவர் விழாவும் ஆகஸ்ட் மாதமளவில் மாவட்ட கலை பண்பாட்டு பெருவிழாவும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டத்தின் கலைஞர்கள் வயதெல்லை அடிப்படையில் மூன்று பிரிவுகளாக மதிப்பளிக்கப் பட உள்ளார்கள். இந்த நிகழ்வில் பிரதி மாவட்ட செயலாளர் வே.சிவராஜா, மன்னார் மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் நித்தியானந்தன் உட்பட பிரதேச கலாச்சார உத்தியோகத்தர்களும் கலைஞர்களும் கலந்து கொண்டார்கள்.

மேலும் ஓய்வூதிய திட்டத்தில் இணைந்த 3 கலைஞர்களுக்கு உறுதிப்பத்திரம் மன்னார் மாவட்ட செயலாளரினால் வழங்கி வைக்கப்பட்டது.

**- மன்னார் நிருபர்**



# கனடா உதயன் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் தமிழகத்தில் "அத்தியூர் விஜயா" ஆங்கில நூலை வெளியிட்டு வழக்கறிஞர் ஷெரிப்புக்கு பாராட்டு தெரிவித்தார்



கடந்த சில மாதங்களுக்கு முன்பு தமிழகத்தில் தமிழில் வெளியான "அத்தியூர் விஜயா" என்கிற பழங்குடி இருளர் பெண்ணின் வழக்கு தொடர்பான நூல் ஒன்றை தமிழகத்தை சேர்ந்த எழுத்தாளர் ஜோதி நரசிம்மன் எழுதி இருந்தார். அந்த நூல் பெரும் வரவேற்பைப் பெற்றது. பழங்குடி இருளர் மக்களின் வாழ்நிலையை விளக்கும் அந்த நூல், ஒரு வழக்கில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட அத்தியூர் விஜயா என்கிற 17 வயது இளம் பெண்ணை புதுச்சேரியை சேர்ந்த 5 காவலர்கள் பாலியல் துன்புறுத்தல் செய்தது தொடர்பான வழக்கு. இந்த வழக்கில் ஆறு காவலர்கள் தொடர்பு உள்ளவர்களாக அறியப்பட்டனர். இந்த நிலையில் மாவட்ட நீதிமன்றத்தில் 6 பேருக்கும் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டாலும், சென்னை உயர்நீதிமன்றம் அவர்களை உடனடியாக விடுதலை செய்தது. இந்த நிலையில் பழங்குடி இருளரான விஜயா அரசுக்கு எதிராகப் போராடி தன் மீது நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறைக்கு ஒரு தீர்வு காண்பதற்காக தொடர்ந்து போராடினார். அவருடைய நூல் இதற்கு முன்னர் தமிழில் வெளியிடப்பட்ட நிலையில் "கனடா உதயன்" பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தமிழ்நாட்டில் விழுப்புரத்தில் "சாந்தி நிலையம்" என்கிற ஒரு தன்னார்வ நிறுவனத்தின் அலுவலகத்தில் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது. அந்த நூலை பெற்றுக் கொண்ட பேராசிரியர் பிரபா, கல்விமணி, மருதம் ஒருங்கிணைப்பாளர் ரவி கார்த்திகேயன், கலைப்பேரவை நிறுவனர் கலைவாணன், சுட்டுவிரல் ராமமூர்த்தி, அருட்தந்தை அந்தோணி குரூஸ் மற்றும் கனடா உதயன் குழுமத்தின் இந்திய பிரதிநிதியான அருண் கதாதரன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்த நிகழ்வை பேராசிரியர் பிரபா தலைமை ஏற்று நடத்தினார். முருகப்பன் வரவேற்புரை நிகழ்த்த, இளங்கோவன் ஆறுமுகம், நாகராஜன், ரமேஷ் உள்ளிட்ட பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்கத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை எழுத்தாளர் ஜோதி நரசிம்மன் மகள் ஜோ தமிழினி ஒருங்கிணைக்க, அவரது மகன் அர்ஜூன் எழிலன் நன்றியுரை கூறினார். இந்த நிகழ்வில் எழுத்தாளர் ஜோதி நரசிம்மன் ஏற்புரை நிகழ்த்தினார்.



கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என் லோகேந்திரலிங்கம் இந்த நூலைப் பற்றி முழுமையாக அறிந்து அவற்றைப் பற்றி ஒரு மிகப்பெரிய ஆய்வுரை மேற்கொண்டார். அந்த உரையில் தாங்கள் தொடர்ந்து உரிமைகளுக்காக பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தியதாகவும் அந்த வகையில் அத்தியூர் விஜயா இருளர் மக்களுக்கான ஒரு போராட்ட தலைவியாக இருந்து செயல்பட்டதையும் தொடர்ந்து அவர்களுக்காக போராடுகிற வழக்கறிஞர் ஷெரிப் மிகச் சிறப்பாக இந்த வழக்கை நடத்தியமையும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்த பேராசிரியர் பிரபா கல்விமணி, சகோதரி அருட்தந்தை பிரவீன் உள்ளிட்டோரை பாராட்டினார். விழா இனிதே நடந்து முடிந்தது.

## கனடா தமிழ்க் கவிஞர் கழகம்

# பாராட்டு விழா
# – உலக சாதனையாளர் அகணி சுரேஷ்

எதிர்வரும் சனிக்கிழமை (19.03.2022) அன்று, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தலின் பிரகாரம், உலக சாதனையாளர், அகணி சுரேஷ் அவர்களுக்குப் பாராட்டுவிழா நடைபெறவிருப்பதால், தங்கள் ஒவ்வொருவரையும் தவறாது சமூகமளிக்குமாறு மிகவும் அன்போடு வேண்டுகிறோம்.

நன்றி.

அன்புடன்,
கனடா தமிழ்க் கவிஞர் கழகம்




கந்த ஸ்ரீ பஞ்சநாதன் (தலைவர்)
பவானி தர்மகுலசிங்கம் (செயலாளர்)
குமரகுரு கணபதிப்பிள்ளை (பொருளாளர்)


DEBT FREE CREDIT SOLUTION

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential lossesand avoiding bankruptcy

DF CREDIT SOLUTION
SETTLEMENT | CONSUMER PROPOSAL | BANKRUPTCY

Head Office
10 Milner, Business court, Suite 334
Toronto, ON M1B 3C6

416. 834. 7227
www.dfcstoday.ca
info@dfcs.today

Branches
Mississauga | Vaughan



ELANKEERAN THAN
Certified Insolvency Counsellor

மலேசிய மடல்

# விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பன்னாட்டு முகவரி

## தலைவர் பிரபாகரனின் மனசாட்சி அண்டன் பாலசிங்கம்



நக்கீரன்

**கோ**லாலம்பூர், மார்ச் 05:

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தத்துவ ஆசிரியராகவும் வேலுப்பிள்ளை பிரபாகரனின் அன்பு அண்ணனாகவும் விளங்கிய "நினைவில் வாழும்" அண்டன் பால சிங்கத்திற்கு மார்ச் 04, பிறந்த நாள் பிறந்த ஆண்டு 1938.



இங்கிலாந்தின் குடியுரிமைப் பெற்ற ஈழத் தமிழரான இவர், 1970-ஆம் ஆண்டுகளில் எழுதிய கொரில்லாப் போர் முறை குறித்த நூலை வாசித்த புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன், பாலசிங்கத்துடன் தொடர்பு கொண்டதன் மூலம் பாலசிங்கத்துக்கு விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்பு ஏற்பட்டது.

பின்னர், விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் அதிநம்பிக்கைக்கு உரியவராக மாறிய இவர், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பன்னாட்டு முகமாகவும் முகவரியாகவும் விளங்கினார்.

மேற்கத்திய கல்வி முறையிலும் அரசியலிலும் நாட்டம் கொண்டிருந்த அண்டன் பாலசிங்கம், பொதுவுடைமை சிந்தனையாளராகவும் இருந்தார். காலவோட்டத்தில் ஈழத் தமிழ்த் தேசியத்தை வரையறை செய்பவர்களில் ஒருவராக உருவானார்.



போராட்ட களத்தின் நின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு பன்னாட்டு பார்வை, ஆங்கில மொழி அறிவு, மிதவாதத் தன்மை உள்ளிட்ட தன்மைகளை ஊட்டிய அண்டன் பாலசிங்கம், தீராத இனிப்பு நீர் நோயால், இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு 2006 நவம்பர் 14-இல் இவர் இறந்தபொழுது, எந்த வேளையிலும் கலங்காத பிரபாகரன் வாய்விட்டு அழுதார்.

நக்கீரன் - Nakkeeran 013-244 36 24

# பத்திரிகையாளர் ஜோசஃப் ஸ்டாலின்

**கோ** கோலாலம்பூர், மார்ச் 05:

ஜார்ஜிய மொழியை தாய்மொழியாகக் கொண்ட ஜோசஃப் ஸ்டாலின், ரஷ்ய மொழியைக் கற்று, அந்த நாட்டையே கட்டி ஆண்டதுடன் இரண்டாம் உலகப் போரின்போது வலிமையான தலைவராக விளங்கியதும் குறிப்பிடத் தக்கது.

ஆன்மிகப் பள்ளியில் பயின்ற இவர், சிறுவயதிலேயே கார்ல்மார்க்சின் பொருளாதாரக் கொள்கையால் கவரப்பட்டு, பொதுவுடைமை இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இயல்பாகவே, புரட்சி மனப்பான்மை கொண்டிருந்த ஸ்டாலினை படிப்பதற்குப் பதிலாக சொந்தமாக உழைத்து சாப்பிடும்படி அவரின் தந்தை வலியுறுத்தினார். அதற்கு ஸ்டாலினும் தயாரான நிலையில் அவரின் தாய்தான் வறுமையையும் பொருட்படுத்தாமல் படிக்க அனுப்பினார்.

படித்தவர், பட்டம் பெறும் வேளையில் சோவியத் நாட்டை ஆட்சி செய்த "2-ஆம் சிஸர் நிக்கோலஸ்" என்பவரின் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் குதித்து, பின் தலைமறைவாக வாழ்ந்தார். இதனால், ஜோசஃப் ஸ்டாலின் முழுதாகப் படித்தாலும் பட்டம் மட்டும் பெறவில்லை.





அரசியல் எதிரிகளை ஊழல் குற்றம் சுமத்தி ஈவு இறக்கமின்றி பல்லாயிரக் கணக்கில் கொன்று குவித்த ஸ்டாலின்மீது, கொடுங்கோலர் என்ற விமர்சனமும் உண்டு.

அதற்கு முன், ஸ்டாலினின் போராட்ட குணத்தைப் பற்றி அறிந்த லெனின், பொதுவுடைமைக் கட்சியில் ஸ்டாலினை இணைத்துக் கொண்டார். கட்சியில் ஸ்டாலின் பார்த்த முதல் வேலை, Pravda என்ற கட்சிப் பத்திரிகையின் ஆசிரியர் பணி.

மூளையில் இரத்தக் குழாய் வெடித்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஸ்டாலின், 1953 மார்ச் 5-இல் மரணமடைந்தார். இவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட செய்தி உலகமெங்கும் பரவி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அந்த நேரத்தில் பிறந்ததால்தான், இன்றைய தமிழகத்தின் முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு, அவரின் தந்தை கலைஞர் மு.கருணாநிதி தன் மனதில் எண்ணியிருந்த ஐயாதுரை என்னும் பெயருக்குப் பதிலாக ஸ்டாலின் என்று சூட்டினார். நக்கீரன் - Nakkeeran 013-244 36 24

# அன்பின் தொனி - 646

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள் - Be Holy**

**பரிசுத்த ஆவியானவரின் நிறைவை பெறுவது எப்படி?**
**3. ஆண்டவரிடம் கேளுங்கள்**

ஆண்டவராகிய இயேசு சொன்னதாவது:

மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்,தேடுகிறவன் கண்டடைகிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா? அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா? பொல்லா தவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக்கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார். - லூக்கா 11: 9-13

பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப்பெற இங்கே இன்னுமொரு சாதாரண தேவையை மேலே குறிப்பிட்ட வசனம் விபரி க்கிறது. பரமபிதாவான தேவன் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்று ஆண்டவராகிய இயேசு சொன்னார். ஆகையால் நாம் தேவனிடத்தில் வாஞ்சித்து கேட்கவேண்டும், கேளுங்கள் அப்பொழுது தரப்படும். எனவே எமது பரிசுத்த வாழ்க்கைக்குத் தேவையான பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்காக தேவனிடம் வாஞ்சித்து விண்ணப்பித்துக் கேட்போம்.

**தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்**

மேலும் பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்குத் தேவையான மூன்று சாதாரண தேவைகளை கீழ்க்காணும் வசனம் விபரிக்கிறது:

பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச்சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை. - யோவான் 7: 37-39

இந்த வசனத்திலே ஜீவ தண்ணீர் என்று குறிப்பிடப்பட்டுள்ள பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெறுவதற்கு, தாகமாய் இருக்கிறவன் தம்மிடத்தில் வந்து பானம்பண்ணும்படி ஆண்டவராகிய இயேசு சொல்லுவதைப் பார்க்கிறோம்.

**1. தாகமாய் இருக்க வேண்டும்**

முதலாவது, எமக்கு பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற வேண்டும் என்ற தாகம் நமக்கு இருக்கவேண்டும். அப்படியான தாகம் இல்லாமையால் அநேகர் பரிசுத்த ஆவியானவரின் நிறைவை பெற முடியாதபடி இருக்கிறார்கள். தேவன் தமது ஆசீர்வாதங்களை ஒருவர் தானாக விரும்பாத பட்சத்தில் எவருக்கும் கட்டாயப்படுத்தி கொடுப்பதில்லை. தாகம் என்பது முக்கிய தேவையான ஒரு நிலை, எம்மிடம் இருப்பதைவிட இன்னும் கூடுதலாக ஒரு தேவை என்பதை உணர்ந்துகின்ற நிலமை. மேலும் தாகம் சரீரத்தின் தேவையை உணர்த்துகிற ஓர் முக்கிய உணர்வு. உலகில் ஒரு வரட் சியான பிரதேசத்தில் கடந்து போகும்போது எவ்வளவாக தண்ணீர்த் தாகம் ஏற்பட்டு அத்தாகத்தைப் போக்க எம்மா லான எல்லா முயற்சிகளையும், ஊக்கமாகவும் உடனடியாகவும் செயற்படுவோம். அப்படியே பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப்பெறவேண்டிய தாகம் எமக்கு இருக்கவேண்டும்.

**2. இயேசுவிடம் வரவேண்டும்**

இயேசு சொன்னார் "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்.

மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன், எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். - மத்தேயு 3: 11

பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பவரான இயேசுவிடம் வர வேண்டும். அந்த இயேசு தாமே உங்களை அழைக்கிறார்.

**3. பானம்பண்ண வேண்டும்**

மேலும் இயேசு சொன்னதாவது: "பானம்பண்ணக்கடவன்".

இந்த சாதாரண வார்த்தைக்குச் சிலர் கவனம் கொடுப்பதில்லை. பானம் பண்ணுதல் என்பது ஒருவர் தன் சுய தீர்மானத்தோடு உட்கொள்கிற செயல். அப்படியே பரிசுத்த ஆவியையும் பெற்றுக்கொள்வது அவசியம். கடவுளுக்கு விருப்பமென்றால் தரட்டும் என்பது பானம்பண்ணுதல் அல்ல, தாகம் கொண்டு, இயேசுவிடம் வந்து, வாஞ்சையோடு ஏற்றுக்கொண்டு பானம் பண்ண வேண்டும்.

**4. சரீரத்தை ஒப்புக்கொடுத்தல்**

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயி ருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். - 1 கொரிந்தியர் 6: 19

தொடரும்...

# கடும் பொருளாதார நெருக்கடியில் தமிழர் தாயக பகுதிகள்; உணவிற்கு அல்லாடும் மக்கள்

## களத்திலிருந்து நேரடியாக--நிறைவுப் பகுதி

- நடராசா லோகதயாளன் & சிவா பரமேஸ்வரன்




வரலாறு என்பது வாழ்க்கை பாடத்திற்கான ஒரு கண்ணாடி.

காலங் காலமாக ஆட்சியாளர்கள் சந்தித்த சவால்கள், செய்யத் தவறிய செயல்கள், மதவாதிகளின் கைப்பாவையகச் செயல்பட்டு நாட்டு மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைப் புறந்தள்ளியது, அதனால் அவர்கள் எதிகொண்ட புரட்சிகள், அடைந்த தோல்விகள், பின்னர் தமது வாழ்நாட்களுக்கு பிறகும் அவமானச் சின்னமாக பார்க்கப்படுவது போன்ற பல விஷயங்களை வரலாறு நமக்கு எடுத்துரைக்கிறது. அதுமட்டுமின்றி வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்வதற்கான பாதையையும் அது காட்டுகிறது.

ஆனால், தவறான கொள்கை மற்றும் அனைத்தும் யாமறிவோம் என்ற மமதையில் மக்களின் துன்பங்களைத் துச்சமாக மதித்தவர்கள் என்ன ஆனார்கள் என்பதை அனைவரும் அறிவார்கள்; அதிலும் குறிப்பாக இலங்கை 30 ஆண்டுகளுக்கும் மேலான போரை எதிர்கொண்டவர்கள் இதை நன்றாகவே அறிவார்கள்.



இந்த கட்டுரையை எழுத ஆரம்பிக்கும் போது, இருவரை பற்றிய நினைவு வந்தது. இருவரும் மன்னர்கள் ஆனால் வீழ்ந்தவர்கள். ஒருவர் இத்தாலியின் நீரோ மன்னன் மற்றொரு பிரான்ஸின் மன்னர் 16 ஆம் லூயி ரோம் நகரம் எரிந்து கொண்டிருக்கும் போது நீரோ மன்னன் பிடில் (வயலின்) வாசித்து கொண்டிருந்தான் என்பது, நாடு குறித்து அக்கறை கொள்ளாத அரசன் பற்றி இடித்துரைக்கும் ஒரு செலவடையாகும். ஆட்சியிலிருந்த நீரோ மன்னனின் அராஜகங்கள் உலகமறிந்தது. கொடுங்கோல் ஆட்சிக்கு ஒரு உதாரணமான நீரோ மன்னனுக்கு என்ன நடந்தது என்பது வரலாறு. 30 ஆண்டுகளே வாழ்ந்த அவர் தற்கொலை செய்து கொண்டார்.

அதேபோன்று அண்மைக்காலத்தில் - சுமார் 230 வருடங்களுக்கு முன்னர் - பிரான்ஸை ஆட்சி செய்த 16 ஆம் லூயி சீராகவும் சிந்தனையின்றியும் ஆட்சி செய்து, தான் செய்த அரசியல் குளறுபடிகள் காரணமாக மக்களின் எதிர்ப்பு மற்றும் புரட்சியை எதிர்கொள்ள முடியாமல் தப்பித்து ஓடி பின்னர் பிடிக்கப்பட்டு, 39 வயதில் அதே மக்கள் முன்னிலையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இவர்கள் இருவரும் அடிப்படையில் செய்த ஒரே தவறு, மக்களின் துன்பங்கள் மற்றும் துயரங்களை புரிந்துகொள்ளாமல், தாம் நினைத்ததே சரியென்ற வகையில் ஆட்சி நடத்தியதே. அதுமட்டுமின்றி இருவரும் முக்கியமாக கத்தோலிக்க மதகுருமார்களின் பிடியில் இருந்தார்கள்.



இவர்கள் ஆட்சி நடத்திய காலகட்டத்தில் மக்களின் சொல்லொணா துன்பங்களை அனுபவித்தனர். இருவருக்கும் அடிப்படையில் ஒரு ஆட்சியை எப்படி நடத்த வேண்டும் என்கிற அரசியல் முதிர்ச்சியிருக்கவில்லை.

தற்போது இலங்கையில் அத்தியாவசியப் பொருட்களுக்குக் காணப்படும் கடும் தட்டுப்பாடு, அன்றாட பயன்பாட்டிற்கான பொருட்களுக்காக கூட மக்கள் அதிகாலை முதலே வரிசையில் காத்திருக்கும் நிலை, நாட்டின் நாணயத்தின் மதிப்பு தொடர்ச்சியாக அதலபாதாளத்திற்குச் சென்றுகொண்டிருப்பது, இறக்குமதிகளை செய்து மக்களுக்கு பொருட்கள் கிடைக்க வழிசெய்வதற்கு டொலர்கள் கையிலில்லை, பன்னாட்டுச் சந்தையில் கடனை பெற்றுக்கொள்ள முடியாத நிலை, ஆகியவை நாடு முழுவதும் மக்களை அவல நிலைக்குத் தள்ளியுள்ளது அதிலும் குறிப்பாக தமிழர்களின் தாயகப் பகுதியான வடக்கு கிழக்கில் நிலைமை இன்னும் மோசமாகவுள்ளது.

தமிழர் பிரதேசங்களில் மக்களின் நிலையை அறிந்துகொள்ள உதயன் விரிவான கள ஆய்வுகளை முன்னெடுத்து பலருடன் உரையாடியது.

அராலியை சேர்ந்த யஸ்ரின் யூட்சன் (வயது 38) ஒரு கட்டடத் தொழிலாளி. இன்றைக்குள்ள சந்தை நிலவரத்தை அவர் பகிர்ந்துகொண்டார். "980 ரூபாவிற்கு விற்பனை செய்த சீமேந்து தற்போது ஆயிரத்து 830 ரூபா, 800 ரூபா விற்பனை செய்த கம்பி ஆயிரத்து 900 ரூபா, 400 ரூபா விற்ற மார்பிள் ஒன்று ஆயிரத்து 300 ரூபா அதாவது ஒரு சதுர அடி கட்டுமானத்திற்கு 4 ஆயிரத்து 300 ரூபா கடந்த ஆண்டு செலவானது ஆனால. தற்போது 7ஆயிரத்து 500 ரூபாவிற்கும் முடியவில்லை. இதனால் அனைவரும் கட்டுமானத்தையே கை விடுகின்றனர். இதனால் எமக்கான தொழில் வாய்ப்பும் கேள்விக்குறியாக மாறிவிட்டது. இதனால் வீட்டு உரிமையாளர்களிடம் சென்று வேலையை கேட்டால் என்று இந்த அரசு மாறுகின்றதோ அன்று வேலைக்கு வாங்கோ என்கின்றனர் இதனால் என்ன செய்வது என்றே எமக்குப் புரியவில்லை" என்றார்.

இதேநேரம் சாவகச்சேரி கல்வயல் பகுதியில் ஓர் உணவகத்திற்கு இடியப்பம் அவித்து வழங்கும் "காணாமல்போன போராளி" ஒருவரின் மனைவி, "எத்தனை நாட்களிற்கு அடுத்தவரின் கையை எதிர்பார்க்க முடியும் என்பதனால் இந்த தொழில் மூலம் வாழ்வாதாரத்தை நடாத்தினோம். அதிலும் நெருக்கடி - எரிவாயு இல்லை, மண்ணெண்னெய் இல்லை, அரிசி, மாவு நாள் ஒரு விலை என்பதனால் என்ன நிலைமையெனக் கூறவே முடியவில்லை".

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடியில், போரில் தமது கணவரை இழந்து தனியொரு ஆளாக குடும்பத்தை முன்னெடுக்க வேண்டிய நிலையிலுள்ளவர்கள் சூழலோ மிகவும் மோசம். கிளிநொச்சியில் வசிக்கும் ஒரு பெண்மணி போரில் கணவரையும், தனது ஒரு கண்ணையும் இழந்தவர். யுத்தம் முடிந்த சில ஆண்டுகளுக்கு அவருக்கு புலம் பெயர் உறவுகள் உதவி புரிந்தனர். தற்போது அவையும் கிடைப்பதில்லை என்று அவர் "உதயனிடம்" தெரிவித்தார். அவருடைய இரு பெண் பிள்ளைகளும் வளர்ந்து ஒருவர் உயர்தரம் மற்றவர் சாதாரணம் எனக் கல்வி கற்கும் நிலைமையில் கல்விச் செலவிற்கே 25 ஆயிரம் ரூபா அவருக்கு வேண்டும். தற்போது ஓர் புத்தக கடையில் சிட்டை எழுதுநராக பணியாற்றுவதால் மாதம் 15 ஆயிரம் ரூபா கிடைக்கிறது இந்தப் பணம் பிள்ளைகளின் கல்விச் செலவிற்கே போதாது ஏனெனில் 120 ரூபாவிற்கு விற்பனையான கொப்பிகள் தற்போது 230 ரூபாவிற்கும் பெற்றுக்கொள்ள முடியவில்லை, 10 ரூபா விற்ற கோவை மட்டை 30 ரூபா, 2 ரூபாவிற்கு விற்ற பேப்பர் 5 ரூபா என்பதனால் மாணவர்களின் கல்விக்கான செலவே மிக அதிகமாகவுள்ளது என்கிற யதார்த்த சூழலில் அவரை போன்றவர்கள் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல முடியாமல் தவிக்கின்றனர்.

சுய தொழில் செய்பவர்களின் நிலை இப்படியென்றால், அரச சேவைகளில் உள்ளவர்களின் நிலையோ சொல்லவும் முடியவில்லை மெல்லவும் முடியவில்லை என்பதாகவே உள்ளது.

ஆசிரியர் ஒருவரின் உள்ளக் குமுறல்: "நான் வர்த்தக ஆரிசிரியர் என்ற ரீதியில் நாட்டின் பொருளாதார முறைமையும் ஓரளவு புரியும் ஆசிரியர்களிற்கு 43 ரூபா சம்பளம் வழங்கப்பட்ட நிலைமையில் விசேட கொடுப்பனவு 5 ஆயிரமும் சம்பள சீராக்கம் 12 ஆயிரம் என 60 ஆயிரம் ரூபா பெறும் என்னால் 5 பேரைக் கொண்ட குடும்பத்தை கொண்டு நடாத்த முடியவில்லை. ஏனெனில்



பொருட்கள் யாவும் காலையில் ஒரு விலை மாலையில் ஒரு விலை 200 ரூபாவாக இருந்த டொலர் ஒரே தடவையில் 230 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டு விட்டது. இதனால் ஏற்படும் செலவினமும் பொருட்களின் விலையை மேலும் அதிகரிக்கும். இதேநேரம் டொலரின் வெளிச் சந்தை விலை 300 ரூபாவினையும் எட்டும் நிலையில் உள்ளது. 60 ஆயிரம் ரூபா சம்பளம் எடுத்து வரும் அன்றே கடனிற்குப் பொருள் வாங்கிய பணம், பிள்ளைகளின் டியூசன் காசு, மருத்துவச் செலவு எனச் செலுத்தினால் 10 தினங்களின் பின்பு வீதியில் செல்லவே வெட்கமாக உள்ளது என்றார்".

அரசு கூறுவது போன்று தனியே நெருக்கடி நிலைமையினாலோ அல்லது டொலர் இன்மையாலோ மட்டும் பொருட்களின் விலை அதிகரிக்கவில்லை மாறாக திட்டமிடல் தவறின் காரணமாகவே அதிக பணம் தற்போதும் வீணடிக்கப்படுகின்றது. உதாரணமாக எந்த பொருட்களுடன் கப்பல் துறைமுகத்திற்கு வந்தாலும் அன்றோ அல்லது மறுநாளோ இறக்கப்படுவது கிடையாது மாறாக ஒரு வாரம் 10 நாள்கள் கழித்தே இறக்கப்படுகின்றது. இதனால் கப்பல்களிற்கு நாள் ஒன்றிற்கு தாமத கட்டணம் 15 ஆயிரம் டொலரை அரசு வீணாக செலுத்துகின்றது. கேட்டால் லொலர் இல்லை என்ற ஒற்றைப் பதிலே கிடைக்கின்றது.

அரசின் தவறான பொருளாதார கொள்கையும் நீண்டகால அடிப்படையில் திட்டமிடாததுமே நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடிகளுக்குக் காரணம் என்று பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கொழும்பு பல்கலைக் கழகத்தின் பொருளாதாரத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.கணேசமுர்த்தி அனைத்திற்கும் அடிப்படைக் காரணம் டொலர் விலை நிர்ணயமே என்கிறார். "டொலர் வெளிச் சந்தையில் 240 ரூபாவாக இருக்கும்போது அரசு 200 ரூபா மட்டுமே வழங்கியதனால் எவருமே டொலரை நாட்டிற்குள் கொண்டுவரவில்லை. இதன் காரணமாக டொலரின்

ble 4: Movement of the Sri Lankan rupee against Selected Currencies

| Currency | 2018 | 2019 | 2020 (up to 30 Mar) Depreciation (-)/ Appreciation (+) |
|---|---|---|---|
| US dollar | -16.4% | +0.6% | -4.7% |
| Euro | -12.7% | +2.6% | -3.6% |
| Pound sterling | -11.4% | -2.8% | +0.9% |
| Japanese yen | -18.1% | -1.0% | -5.8% |
| Canadian dollar | -9.3% | -3.7% | +2.6% |
| Australian dollar | -7.6% | +1.3% | +8.7% |
| Indian rupee | -8.7% | +2.6% | +0.9% |

Source: CBSL

உள்வரவு குறைந்ததால் அரசு தற்போது 230 ரூபாவாக தற்போது அதிகரித்தமையினால் ஓரளவு நிவர்த்தியாகும் சந்தர்ப்பம் உண்டு. ஏனெனில் வர்த்தகர்கள் வெளியில் 260 ரூபாவிற்கு கொள்வனவு செய்த டொலரில் பொருட் கொள்வனவு செய்தனர் அவ்வாறானால் 60 ரூபா மேலதிகமாக இழந்த வர்த்தகர் இனி 30 ரூபாவினையே இழப்பர் இதனால் விலை தளம்பல் ஏற்படாமல் இருக்கலாம்".

நாடு பொருளாதாரத்திலிருந்து மீள முடியாவிட்டால் அது மக்கள் புரட்சிக்கு வழிவகுக்கும் என்பது பல நாடுகளில் காணப்பட்டுள்ளது. இந்த வாரம் கொழும்பில் எதிர்க்கட்சியில் நடத்திய மாபெரும் போராட்டம் இதற்குச் சான்று.

இலங்கை ஆட்சியாளர்கள் நீரோ போலவும் 16 ஆம் லூயி போலவும் இருக்கக் கூடாது என்பதே மக்களின் மக்களின் எதிர்பார்ப்பு.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 989



## பத்திரகாளி அம்பாள் ஆலயம்

### திருகோணமலை

“கல்லாத மாந்தரின் கண்ணீரை நீக்கிடும்
கருவண்ண அன்னை நீயே
கற்றோரின் நெஞ்சத்தில் கலங்கரை விளக்கான
காவியச் சுடரும் நீயே
வில்லாக வேலாக வினை தீர்க்கும் மருந்தாக
விளங்கிடும் சக்தி நீயே
வேண்டிடும் நல்வரம் விரைவாகத் தந்திடும்
ஆவட்டுடைக் காளி உமையே.”

உயர்ந்து நிற்கும் அழகிய திருக்கோபுரத்தோடு பல்வேறு புனருத்தாரப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ள பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் பத்து நாட்கள் கொண்ட வருடாந்தத் திருவிழா, மனித குலத்திற்கேற்பட்ட தடைகளைத் தாண்டி, 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆந் திகதி விமரிசையாக ஆரம்பமாகியுள்ளது. இதனையொட்டி புதிய மாற்றங்களைக்கொண்ட பத்ரகாளி அம்பாளின் வரலாற்றினை இவ்வாரம் முதல் அறியலாம்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில், தமிழ் ஈழத்தின் தன்னிகர் இல்லாச் சிறப்புடன் குரைகடல் ஓத, நித்திலம் கொழிக்கும் புண்ணிய பூமியாகத் திகழ்வது விளங்குவது திருகோணமலை. இந்நிலப்பரப்பின் அழகை வர்ணிப்பது எளிதன்று. அலையெறிந்து ஆர்ப்பரிக்கும் கடல் முப்புறமும் காணப்பட, இயற்கையின் எழில் கொஞ்ச, மிகப் பெரிய இயற்கைத் துறைமுகத்தையும் தன்னகத்தே கொண்டதோடு, ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆலயங்களையும் தன்னுள் அடக்கிய புண்ணிய பூமியாகத் திருகோணமலை திகழ்கின்றது.

பஞ்ச ஈஸ்வரங்களுள் ஒன்றாகத் திகழும் திருக்கோணேஸ்வரத்திற்குச் சற்றுத் தூரத்தில் அருளும், புகழும் கொண்ட பத்திரகாளி கோயில் அமைந்துள்ளது. திருகோணமலைப் பட்டினத்தின் இருதயம் போல விளங்கும் இக்கோயிலைக், காளிகோயில் என இவ்வூர் மக்கள் அழைப்பர். இக்கோயில், திருகோணமலைப் புகையிரத நிலையத்திலிருந்து ஏறக்குறைய ஒரு கிலோ மீற்றர் தூரத்தில், பேருந்து நிலையத்திற்குச் சமீபமாக, டொக்கியாட் வீதிக்கு அருகாமையில், கோணேஸ்வரா இந்துக்கல்லூரிக்குச் சமீபத்தில் அமைந்துள்ளது. அருகே ஆலடி விநாயகர் ஆலயம் காணப்படுகின்றது. ஆலயத்திற்கு எதிரே பரந்து காணப்படும் விளையாட்டு மைதானமும், அதையடுத்துக் காணப்படும் ஆர்ப்பரிக்கும் இந்துசமுத்திரமும் இவ்வாலயத்திற்கு மேலும் மெருகூட்டுகின்றது. இவ்வாலயம் கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் காணப்படுகின்றது. இவ்வாலயத்தில் நின்றவாறு திருக்கோணேஸ்வரத்தைத் தரிசிக்க முடியும்.

பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வரலாறு தொன்மையுடையது. வாய்மொழிக்கதைகள், பாடல்கள் போன்றவற்றின் மூலம், இவ்வாலயம் குளக்கோட்டு மன்னனால் கட்டப்பட்டதென்று அறியமுடிகின்றது. இந்தியாவிலிருந்து இலங்கை வந்த குளக்கோட்டு மன்னன், திருக்கோணேஸ்வரத்தைப் புதுப்பித்துக் கட்டியதோடு, காவல் தெய்வமாக பத்திரகாளி கோவிலை நிறுவினான். அக்காலந்தொட்டு பத்திரகாளி அன்னையானவள், எல்லைக் காளியாக விளங்கி வருகின்றாள்.

இக்காலந்தொட்டு இவ்வாலயம் பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்கி வருவதோடு, சோழர் இலங்கையை ஆண்ட காலத்தில் மிகச் சிறப்புப் பெற்று விளங்கியுள்ளது. இவ்வாலயத்திற்குரிய கல்வெட்டுக்கள், பழைய சான்றுகள், கர்ண பரம்பரைக் கதைகள் மற்றும் வாய்மொழிக்கதைகள் இவற்றை ஆதாரமாகக் காட்டியும், ஆலய அமைப்பு, மற்றும் ஆலயத்திலுள்ள விக்கிரகம், வாகனம், தகளி, மற்றும் இங்குள்ள பொருள்களையும் ஆராய்ந்த ஆய்வாளர்கள், இவ்வாலயம் முதலாம் இராஜேந்திர சோழனுடைய காலமாகிய கி.பி 11 ஆம் நூற்றாண்டில், சிறப்புற்று இருந்திருக்க வேண்டுமெனச் சுட்டிக்காட்டியுள்ளனர். இக்கூற்றுக்களிலிருந்து இவ்வாலயம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட மிகத் தொன்மை வாய்ந்த ஆலயம் என்பதும் புலப்படுகின்றது.

இவ்வாலயத்தின் தோற்றம் பல நூற்றாண்டுகளைக் கொண்டதோடு, செல்வச்சிறப்புமிக்க ஆலயமாகவும் விளங்கியுள்ளது. போத்துக்கேயர் கி.பி 1505 ஆம் ஆண்டு இலங்கையுள் காலடி எடுத்து வைத்தனர். பின்னர் ஈழத்திலுள்ள ஆலயங்களின் செல்வங்களைக் கொள்ளையிடும் நோக்கோடு அவற்றை நிர்மூலமாக்கி அழித்துள்ளனர். கி.பி 1624 ஆம் ஆண்டு கொள்ளையிடப்பட்டு, நிர்மூலமாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஆலயங்களுள், திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயமும் அடங்கும். இதன் பின்னர் இவ்வாலயம் புதுப்பிக்கப்பட்டமைக்கு கர்ண பரம்பரைக் கதையொன்று வழக்கிலுள்ளது. இராமேஸ்வரத்திலிருந்து அந்தணரொருவர் தவம் செய்வதற்காக வடகயிலை நோக்கிப் புறப்பட்டார். அன்னை ஸ்ரீ பத்திரகாளி அவர் கனவிலே தோன்றி, வட கயிலை செல்ல வேண்டாம், தென்கயிலை நோக்கிப்புறப்படு. தக்கிணகைலாயம் என்று அழைக்கப்படும் திருகோணமலையில், தொங்கிச் சிதம்பரத்தம் பூமரத்துக்கு அடியில் நான் ஒரு கிடாரத்தினுள் இருக்கின்றேன். என்னை வெளியே எடுத்துப் பூசை செய்து தவத்தை மேற்கொள் என்று பணித்துள்ளாள்.

அந்நியர் ஆக்கிரமிப்பின்போது, ஆலய அந்தணர்களும், ஏனையோரும் விக்கிரகங்களையும், ஆலயப்பொருட்களையும் மண்ணுள் புதைத்து வைத்தும், கி-ணறுகளில் போட்டு மூடியும், தூர இடங்களுக்கு விக்கிரகங்களையும், ஏனைய பொருட்களையும் எடுத்துச் சென்று காப்பாற்றிய பல சம்பவங்களை ஆலய வரலாறுகளை ஆராயும் போது அறியலாம். இவ்வாறான விக்கிரகங்கள் காலதேச வர்த்தமானப்படி குறிப்பிட்ட அருளாளர்களின் மனதிலே தமது இருப்பிடத்தைக் காட்டி, வெளிக்கொண்டுவந்த பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளது. இவ்வாறான ஒரு சம்பவமாகவே மேற்கூறிய சம்பவமும் காணப்படுகின்றது.

*வளரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077




ALL DEBT SOLUTIONS CR PLAN
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# இவ்வார ராசிபலன்

**18-03-2022 வெள்ளி தொடக்கம் 24-03-2022 வியாழன் வரையும்**


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**மேஷம்:** வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும் வாரம். அலைச்சல் அதிகரிக்கும். உடல்சோர்வு ஏற்படும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். இடமாற்றம் ஏற்படும். நிதி பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். வழக்கு சாதகமாகும். சிறப்புகள் சேரும். வெறுப்புகள் அகலும். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புகள் விலகும். தேவைகள் பூர்த்தியாகும். தொல்லைகளில் இருந்து விடுபடுவீர்கள். நாவடக்கம் தேவை. அற்புத வாய்ப்பு கிட்டும். பெண்களின் ஆலோசனைப் பலன் தரும். அணிகலன் சேரும். சுபகாரியம் கைகூடும். உறவினரால் பணவிரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். விவாக முயற்சி வெற்றி தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். பணவரவு உண்டு. பயணம் அனுகூலம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. காரியங்களில் வெற்றி காண்பீர்கள். இக்கட்டான சூழ்நிலைகளில் இருந்து விடுபடுவீர்கள். எண்ணங்கள் நிறைவேறும். சுயநலம் கூடும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திர சொத்து சேரும். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ எல்லையம்மன், அதிர்ஷ்ட எண்: *5,2,3,1*
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,K




**ரிஷபம்:** தொல்லைகள் ஒழியும் வாரம். வீண் வம்பு விலகும். நோய், நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை. உறவினர் வருகை தொல்லைத் தரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். தாய்வழி உறவில் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பழையக் கடன் வசூலாகும். கணவன் மனைவி அன்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் கூடும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். சகோதாரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். தன வரவில் மேன்மை கூடும். நிதி நிலைமை சீராகும். பணவரவு உண்டு. பிரச்சனைகள் குறையும். உடல்நலனில் கவனம் தேவை. உடன்பிறப்புக்களால் சலசலப்பு ஏற்படும். கணவன், மனைவி கருத்து வேறுபாடு ஏற்படும். தனவரவு ஏற்படும். பொறுமையை கையாள வேண்டும். குழப்பங்கள் அகலும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கைகூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழில் லாபம் உண்டு. குடும்பம் மேன்மை தரும். ஆரோக்கியம் சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. பயணம் அனுகூலம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: *4,2,1,8*
அதிர்ஷ்ட நிறம்: மரகதப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L T




**மிதுனம்:** மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும் வாரம். பதவி உயர்வு ஏற்படும். பக்குவமான பேச்சு அவசியம். மன உற்சாகம் கூடும். பணவரவு சேரும். உடல் உபாதை தோன்றும். சுபச்செய்தி வரும். வியாபாரம் விரயம் கூடும். உத்தியோகம் கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன்பிறந்தோரால் ஆதாயம் உண்டு. தொழில் மோசடி ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பாக்கிகள் வசூலாகும் குடும்பத்தில் அமைதி ஏற்படும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கை கூடும். நீண்ட நாளைய நோய் தீரும். இல்லத்தல் மகிழ்ச்சி கூடும். தேகப் பலன் கூடும். வாகன யோகம் உண்டு. தடைகள் விலகும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். பொருளாதார நிலை உயரும். தொட்ட காரியம் ஜெயமாகும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். ஆபரணங்கள் சேர்க்கை ஏற்படும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். மாணவர்களுக்கு சாதகமான காலம். வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது. சொத்துக்கள் சேரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். பணத்தேவைகள் அதிகரிக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வழக்குகள் சாதகமாகும். வீடு, மனை யோகம் உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ஊக்கம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: *7,9,1,5*
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K




**கடகம்:** சந்தோஷமான நிகழ்வு அமையும் வாரம். பொன்னான தருணம். தொழில் ஒப்பந்தங்கள் குவியும். அன்னிய தேச பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். உயர் அதிகாரி பாராட்டு கிட்டும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். இல்லத்தில் ஆனந்தம் குடிக்கொள்ளும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவு ஏற்படும். நன்மைகள் அதிகமாகும். குடும்ப கௌரவம் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணத்தால் பலன் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். எதிரிகள் விலகி செல்வார்கள். ஏற்றம் தரும் நாளாக அமையும். கோதுமை தானம் தாய் நலம் சேர்க்கும். பொருள் சேதம் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து உயரும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத்திறமை அதிகரிக்கும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. கலைத்தொழில் திருப்பம் தரும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகனச்செலவு உண்டு. வாய்ச்சொல் பலன் தரும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். இன்றைய பிரார்த்தனை நன்மையை கூட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: *5,3,2,1*
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,F




**சிம்மம்:** புத்துணர்வோடு செயல்படும் வாரம். கடன் சுமை தீரும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகளால் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. எதிலும் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டு பெருகும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். துன்பங்கள் விலகும். கடன் சுமையிலிருந்து விடுபடுவீர்கள். இனிய தகவல் வந்து சேரும். கல்வி செலவு உண்டு. மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். வசந்தம் தேடி வரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். உறவினரால் பாதகம் உண்டு. பழைய பாக்கி வசூலாகும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவர். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். பொதுப்பிரச்சனைகள் விலகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். போட்டிகள் அதிகமாகும். பெண்களுக்கு நாவடக்கம் தேவை. பொறுமையை கையாள வேண்டும். பொதுப்பிரச்சனைகளில் தலையிடுவதை தவிர்க்கவும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பங்குச்சந்தையில் லாபம் தரும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: *2,9,7,4*
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z




**கன்னி:** மேன்மைகளை சந்திக்கும் வாரம். உள்ளம் மகிழும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். வாய்ப்புகள் தேடி வரும். எண்ணங்கள் பூர்த்தியாகும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். இடமாற்றம் ஏற்படும். அன்பு அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். ஆசைகள் நிறைவேறும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது வி'யங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். பெரியோர்களின் வாழ்த்துக்கள் கிடைக்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மங்களச்செய்தி வரும். கமி'ன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். ஆரோக்கியம் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்றுமனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புகள் கூடும். சோம்பல் அதிகரிக்கும். வியாபாரம் செழிக்கும். கணவன், மனைவி அன்பு கூடும். வருத்தங்கள் மறையும். தடுமாற்றம் ஏற்படும். காதல் கசக்கும். உடல்சோர்வு ஏற்பட்டு மறையும். வழக்கு சாதகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காலபைரவர், அதிர்ஷ்ட எண்: *1,5,3,9*
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,I




**துலாம்:** எண்ணங்கள் நிறைவேறும் வாரம். சுயநலம் கூடும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். காதல் கை கூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர். குடும்பம் ஒற்றுமை அதிகரிக்கும். முயற்சிகள் வெற்றி தரும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் தேவை. உன்னதமான காலம். நிதி நிலைமை சீராகும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செலவு கூடும். பொறுப்புக்கள் கூடும். வேலைப்பளு அதிகரிக்கும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கடன்சுமை குறையும். பூர்வீக சொத்து சேரும். தொல்லைகள் விலகும். வீண் வம்பு விலகும். நோய், நொடிகள் அகலும். சேமிப்பு உயரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். தாய்வழி உறவில் நன்மை உண்டு. கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் கூடும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். குழப்பங்கள் அகலும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கைகூடும். வாகன அபிவிருத்தி உண்டு. எந்திரதொழிலால் லாபம் உண்டு. ஆரோக்கியம் சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காமதேனு, அதிர்ஷ்ட எண்: *7,4,3,1*
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,J




**விருச்சிகம்:** தன்னடக்கத்தோடு செயல்படும் வாரம். செயல்களில் கவனம் தேவை. மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். பதவி உயர்வு ஏற்படும். பக்குவமான பேச்சு அவசியம். மன உற்சாகம் கூடும். பணவரவு அதிகரிக்கும். உடல் உபாதை தோன்றும். சுபச்செய்தி வரும். வியாபாரம் விரயம் கூடும். உத்தியோக கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன் பிறந்தோரால் ஆதாயம் உண்டு. தொழில் மோசடி ஏற்படும். கூட்டுத்தொழிலை தவிர்க்கவும். இடையூறுகள் அதிகமாகும். பால் தானம் பாவம் போக்கும். செல்வாக்கு பெருகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். பயணம் ஆதாயம் தரும். தொழில் வழி தொல்லை குறையும். சுய பலம் கூடும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். கையிருப்பு கரையும். பணிவான பேச்சுகள் தேவை. புகழும், பொருளும் பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். பித்தளைத் தொழில் லாபம் தரும். தோல்விகள் நிறைவேறும். தனவரவு உண்டு. உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத் திறன் அதிகரிக்கும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். வாழ்க்கை வசதி கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: *3,5,4,1*
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C




**தனுசு:** தனம் சேரும் வாரம். இல்லத்தில் அமைதி கூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். வாழ்வு நிலை உயரும். பங்குச்சந்தை மாற்றம் தரும். ஆடம்பரம் அதிகரிக்கும். கௌரவமான காலம். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகமாகும். முன் கோபத்தினை குறைக்க வேண்டும். மேன்மையாக செயல்படுவீர்கள். எதிலும் கவனம் வேண்டும். தன்னம்பிக்கை கூடும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும். நட்பு பெருகும். வராத கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆலோசனை பலன் தரும். பெரியோர்களின் ஆசி கிடைக்கும். கலைஞர்ளுக்கு இல்லம் தேடி வாய்ப்பு வரும். தோ'ங்கள் ஒதுங்கும். நன்மைகள் நாடி வரும். குடும்ப கௌரவம் உயரும். பயணத்தால் பலன் உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். சீரான வாழ்வமையும். சிந்தனைகள் மேலோங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். திறமைகள் வெளிப்படும். அன்றாட நாட்கள் மன மகிழ்ச்சியைத் தரும். மனதில் அளவில்லா சந்தோ'ம் உண்டாகும். பங்குச்சந்தை தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வினைதீர்க்கும் விநாயகர், அதிர்ஷ்ட எண்: *5,9,8,7*
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,D




**மகரம்:** சிறப்புக்கள் சேரும் வாரம். தேவையில்லா பயங்கள் விலகும். இறைவிழிப்புணர்வு கூடும். அன்பாக மற்றவர்களிடத்தில் நடந்து கொள்வீர்கள். சமூக செயலில் ஈடுபடுவீர்கள். புதுத்தொழிலை ஆரம்பிக்க முன் வருவீர்கள். உடல்நிலையில் கவனம் தேவை. குதூ கலம் தாண்டவமாடும். கடன் தொல்லை தீரும். வீடு வாங்கும் யோ-கம் உண்டு. அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உற்சாகம் கூடும். மன தைரியம் அதிகமாகும். வேலை பளு அதிகரிக்கும். அடுத்தவர்கள் பிரச்சனையில் தலையிடுவதை தவிர்க்கவும். மனதில் உற்சாகம் அலைமோதும். மங்கள செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். தன வரவுகள் தடைப்படும். திடீர் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. கவனமுடன் செயல்பட வேண்டும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பெற்றோர் சொல்படி நடக்கவும். வெற்றியை எட்டும் காலம். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். கருத்து வேறுபாடு மறையும். தொல்லை தருபவர்கள் விலகி செல்வர். வயிறு உபாதை வந்துசேரும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: *1,5,3,2*
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,T

***(தொடர்ச்சி 33ம் பக்கம்)***

## இவ்வார ராசிபலன்

(32ம் பக்கம் தொடர்ச்சி)





**கும்பம்:** வீடு, மனை யோகம் கிடைக்கும் வாரம். ஆதாயம் பெருகும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. பிறருக்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். உதவிகள் கிடைக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. வருமானம் கைகூடி வரும். பாதகம் விலகும். பதவி வாய்ப்பு வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். வெளியூர் பயணம் பயன் தரும் வகையில் அமையும். கிருபைகள் சேரும். கல்வியில் ஆர்வம் கூடும். விருப்பமான வாய்ப்பு கூடி வரும். குதூகலம் சேரும். பழையக்கடன் தீரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். காதல் எண்ணம் ஏற்படும். திருமண வாய்ப்புகள் கூடி வரும். மனகுறைகள் அகலும். மன விரக்தியில் இருந்து விடுபடுவீர்கள். பகைவர் பணிந்து நிற்பர். பணவரவு உயரும். பொருளாதாரம் உயரும். பொன், பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டு. வாகனச் செலவு ஏற்படும். முயற்சி பலன் தரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. குடும்ப வளம் கூடும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். சுபிட்ஷங்கள் பெருகும். வளமான வாழ்வு அமையும். கடன் பிரச்சனை தீரும். வழக்குகள் சாதகமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பூமா தேவி, அதிர்ஷ்ட எண்: 2,9,8,6
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,T




**மீனம்:** சுதந்திரமாக செயல்படும் வாரம். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். விரும்பியது நிறைவேறும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர்விடும். எதிலும் வெற்றி கிட்டும். பணம் புரளும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கை துணையால் வளம் பெருகும். ஏற்றமான தருணம். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகம் உண்டு. ஆபரணச் சேர்க்கையுண்டு. அதிகாரம் குவியும். ஆபத்துக்கள் விலகும். சகோதர வழியில் கவனம் தேவை. பயண முயற்சி பலன் தரும். நினைத்த வி'யம் நிறைவேறும். கட்டிடத் தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கும், கலைஞர்களுக்கும் ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் பெருகும். அன்னிய தேச பயணம் உண்டு. வாழ்க்கை துணையால் வளம் பெருகும். விரக்திகள் மறையும். வங்கி சேமிப்பு உயரும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். கர்ம வினைகள் அகலும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். இல்லத்தில் அமைதி பெருகும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தட்சிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 4,8,2,3
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,Y

# உத்தரபிரதேச புதிய எம்.எல்.ஏ.க்களில் 51 சதவீதத்தினர் குற்றப் பின்னணி கொண்டவர்கள்



**உ**த்தரபிரதேசத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ.க்களில் பாதிக்கும் மேற்பட்டோர் கிரிமினல் பின்னணி கொண்டவர்கள் என தெரிய வந்துள்ளது.

உத்தரபிரதேசத்தில் 7 கட்டங்களாக நடந்த சட்டசபை தேர்தலில் பதிவான வாக்குகள் கடந்த 10-ந் தேதி எண்ணப்பட்டன. இதில் வெற்றி பெற்ற 403 புதிய எம்.எல்.ஏ.க்களின் பின்னணி விவரங்கள் குறித்த தகவல்கள் வெளியாகி அதிர வைக்கின்றன.

உத்தரபிரசேதத்தில் தேர்தல் கண்காணிப்பு மற்றும் ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் புதிய எம்.எல்.ஏ.க்கள் பின்னணி பற்றி ஆய்வு செய்து வெளியிட்டுள்ள தகவல்கள் வருமாறு:

### கோடீஸ்வரர்கள்


- புதிய எம்.எல்.ஏ.க்களில் 91 சதவீதத்தினர் (எண்ணிக்கையில் 366 பேர்) கோடீஸ்வரர்கள் ஆவார்கள். (கடந்த 2017-ல் இந்த எண்ணிக்கை 322 ஆகும்.) புதிய எம்.எல்.ஏ.க்களில் பா.ஜ.க.வில் 233 பேர், சமாஜ்வாடியில் 100 பேர், அப்னாதளத்தில் 9 பேர், ராஷ்டிரிய லோக்தளத்தில் 7 பேர் கோடீஸ்வரர்கள் ஆவார்கள்.

- புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உ.பி. சட்டசபை உறுப்பினர்களின் சராசரி சொத்து மதிப்பு ரூ.8.06 கோடி ஆகும்.

- பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் சராசரி சொத்து மதிப்பு ரூ.8.14 கோடி, சமாஜ்வாடி எம்.எல்.ஏ.க்கள் சராசரி சொத்து மதிப்பு ரூ.7.39 கோடி, அப்னாதளம் எம்.எல்.ஏ.க்கள் சராசரி சொத்து மதிப்பு ரூ.7.13 கோடி ஆகும்.

- புதிய எம்.எல்.ஏ.க்கள் 403 பேரில் 51 சதவீதத்தினர், அதாவது 205 பேர் கிரிமினல் என்னும் குற்ற பின்னணி கொண்டவர்கள். கடந்த 2017-ல் இந்த எண்ணிக்கை 143 ஆக (36 சதவீதம்) இருந்தது. ஆக, இந்த முறை கிரிமினல் பின்னணி கொண்டவர்களுக்கு மக்கள் அதிக அளவில் வாய்ப்பு தந்திருப்பது நிரூபணமாகி உள்ளது. அதிலும் குறிப்பாக 39 சதவீத எம்.எல்.ஏ.க்கள் அதாவது, 158 பேர் தங்கள் மீது கொலை, கொலை முயற்சி, கடத்தல், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகள் இருப்பதை ஒப்புக் கொண்டுள்ளனர். 2017-ல் இந்த எண்ணிக்கை 26 சதவீதமாக (107 பேர்) இருந்தது.

- பா.ஜ.க.வில் 111 எம்.எல்.ஏ.க்கள், சமாஜ்வாடியில் 71 எம்.எல்.ஏ.க்கள், ராஷ்டிரிய லோக்தளத்தில் 7 எம்.எல்.ஏ.க்கள் கிரிமினல் பின்னணி கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது என்று அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.



மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்




# 'மஹாகவி' பாரதி பாடல்கள்

அத்தியாயம் - 13

"யாகத்திலே தவ வேகத்திலே - தனி
யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே தெய்வபக்தி கொண்டார் தம்
அருளினிலே உயர் நாடு"

இந்த வாரமும் பாரதியை ஞானகுருவாக வழங்கிய எழுத்தாளர் ஜெயகாந்தன், மகாகவி பற்றிக் கூறிய சில கருத்துக்களை பார்ப்போம்.

"வேதம் அறிந்தவன் பார்ப்பான். வேதம் தெரியாதவர்கள் நீங்கள் நினைக்கிற மாதிரி அல்லது நீங்கள் வெருக்கிற மாதிரி பார்ப்பனர்கள் அல்ல! பல வித்தை தெரிந்தவன் பார்ப்பான். ஒரு வித்தை மட்டுமல்ல, பல வித்தை தெரிந்தவன் பார்ப்பான். சத்திரியனுக்கு வில்வித்தை கற்றுத் தந்தவர்கள் பார்ப்பனர்கள். சூத்திரனுக்கு கற்றுத் தரமாட்டார்கள். க்'த்திரியனுக்கு மட்டும் ஏன்? மனிதனை கொல்லும் உரிமை எல்லா மனிதர்க்கும் இல்லை. சில தர்மங்கள் நீங்கள் சொல்வது போல் யாருக்குச் சொல்கிறோம் என்று அமைகிறது. இந்த வேதத்தை எல்லோருக்கும் பரீட்சயம் படுத்த வேண்டிய காலம் வந்தது பாரதியாருக்கு. ஆரம்பத்தில் சொன்னது போல் நாமெல்லாம் கடவுளை கருத்துக்களில் தேடுகிறோம் நூல்களில் தேடுகிறோம் கவிதையில் தேடுகிறோம்.

பிரபஞ்சத்தை தேடியதற்குப் பெயர் வேதம். அதை நீங்கள் சொல்வது போல் விநாயகரையும்யோ, நாம் வணங்குகிற இந்த விக்கிரகத்தை குறைக்கவே இல்லை. உனக்கு எப்படி தெரியும் என்று கேட்கிறீர்கள்? சொன்னவர்களை கேட்டுத்தான். அது விஞ்ஞானத்திற்கு எது எது முக்கியமோ அது அந்த பஞ்சபூதங்களை பற்றி தான் பேசுகிறது. சூரியன் - வருணன் - காற்று - மண் - வெளி இவற்றை வணங்குதல் எதற்கு? இந்த மனிதர்க்கு நலம் தரும் பொருட்டு! மனிதர்கள் மேல் பாசம் இல்லாவிட்டால் வேதம் கூட பிறந்திருக்காது. வேதம் பற்றிய பாரதியின் சிந்தனையை தனது குரலில் ஒலித்த ஜேகே இன் குறிப்புகளை இத்துடன் நிறுத்திக் கொண்டு தமிழ் சினிமாவில் மகாகவியின் பாடல்கள் சிலவற்றை பார்ப்போம். சில ஆண்டுகள் பின்னோக்கி செல்வோம்.

1935இல் டிகேஎஸ் சகோதரர்களின் மேடை நாடகமான "மேனகா" ராஜா சாண்டோ அல்லது இயக்கத்தில் திரைப்படமாயிற்று. இப்படத்தில் பாரதியார் எழுதிய
"வாழ்க நிரந்தரம்
வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே" எனும் தமிழ் மொழி வாழ்த்து பாடல் இடம் பெற்றிருந்தது.

அடுத்து 1947 இல் வெளியான ஏவிஎம்மின் தயாரிப்பான "நாம் இருவர்" படத்தில் இடம்பெற்ற "ஆடுவோமே பள்ளு பாடுவோமே" பாடல் வெளிவருவதற்கு முன்பே இதே பாடல் 1939இல் கவிஞர் ச து சு யோகியார் இயக்கிய "அதி'டம்" படத்தில் இடம்பெற்றதையும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

1940 இல் வெளியான "மாடர்ன் தியேட்டர்ஸாரின்" தயாரிப்பான "உத்தமபுத்திரன்" படத்தில் பிரபல நடிகரும் பாடகருமான பி யு சின்னப்பா அவர்கள் "மஹாகவி"யின் "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே..." பாடலை பாடி நடித்திருந்தார். 1948 ல் டி.கே.எஸ் சகோதரர்கள் தயாரிப்பான "பில்ஹணன்" படத்தில் "மகாகவி"யின் "தூண்டிற் புழுவினைப் போல்..." என ஆரம்பிக்கும் பாடலை சேர்ந்திருந்தார்கள். ஆனால் இப்பாடலுக்கு உரிமை கொண்டாடிய ஏவிஎம் நிறுவனம் பாடல் இடம்பெறாதவாறு வழக்கு தொடுத்து இருந்தது.

நான் ஆரம்பத்தில் எழுதியவாறு, பாரதி திரைப்பட பாடல்களாக நினைத்து தனது கவிதைகளை எழுதவில்லை. அவை முழுமையான யாப்பு இலக்கணத்துடன் பொருந்திய முழுமையான கவிதைகளாகும். அவை திரைப்பட இசையமைப்பாளர்கள் விரும்பும் தாளகதி, சந்தங்களுடன் இருப்பதும் உணர்ச்சிமிக்க சொற்களில் லயம் மிகுந்திருப்பதும் தான், அவரது கவிதைகளை நாடச் செய்திருக்கின்றன.

திரைப்படத்தின் காட்சிக்குத் தேவையான நவரசங்களையும் வெளிப்படுத்தும் பாடல் வரிகள், பாரதியின் கவிதைகளில் செறிந்துருப்பதும்தான் அவை திரைப்படங்களிலும் வெற்றிகரமாக பாவிக்கப்பட்டன.

உதாரணமாக 1994 களில் "உலக நாயகன்" கமலஹாசன் நாயகனாக நடித்து வெளிவந்த திரைப்படமான "மகாநதியில்" ரௌத்திரம் பொங்கும் குரலில் பாரதி கவிதை வரிகளை வசனகவிதை பேசுவதை குறிப்பிடலாம்.
பாரதியின் "யோக சக்தி"யில் மாகாளியிடம் வரம் கேட்டல் வரிசையில்..

"தேடிச் சோறு நிதந்தின்று - பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்
வாடித் துன்பம்மிக உழன்று, ஆகிய மூன்று வரிகளையும் விட்டு விட்டு "பிறர் வாடப் பல செயல்கள் செய்து,
நரை கூடிக் கிழப்பருவம் எய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ?
கமல் மேலும் தொடர்கிறார்..

"நின்னைச் சில வரங்கள் கேட்பேன் - அவை
நேரே இன்றெனக்குத் தருவாய் - என்றன்
முன்னைத் தீயவினைப் பயன்கள் - இன்னும்
மூளா தழிந்திடுதல் வேண்டும் - இனி
என்னைப் புதிய உயிராக்கி - எனக்
ஏதுங் கவலையறச் செய்து - மதி
தன்னை மிகத் தெளிவு செய்து - என்றும்
சந்தோ'ம் கொண்டிருக்கச் செய்வாய்"
என பாரதியை மானசீகமாக நெஞ்சில் நிறுத்தி பேசுவார் அல்ல வசனகவிதை சொல்வார்.

அடுத்து "பாரதியும் கண்ணதாசனும்", எவ்விதம் ஒத்த சிந்தனை உடையவராகத் திகழ்ந்தார்கள் என சிந்திக்கத் தோன்றியது.

அச்சிந்தனையின் வெளிப்பாடாக "முதுமையில் காதல்" மனம் ஒத்த தம்பதிகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை முதலில் பாவேந்தர் பாடிய "முதியோர் காதல்" சிறப்பு நினைவூட்டி விட்டு, கவியரசு, மகாகவியின் பாடல் வரிகளை எடுத்து என்ன ரசவாதம் செய்துள்ளார் என்பது பற்றி பார்ப்போம்.

இதோ "பாவேந்தர்" பாரதிதாசனாரின் "முதியோர் காதல்" கவிதை வரிகள் -

"புதுமலர் அல்ல காய்ந்த
கொழுக்கட்டை அவள் உடம்பு
சதிராடும் நடையாள் அல்லள்
தள்ளாடி விழும் மூதாட்டி
மதியல்ல முகம் அவட்கு
வறள்நிலம் குழிகள் கண்கள்
எது எனக்கு இன்பம் நல்கும்
இருக்கின்றாள் என்பதொன்றே!

அறம் செய்த கையும் ஓயும்,
மக்களை என்பால் தூக்கிப்
புறம் போன காலும் ஓயும்,
செந்தமிழ்ப் புலவர் சொல்லின்
திறம் கேட்ட காதும் ஓயும்,
செயல் கண்ட கண்ணும் ஓயும்,
மறவனை சுமக்கும் என்றன்
மனம் மட்டும் ஓய்தலில்லை!

அப்படியே அதே உணர்வுடன் "வியட்நாம் வீடு" (1970) பிரஸ்டீஸ் பத்மநாதன் அய்யர், சாவித்திரி (சிவாஜி - பத்மினி) தம்பதிகள் இருவரும் முதுமையில் காணும் துயரின்பத்தை பாரதியின் இரு வரிகளை கொண்டு கவியரசு செய்த கவிதை இன்பத்தை கேளுங்கள்.

"உன் கண்ணில் நீர் வழிந்தால் - என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி!
என் கண்ணில் பாவையன்றோ - கண்ணம்மா
என்னுயிர் நின்னதன்றோ! இது பாரதி பாடியது.

தொடரும் கண்ணதாசன் வரிகளை மீண்டும் நீங்கள் கேட்டு அனுபவியுங்கள். அடுத்த இதழில் "மகாகவியின்" 16 பாடல்களுக்கு பிரபல இசையமைப்பாளர்கள் எஸ். வைத்தியநாதன் மெட்டமைத்து இசையமைத்த படம் எது?


*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 48)*




## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

முதல் மந்திரி 'அரசே இவள் கரையான் மகள் மந்தாகினி இவள் இறக்கவில்லை நான் தான் குற்றவாழி என்னை மன்னித்து விடுங்கள். இவள் இறந்துவிட்டதால் உங்கள் மனம் மிக வேதனை அடைந்திருக்கிறது என்று தெரிந்து இவளை இங்கு அழைத்து வந்து, உங்கள் மன வேதனையை போக்கலாம் என்று எண்ணினேன. இந்தக் குற்றத்துக்கு நான் மட்டும் பொறுப்பல்ல! இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு மந்தாகினி தேவியே தான் உயிரோடு இருப்பதைச் சக்கரவர்த்திக்கு சொல்ல வேண்டாம் என்று சத்தியம் கோரினார் அவரிடமே அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்' என்றார். குந்தவை மந்தாகினியை அழைத்துக் கொண்டு சென்றாள். வானதியும் பூங்குழலியும் அவளுடன் சென்றனர். பின்னர் சக்கரவர்த்தி முதல் மந்திரியிடம் 'இவளை அழைத்து வந்தீர்கள் எப்பொழுது திருப்பி அனுப்புவதாக உத்தேசித்துள்ளீர்கள்' என வினவினார். 'ஐயா அவளை என் அரண்மனையிலேயே வைத்து என் சகோதரி போல் பாதுகாப்பேன்' என்றார் முதல் மந்திரி. சக்கரவர்த்தியோ 'கேளுங்கள் அன்று அவளை நேசித்தேன் ஆனால் இப்பொழுது முற்றிலும் நிலைமை மாறி துவேசம் தலை தூக்கிவிட்டது அதனால் அவளை உடனடியாக அனுப்பிவிடுங்கள்' என்றார். அதைக் கேட்ட முதல் மந்திரி 'அரசே அருள்மொழி வரும் வரையாவது மந்தாகினி தேவி இங்கு தங்க அனுமதி தாருங்கள்' என்றார். அவ்வேளை குந்தவை மந்தாகினியை மீண்டும் அழைத்துக் கொண்டு வந்தார். குந்தவையின் அலங்காரத்தால் மந்தாகினி மிக அழகாகக் காட்சி தந்தார். அனைவரின் வேண்டுகளின் படி சக்கரவர்த்தியும் அவள் தங்குவதற்கு அனுமதி வழங்கிவிட்டு அநிருத்தரிடம் 'உடனே அருள்மொழியை அழைத்து வர ஆள் அனுப்புங்கள்' என்றார். அரசே அருள்மொழி இங்கு பகிரங்கமாக வந்தால் சனங்கள் கொதித்தெழுந்து பழுவேட்டரையர்களுக்கும், மதுராந்தகருக்கும் எதிராக நின்று அருள்மொழிக்கே பட்டம் கட்டிவிடுவார்கள் அது நிச்சயமாக நடக்கும் பெரிய பழுவேட்டரையரும் சிற்றரசர்கள் சிலரும் சோழ நாட்டை இரண்டாகப் பிரித்து மதுராந்தகருக்கு ஒரு பகுதியையும், கரிகாலருக்கு மறு பகுதியையும் கொடுக்க திட்டம் போடுகிறார்கள் அதற்கு பளுவூர் ராணியும் முதல் காரணம் அதனை விட பாண்டிய ஆபத்துதவிகளுடன் அவள் கூட்டு வைத்துள்ளாள். இவர்களுக்கு தேவையான பணம் கூட தஞ்சை பொக்கிஷ அறையில் இருந்துதான் போகிறது இதனை திருமலை நேரடியாகப் பார்த்தான். இதற்கு தாங்கள் என்ன திட்டம் வகுக்கலாம் என்று எண்ணுகிறீர்கள் என்று கேட்க, 'நிறுத்துங்கள் பளுவூர் வம்சத்தார் நூறாண்டு காலமாக சோழ குலத்திற்கு தொண்டு செய்து வந்தார்கள். பெரிய பழுவேட்டரையர் இருபத்தினான்கு போர்களில் போரிட்டு அறுபத்துநான்கு புண்களைச் சுமந்தவர். அவர் சோழ குலத்தாருக்கு எதிராக சதி செய்கிறாரா? சோழ ராஜ்ஜியத்தை இரண்டாகப் பிரிப்பது என்பது நான் உயிருடன் இருக்கும் வரை நடக்காத காரியம் ஆனால் அவர்கள் விருப்பப்படி மதுராந்தகருக்கு உரிமை உண்டு நானும் மனமுவந்து மகா சிவபக்தனான கண்டராதித்தர் புதல்வருக்கு பட்டம் கட்ட விரும்புகிறேன்' என்றார் சக்கரவர்த்தி. அநிருத்தர் 'அரசே தாங்கள் விரும்பியபடி பழுவேட்டரையரும் விரும்பலாம் ஆனால் செம்பியன் மாதேவி தன் மகனுக்கு பட்டம் கட்ட விரும்பவில்லை மகான் கண்டராரித்தர் தமது தர்மபத்தினிக்கு அவ்வாறு கட்டளை இட்டுச் சென்றுள்ளார். அவருடைய மரணத் தருவாயில் நான் அவர் அருகில் இருந்தேன் மதுராந்தகருக்கு பட்டம் கட்டக் கூடாது என்பதற்கு முக்கிய காரணம் உண்டு என்பது தன் துணைவியாருக்குத் தெரியும்' என அநிருத்தர் கூற, இதைக் கேட்ட சக்கரவர்த்தி 'உனது சீடனை அருள்மொழியை அழைத்து வர அனுப்பும் நீ செம்பியன் மாதேவியிடம் சென்று அவரை உடனே அழைத்து வாரும் எப்பேர்ப்பட்ட தடையாயிருந்தாலும் அதை நான் நிவர்த்தி செய்கிறேன்' என்றார்.

அவ்வேளை குந்தவை 'அரசே எல்லாக் காரியங்களும் சரிவர நடக்கும் தாங்கள் நிம்மதியாக இருக்கலாம்' என்று கூறி விடை பெற்றாள். அப்பொழுது 'சுவாமி என் அத்தை பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை இனி நான் கோடிக்கரை புறப்படலாம் அல்லவா?' என்று கேட்டாள் பூங்குழலி அதற்கு சக்ககரவர்த்தி 'பெண்ணே இங்கு சில நாட்கள் தங்கிவிட்டுப் போ நீ செய்த மாபெரும் உதவிக்கு என்ன பரிசு வேண்டும் என்று சொல்' என்றார். அரசரை அமைதியாகத் தூங்கவிட்டுவிட்டு அனைவரும் சென்றனர். அன்று சுந்தரசோழர் அமைதியாகத் தூங்கினார். அவர் அறைக்குப் பக்கத்து அறையில் குந்தவை, வானதி, பூங்குழலி, மந்தாகினி தேவி யாவரும் தூங்கினர். மந்தாகினியின் மனம் கலக்கமுற்று இருந்தது பொக்கிக்ஷ நிலவறையில் இருந்து வரும் சுரங்கப் பாதை இராவணன் சிற்பத்தில் முடிவடைகிறது. அந்தப் பாதையை அவள் மறந்து விட்டு பிரயாணப்பட அவளால் முடியவில்லை சதிகாரர் அந்த வழியாக வந்து சக்கரவர்த்திக்கு ஆபத்து விளைவிக்கப் போகிறார்கள் என்ற ஆதங்கத்தால் அவளால் தூங்கமுடியவில்லை. நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த பூங்குழலியை எழுப்பினாள் தன்னைப் பின் தொடருமாறு சைகை காட்டினாள் அருகில் இருந்த விளக்கை எடுத்துக் கொண்டு முன்னால் போனாள். அவள் அத்தை மீது கொண்ட பக்தியால் பூங்குழலியும் அவளைத் தொடர்ந்தாள். மந்தாகினி இராவணன் சிற்பத்தின் உள்ள சுரங்க வழியே இறங்கி புகுந்து சென்றாள். பூங்குழலியும் அவளைப் பின் தொடர்ந்து சென்றாள் அதிகாலை குந்தவை இவர்களைக் காணவில்லை என்ற திகைப்புடன் எல்லா இடங்களிலும் தேடினாள். பின்னர் அந்த செய்தியை சக்கரவத்தியிடம் சொன்னாள் அவரும் கவலையுடன் அவர்களைத் தொலைத்ததே நல்லது என்றார். கடம்பூர் மாளிகை ஆரவாரத்துடனும், ஆதித்தகரிகாலர் வெளிப்படையாகப் பேசும் சுபாவம் கொண்டதால் பதட்டமாகவும் இருந்தது. வந்தியத்தேவன் கடம்பூரில் சோழ குலத்திற்கு எதிராக நடக்கும் சூழ்ச்சிகளைப் பற்றி சொல்லியிருந்தான். இதனால் பட்டத்து இளவரசர் ஆதித்தகரிகாலர் இவற்றைப் பற்றியும், தான் வடதிசையின் மீது படை எடுத்துச் செல்ல தடை போட்டிருப்பது பற்றியும் இவர்களிடம் பேசியே ஆக வேண்டும் என்று முடிவு கொண்டான். பெரிய பழுவேட்டரையர், சம்புவரையர், கந்தமாறன், பாத்திபேந்திரன், வந்தியத்தேவன் அனைவரும் ஒன்று கூடியிருந்தனர். அப்போது கரிகாலன் ஆரம்பித்தான். 'பழுவூர் பாட்டனாரே சம்புவரையர் மாமனாரே சிறு பிள்ளையாகிய நான் உங்களிடம் ஒரு யோசனை கேட்க இங்கு வந்தேன். என் தந்தை என்னை பட்டத்து இளவரசராக முடி சூட்டினார் நீங்களும் அதற்கு சம்மதித்தீர்கள் இப்பொழுது மதுராந்தகருக்கு முடி சூட விரும்புகிறார். ஆனால் என் பாட்டனார் திருக்கோவிலூர் மலையமானுக்கு இதில் உடன்பாடு இல்லை. என் தந்தை செய்வது நியாயமா' என்று கேட்க பெரிய பழுவேட்டரையர் 'சக்கரவர்த்தியின் கட்டளைக்கு அனுசரித்துப் போவது தான் எம் கடமை ஆனால் குமரி முனையில் இருந்து கிருகதனை நதி வரை பரந்து கிடக்கும் இந்த சோழ ராஜ்ஜியத்தை பிரித்து கொள்ளிட நதிக்கு தெற்கே உள்ள ராஜ்ஜியத்தை மதுராந்தகருக்கும், வடக்கே உள்ள பகுதியை தாங்களும் பகிர்ந்து ஆள்வது நன்மை பயக்கும். சோழ ராஜ்ஜியத்தின் மீது மதுராந்தகருக்கு உரிமையும் உண்டு இதற்கு ஒப்புக் கொண்டால் சக்கரவர்த்தியின் சம்மதம் பெறுவது என் பொறுப்பு' என்றார். ஆதித்தகரிகாலர் மிக்க கோபம் கொண்டார் இருந்தும் 'என் முடிவைக் கேளுங்கள் என் குலத்து முன்னோர்களும் உங்கள் முன்னோர்களும் ஐந்து தலைமுறையாகப் பாடுபட்டு எத்தனையோ வீராதி வீரர்களைப் பலி கொடுத்து உருவாக்கிய இந்த ராஜ்ஜியத்தை இரண்டாகப் பிரிப்பது எத்தனை கொடுமை இதனால் ராஜ்ஜியம் முழவதையும் மதுராந்தகருக்கே கொடுக்க நான் ஆயத்தமாக இருக்கிறேன். தந்தைக்குப் பிறகு மகன் அரசாளும் உரிமை பெற்றவன் என்ற வகையிலும் பட்டங்கட்டப்பட்ட இளவரசர் என்ற முறையிலும் எனக்கு ராஜ்ஜியத்தை ஆள முழு உரிமையும் உண்டு. ஆனாலும் அதை நான் விட்டுக் கொடுக்கிறேன் எனக்கு ஒரு நிபந்தனை உண்டு அதாவது நான் வட திசையின் மீது படை எடுத்துப் போக மூவாயிரம் போர் வீரர்கள் கொண்ட படையும், அதற்கு தேவையான அனைத்தும் தந்திடல் வேண்டும் இதைப் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?' என்றான் கரிகாலன். இதைக் கேட்ட பழுவேட்டடரையர் பதில் சொல்ல வழி தெரியாது திகைத்து நின்றார். எங்கள் சதி பற்றி எப்படி அறிந்தான் எவ்வளவு தெளிவாக இருக்கிறான் பதில் சொல்ல வேண்டிய இடத்தில் நான் இருக்கிறேன் என்று உணர்ந்து 'கோமகனே அதிசயம் அதிசயம் தங்கள் விருப்பத்திற்கு நான் சம்மதிக்கலாம் மதுராந்தகன் சம்மதம் வேண்டும் சக்கரவர்த்தியின் ஆசி வேண்டும் அதனால் நாம் தஞ்சை புறப்படலாம் அல்லவா?' என்றார். 'பாட்டா என் தந்தை தாய் நான் முடி துறப்பதை விரும்பமாட்டார்கள் அவர்கள் விருப்பத்தை மீறுவது கடினம் அதனால் தாங்கள் மதுராந்தகரை அழைத்து வாருங்கள் கடம்பூரில் தீர்மானம் நிறைவேற்றுவோம் பின்னர் நான் தேசாந்திரம் செல்லும் போது அவர்களிடம் சென்று விடை பெறுகிறேன். நான் கட்டிய பொன் மாளிகையில் அவர்களை இருக்கச் செய்துவிட்டு போவேன் பாட்டா தஞ்சை புறப்படுங்கள். மதுராந்தகரை யானை மீது அழைத்து வாருங்கள். நாம் வேட்டைக்குப் புறப்படுவோம் கந்தமாறா, பாத்திபேந்திரா, வந்தியத்தேவா கிளம்புங்கள் வீரநாராயண ஏரியின் மேற்கு கரையில் இருக்கும் காடு தண்ட காரண்யம் செல்வோம்' என்றான். அனைவரும் சம்மதம் செய்தனர். பழுவேட்டரையர் நந்தினியின் அந்தப்புரம் சென்றார். இது என்ன கடம்பூர் மானிகையில் ஆதித்தகரிகாலரை அடக்கி ஆள வேண்டும் என்று எண்ணி இங்கு வந்தேன் எனக்கும் சம்புவரையருக்கும் அவன் கட்டுப்பட்டே தீர வேண்டும் என்று நம்பினேன். சோழ நாடு முழவதும் மதுராந்தகர் ஆள்வது மிகக் கடினம் அதைக் கேட்டாலே வடக்கே மலையமானும், தெற்கே கொடும்பாணார் வேளாளரும் விரோதமாக இருப்பார்கள் கரிகாலனும் அவர்களுடன் சேர்ந்து கொள்வான். உள்நாட்டு யுத்தம் தான் மூழும் பொது மக்களும் சுந்தர சோழர் மக்களின் பக்கந்தான் மதுராந்தகரின் அன்னை செம்பியன் மாதேவியும் அவர்கள் பக்கம் நாம் எப்படி இவர்களை வெல்வது? அதனால் பாதி ராஜ்ஜியம் என்றே முதல் முடிவாகட்டும் பின்னர் முழவதையும் மதுராந்தகருக்கு ஆக்கிவிடலாம் என்று முடிவு செய்தோம் ஆனால் கரிகாலர் அடங்குவதுக்குப் பதிலாக பெரியவர்களை அடக்கியல்லவா நடந்து கொண்டான்! சம்புவரையரும் மௌனமாக இருக்கிறார் நான் இளையராணியையும் அழைத்துக் கொண்டு தஞ்சை சென்று, என் தம்பி சின்னப் பழுவேட்டரையருடன் ஆலோசித்து, அவனை படை திரட்டி ஆயத்தம் செய்யுமாறு கூறிவிட்டு, மதுராந்தகரை அழைத்து வருவது நல்லது என்று தனக்குள் பேசிக் கொண்டார் பழுவேட்டரையர். நந்தினியின் அந்தப்புரம் வந்தார். நந்தினியிடம் நடந்த பேச்சு வார்த்தை பற்றி கூறினார். தஞ்சை புறப்பட ஆயத்தம் செய்யச் சொன்னார் இதைக் கேட்ட நந்தினி மறுத்தாள். 'அந்த கர்வம் பிடித்த கரிகாலருக்கு புத்தி கற்பிக்க வேண்டும் அவனின் பரிகாசப் பேச்சுக்கு உங்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும். அல்லது உங்கள் வாக்கிற்கு இசைய வேண்டும் அது வரை நான் தஞ்சை வரப்போவதில்லை' என்றாள் நந்தினி.




*தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன


---

# *விழைவதில் பிழையுமுண்டோ!*

**- கவிஞர் தியாரூ**

*வலைதனில் சிக்கிய மீன்களுக் கெல்லாம்*
*விடுதலை வழங்கிட வேண்டும்!*
*இலையுதிர் காலத்தில் மரங்களுக் கெல்லாம்*
*பொன்னாடை கொடுத்திட வேண்டும்!*
*அலைகளின் தேடுதல் என்னென்ன என்று*
*அறிந்துநான் உதவிட வேண்டும்!*
*சிலைகளாய் நீள்நெடுங் காலமாய் நிற்கும்*
*சிலைகளுக்(கு) உயிர்தர வேண்டும்!*

*மண்சிறு குடில்களில் ஏங்குவோர்க் கெல்லாம்*
*மாளிகை நான்தர வேண்டும்!*
*கண்ணிழந் தாடிடும் கயவருக் கெல்லாம்*
*காலனாய் நான்வர வேண்டும்!*
*விண்ணுயர் ஆலயம் கோயில்கள் யாவும்*
*வறியோர்க்கு வீடாக வேண்டும்!*
*புண்ணிலா வாழ்வென மானுடம் ஓங்க*
*பெரும்பணி நான்செய வேண்டும்!*



*கானலும் என்விழித் தீண்டலில் நல்ல*
*கங்கையாய் மாறிட வேண்டும்!*
*கூனலும் கோணலும் என்னொரு சொல்லில்*
*குறைநீங்கிச் சீர்பெற வேண்டும்!*
*வானமும் பூமியும் என்கவி கேட்க*
*வாய்பார்த்து நின்றிட வேண்டும்!*
*ஞானமும் கானமும் செல்வமென் றாக*
*ஞாலமே கைகூப்ப வேண்டும்!*

*வற்றிய ஓடையின் தாகத்தைத் தீர்க்கும்*
*வான்மழை நானாக வேண்டும்!*
*பற்றிய சொந்தங்கள் யாவர்க்கும் நானோர்*
*பந்தலென் றாகிட வேண்டும்!*
*கற்றவை பெற்றவை யாவுமே ஞானக்*
*கலைகளாய்ப் பொலிந்திட வேண்டும்!*
*கொற்றவன் கோலென மாகவி என்றன்*
*எழுதுகோல் அரசாள வேண்டும்!*

## 30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

### ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.




Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோ கிடைக்கும்.



தேன் நெல்லி



பனங்கருப்பட்டி







காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

## SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8

Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

மொன்றியல் நகரில் UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளுர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 416-291-0005
www.iselldreamcondos.ca www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

LOOKING FOR YOUR Dream House?
Call SEYON CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
RE/MAX ROYAL PROPERTIES
BUYING
SELLING
INVESTING

உதயம் 1354 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 18, 2022

# ஐம்பது வருடங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டின் 'வானம்பாடிகள்' இலக்கிய குழுவினர் வழிகாட்டலில் தங்களை கவிஞர்களாக அடையாளப்படுத்தியவர்கள் மிக அதிகம்

## விழுப்புரம் நகரில் இடம்பெற்ற 'அத்தியூர் விஜயா' நூல் வெளியீட்டு விழாவில் உதயன் லோகேந்திரலிங்கம் தெரிவிப்பு



*- (சென்னையிலிருந்து அருண் கதாகரன்)*

ஐம்பது வருடங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டின் 'வானம்பாடிகள்' இலக்கிய குழுவி-னர் வழிகாட்டலில் தங்களை கவிஞர்களாக அடையாளப்படுத்தியவர்களில் பலர் இன்றும் எழுதிக்கொண்டிருகின்றார்கள். அவர்களில் நானும் ஒருவன் என்தை இங்கு கூடியிருக்கின்றவர்களோடு பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். அன்றைய இலக்கிய ஈடுபாடும் அக்கறையும் தற்போதைய இலக்கியவாதிகளிடம் இல்லாத ஒன்றாகிவிட்டது. பல இலக்கியவாதிகளுக்கு 'தலைக்கனம்' அதிகமாகி விட்டது. தங்களை மட்டுமே உயர்த்திக் கொள்வதில் ஆர்வம் கொண்டவர்களாக காணப்படுகின்றார்கள்.

*(தொடர்ச்சி உள்ளே 26ம் பக்கத்தில்)*

# ஸ்கார்பரோ நகரில் அமையவுள்ள முதலாவது மருத்துவ பீடம்



ஸ்கார்பரோவில் அமையவுள்ள முதல் மருத்துவப் பீடம் மருத்துவர் ஆக வேண்டும் என்ற பல மாணவர்களின் கனவை நனவாக்கவுள்ளது.


ஸ்கார்பரோவில் முதல் மருத்துவப் பீடம் அமையவுள்ளதை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறேன் என எமது மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் விஜேய் தணிகாசலம் அறிவித்துள்ளார்.

ஒன்றாரியோ அரசாங்கம், டொராண்டோ ஸ்கார்பரோவில் மருத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த ஆரோக்கியத்திற்கான புதிய பல்கலைக்கழகம் அமையவுள்ளதை அறிவித்துள்ளது. அங்கு 30 இளங்கலை இடங்களையும் 45 முதுகலை நிலைகளையும் கொண்ட மருத்துவ பீடம் எமக்காக நிறுவப்பட உள்ளது என்றும் விஜேய் தணிகாசலம் அறிவித்துள்ளார்.

*(தொடர்ச்சி உள்ளே 4ம் பக்கத்தில்)*

# பேச்சுவார்த்தைகளும் பேரினவாத அரசுகளும்

## – உள்ளே திருமலை நவம் எழுதும் கட்டுரை





கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்குமிடையில் கடந்த 15 ஆம் திகதி நடைபெறவிருந்த பேச்சுவார்த்தை தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர்வரும் மார்ச் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடுகளை கண்டித்து எதிர்க்கட்சியினர் முன்னெடுத்த ஆர்ப்பாட்டம் காரணமாக இச்சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக இருதாரப்பினருக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெறும் நடைபெறும் என்று எதிர்பார்த்தபோதும் அது நடைபெறவில்லை. ஜனாதிபதி கோத்தபாயாவின் அழைப்புக்கா தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு காத்திருந்த நாட்கள் அதிகம். *(தொடர்ச்சி உள்ளே 23ம் பக்கத்தில்)*

# தமிழ்த் தலைமைகளுக்கு இன்று மீட்பரும் மேய்ப்பரும் இந்தியாதான்

## – கொழும்பில் இருந்து மூத்த ஊடகவியலாளர் வி.தேவராஜ் எழுதும் கட்டுரை



13 வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல் அதற்கு அப்பால் அதிகாரப்பகிர்வு தொடர்பாக ஆறு தமிழ்க் கட்சிகள் இந்தியாவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளன. தமிழர் தரப்பைப் பொறுத்து இதனைத்தவிற வேறு தெரிவு ஏதும் தற்போது இருப்பதாகத் தெரியவில்லை. மனித உரிமைப் பேர-வையில் இந்தியாவின் பதில் இதற்குச் சாதகமானதா-கவே உள்ளது.இது ஆறு தமிழ்க் கட்சிகளுக்குக் கிடைத்த வெற்றியாகவே கருத வேண்டியுள்ளது. இலங்கை இந்திய ஒப்பந்தம்

தமிழர்களின் அரசியல் பரப்பில் 13 வது அரசியலமைப்பு திருத்தம் குறித்து இன்று பரவலாகப் பேசப்படுகின்றது. குறிப்பாக ஆறு தமிழ்க் கடசிகள் கூட்டாக இந்திய மத்திய அரசாங்கத்திடம் வைத்துள்ள கோரிக்கை குறித்தே இந்தக் கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன. *(தொடர்ச்சி 11ம் உள்ளே பக்கத்தில்)*

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கி போராட்டத்தையும் ஏக்கங்களையும் திசை திருப்ப அரசாங்கம் முயற்சிக்கின்றது

## மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா



இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது அரசினால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குவதாக அரசு தெரிவித்துள்ள கருத்தை வன்மையாக கண்டிப்பதோடு, 12 வருடங்களாக நாங்கள் ந்ட்ஈட்டை பெற்றுக் கொள்ள போராடவில்லை என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று வியாழக்கிழமை (17) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

*(தொடர்ச்சி உள்ளே 3ம் பக்கத்தில்)*

# பத்திரிகையாளர்களோடும் படைப்பிலக்கிலக்கியவாதிகளோடும் இணைந்து பயணிக்கும் சிறந்த சஞ்சிகையாளர் 'நந்தவனம் சந்திரசேகரன்' ஆவார்



"எனது நீண்ட கால பத்திரிகைத் துறை அனுபவத்தில் பல சஞ்சிகையாளர்களைச் சந்தித்துள்ளேன். அவ்வாறான பயணத்தில் சஞ்சிகையாளர்களோடும் பத்திரிகையாளர்களோடும் பழகுவதில் நான் ஆர்வத்தோடு செயலாற்றி வந்துள்ளேன். எனது பார்வையில் பத்திரிகையாளர்களோடும் படைப்பிலக்கிலக்கியவாதிகளோடும் இணைந்து பயணிக்கும் சிறந்த சஞ்சிகையாளர் 'நந்தவனம் சந்திரசேகரன்' தனித்துவம் பெற்றவராக விளங்குகின்றார் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமே இல்லை என்றே கூறுவேன்.""

இவ்வாறு கடந்த சனிக்கிழமையன்று சென்னை மாநகரில் நந்தவனம் பவுண்டேசன் நடத்திய சாதனைப் பெண்கள் விருது விழாவில் இலஙகைப் பத்திரிகையாளர் செந்தில்வேலவர் புகழாரம் சூட்டி மகிழ்ந்தார். மேற்படி விழாவில் கனடா உதயன் பத்திரிகையாளரும் கவிஞருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களும் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பெறறிருந்தார்.

*(தொடர்ச்சி உள்ளே 20ம் பக்கத்தில்)*

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின்
உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H. Selvanayagam
Broker